

கருட புராணம்
கே.வி. குணசேகரம்



சிவமகா புராணம்
கே. வி. குணசேகரம்



ஸ்ரீ விஷ்ணு புராணம்



ஸ்ரீ தேவி பாகவதம்
கே.வி. குணசேகரம்


நால்வர் வரலாறு
தமிழறிஞர் கே.வி. குணசேகரம்




திருவிளையாடற்புராணம்
தமிழறிஞர் கே.வி. குணசேகரம்


திருக்குறள் உரை
கதை (நாவல்) வடிவில்


திருவெம்பாவை கதைவடிவில்


திருசதகம் கதைவடிவில்



## என்னுரை

**மு**ற்பிறப்பில் செய்த பாவ புண்ணியங்களுக்கேற்ப இப்பிறப்பு வழங்கப்பட்டுள்ளதென்றும் கிடைத்தற்கரிய இம் மானிடப்பிறப்பில் தானதருமங்களைச் செய்து சொர்க்கலோகத்தை அடைய வேண்டும் என்று மகாவிஷ்ணு சொல்கிறார். முன்பு இவர் அர்சுதனுக்குச் சொன்னது பகவத்கீதை. அது 700 சுலாகங்களைக் கொண்டது. அதன் கருத்திற்கேற்ப கதைகளாக 2010ஆம் ஆண்டு எழுதினேன்.

**இ**ப்பொழுது மகாவிஷ்ணு கருடனுக்குக் கூறிய கருடபுராணத்தை எழுதியுள்ளேன். பகவத்கீதை தர்மத்தை உபதேசிக்கிறது. தர்மம் எதுவென்று தெரியாது யுத்தகளத்திற்குச் சென்று அங்கு பாசமேலீட்டால் மனம் குழம்பிப் போர் செய்ய மாட்டேன் என்று கூறிய

அர்சுனனுக்குத் தர்ம உபதேசம் செய்து நீதியை நிலைநாட்டியது போல, மகாவிஷ்ணு மனித மேம்பாட்டிற்காகக் கருடனுக்கு உபதேசித்த தர்மம்தான் கருடபுராணம்.

**க**ருடபுராணத்தில் ஒவ்வொரு மனிதரும் செய்யும் பாவங்களும் அதற்கான தண்டனைகளும் கூறப்பட்டுள்ளன. ஆனால் செய்த பாவங்களுக்கான தண்டனைகளில் இருந்து தப்புவதற்கான வழிவகைகளும் கூறப்பட்டுள்ளன. பாவம் செய்வதை விட, பாவம் என்று அறிந்து செய்வதும், திட்டமிட்டுச் செய்வதும், தொடர்ந்து செய்வதும் தான் மகாபாவங்களாகும். தான் செய்தது பாவம் என்று பாவம் செய்தவர் உணர்ந்து வருந்தினாரேயானால் செய்த பாவத்தில் பெரும்பகுதி கழிந்துவிடும். தான் செய்தது பாவம் அல்ல என்று நினைப்பதும், வாதிடுவதும் பாவத்திலிருந்து நீங்க முடியாத தன்மையை உண்டுபண்ணும். இன்று அதைத் தான் பலரும் செய்கின்றனர்.

**பா**வம் செய்தவர்கள் அதை அனுபவித்தே தீரவேண்டும் என்று ஆரம்பத்தில் கருட புராணம் கூறும்போது மனதிற்கு ஆறுதலாக இருந்தது. பின் தானதர்மங்கள் மூலம் அவற்றை நீக்கலாம் என்றிருந்தபோது வேதனையாக இருக்கிறது. தீயவர்கள் தீயவற்றையே நினைத்து தீயவற்றையே திட்டமிட்டுச் செய்வார்கள். தமது செயல் வெற்றிபெற பணம், பொருள் தேவைக்கேற்ப எதையும் கொடுத்துத் தனது செயல்களை வெற்றிகரமாக முடிப்பர். பின் அப்பாவம்தீரத் தானதருமங்கள் உதவுமனால் வசதியானவர்கள் எதையும் செய்யலாம்தானே.

**ஒ**ருவர் செய்த பாவங்கள் அவருக்குத் தீயவற்றைக் கொடுத்து வேதனைப்படுத்தும். அவர் செய்த புண்ணியம் அவரை மேன்மைப்படுத்தும். அதன்படி நான் செய்த பாவங்களைத் தான் பதினைந்து வருடங்கள் நாவலர் வித்தியாலயத்தில் அதிபராக இருந்து வேதனைப்பட வைத்தது. நான் செய்த புண்ணியம் இலங்கையில் கல்வியில் முதன்மைக் கோட்டமாக விளங்கும் நல்லூர்க் கல்விக் கோட்டக்கல்வி பணிப்பாளராக்கி இன்பத்தைத் தந்தது. நாவலர் வித்தியாலயத்தில் நடந்த சம்பவங்களெல்லாம் துன்பமானவை என்று இப்போது தெரிகிறது. எனக்கு நேர்ந்த துன்பங்கள் துயரங்கள் பற்றி எனது ஒவ்வொரு நூலிலும் எழுதுவேன். 2021ஆம் ஆண்டு ஆனி மாதத்துக்குள் ஆறு நூல்களை வெளியிட்டுள்ளேன். ஆறிலும் எனது துன்ப துயரங்கள் உண்டு.

**நா**ன் எழுதுபவை இரண்டாயிரம் ஆண்டுக்குப் பின்பும் நிலைத்திருந்து கதைபேசிக் கொண்டிருக்கும். ஏனென்றால் நான் எழுதியவற்றை இதுவரை யாரும் எழுதவில்லை. உதாரணமாக பகவத்கீதைக் கதைகள், திருவருட்பயன் கதைகள் போன்ற நூற்றுக்கு மேற்பட்ட சமயம், பழந்தமிழ் நூல்களுக்குக் கதைவடிவம் கொடுத்துள்ளேன். இதில் திருவாசகக் கதைகளும் அடங்கும்.

**ஆ**ச்சரியமான சில விடயங்கள் பாவமாகவும், புண்ணியமாகவும் இருக்கிறது. ஒரு வசதியானவர் நோயால் அல்லது கவனிக்காமையால் துன்பப்படும்போது அவருக்கு ஆறுதல் கூறுவது புண்ணியம். அதுபோலப் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு நல்லவற்றை அதாவது

பொய் சொல்லக் கூடாது, களவெடுக்கக் கூடாது, பெரியோரை மதிக்க வேண்டும் என்று தினமும் சொல்லி வளர்க்க வேண்டும். அப்படிச் சொல்லாவிட்டால் பெற்றோருக்குப் பாவம் ஏற்படும். ஆசிரியர்கள் தமது கடமைகளைச் செய்யாவிட்டால், மாணவர்களுக்கு நல்லுபதேசம் செய்யாவிட்டால் பாவம் உண்டாகும். இவ்வாறு சிறு சிறு விடயங்களைக் கூடக் கருடபுராணம் கவனத்தில் எடுத்துள்ளது.

**ஆ**னால் இது வைணவநூல். சைவமக்களுக்குப் பொருத்தாது. ஏனென்றால் உடலில் உள்ள உயிர் ஒருகணம் கூட உடலில்லாமல் (சட்டை) இராது. அதன் பாவபுண்ணியங்களுக்கேற்பப் பிறப்புக்கிடைத்து வருகிறது. அதற்கு நரகலோகம் பூமியில் உள்ள அதன் வீடாகும்.

**இ**த்தகைய புனிதமான தத்துவ நூலை மிகுந்த கவனத்துடன் கணினிமயப்படுத்தித் தந்த ஆரியன் கிரியேஷன்ஸ் நிறுவனத்துக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். மீண்டும் இன்னொரு நூலோடு சந்திப்போம்.

கே.வி. குணசேகரம்

கோட்டக்கல்விப் பணிப்பாளர் (ஓய்வு)

## முதலாம் பாகம்

### கருடனன் பெருமை

"**கா**ருடம் தர்சனம் புண்யம் தாதோ பித்வனி ருச்யதே" என்பது கருட தரிசனத்தைப் பற்றிக் கூறும் மகாவாக்கியமாகும். இதன்படி கருடனைக் காண்பதும், அவனது குரலைக் கேட்பதும் பெரும் புண்ணியமாகும். அன்றைய தினம் மகிழ்வுடன் கழியும். அதனால் தினமும் கருடனைத் தரிசித்து அதன் குரலைக் கேட்பதும் நன்று. அதைவிடக் கருடபுராணத்தில் உள்ள கருடனது வரலாற்றையும், பெருமையையும் வாசித்தறிபவர்கள் புண்ணியவான்களாவர். இவ்வாறு சௌந்தர்யலகரி என்ற நூல் கூறுகிறது.

**க**ருடனது தெய்வம் பிரகஸ்பதி. அதனால் கருடனை வணங்குவோர் பிரகஸ்பதியின் ஆழுகைக்குட்படுவர். குறிப்பாக கன்னிப்பெண்கள் முறைப்படி கருடனை ஆராதித்தால் அவர்கள் விரும்பிய பெருமைகள் உள்ள கணவன் வாய்ப்பான்.



**க**ருடன் தேவருலகம் சென்று அமுதகலசத்தை எடுத்து வரும்போது விஷ்ணுவின் இருப்பிடத்தில் தன்னை விடப் பலமடங்கு வலிமையுள்ள பல கருடர்களைக் கண்டார். அவர் அவர்களுடன் போர் செய்தபோது, "நான் நினைத்தால் பல கருடர்களை உருவாக்க முடியும். என்னை வென்றதாகப் பெருமை கொள்ளாதே. எல்லா வேளைகளிலும் நான் உன்னுள் இருந்து உன்னை இயக்குகிறேன்" என்று ஸ்ரீஹரி கூறியதாகக் கருடபுராணம் கூறுகிறது.

**க**ருடன் அமிர்த கலசத்தை எடுத்து வரும்போது அதன் அடியில் வைக்கப்பட்டிருந்த புல்லே விஸ்வாமித்ரம் என்கின்ற பெண் தர்ப்பமாகும். அப்புல்லில் அமிர்தம் சிந்தியதால் அதற்கு அமிர்த வீரயம் என்ற பெயர் உண்டானது.

**க**ருடனால் விழுங்கப்பட்டுப் பின் துப்பப்பட்ட வாலாசூரனது எலும்பத்துண்டுகளே கருடப்பச்சை என்று அழைக்கப்படும் மரகத ரத்தினங்களாகும். இந்த மரகத ரத்தினங்களை அணிபவர்களுக்கு அறிவு மேம்படும். புதன் கிரகத்தனால் ஏற்பட்ட தோசங்கள் யாவும் நீங்கும்.

**க**ண்ணன் துவாரகைக்கு வெளியே இருந்த காலங்களில், துவாரகைக்கு எவ்விதமான தீங்குகளும் வராமல் காத்தவர் கருடன். அத்துடன் மால்யவானோடு தாசாதியுத்தம் செய்யும் போது மால்யவானைத் தனது செட்டையால் அடித்துப் பலவீனப்படுத்தியது கருடன்.

இவ்வரலாற்றை உந்தரராமாயாணம் மிகவும் விரிவாகக் கூறுகிறது. இதைவிடக் கருடனது பெருமைகளை தியாகபிரமமும், நாராயணதீர்த்தரும் சொல்லியுள்ளனர்.

**இ**ரவில் பறவைகளுக்குப் பூமி தீப்பற்றி எரிவது போலத் தோன்றுவதால் பறவைகள் எவையும் இரவில் பூமிக்கு இறங்குவதில்லை. கருடனும் இரவில் பூமிக்கு வராது. எனினும் கோபங்கொண்டால் மட்டும் கருடன் இரவிலும் பூமிக்கு வரும். இவ்வமைப்புத் தஞ்சாவூரில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பு கருடன் பறப்பது போல இருப்பதால் அதைக் கருடபுரி என்று மக்கள் அழைக்கின்றனர்.

**ஆ**கம முறைப்படி நடைபெறும் கண்ணனது திருக்கோவில் கும்பாபிஷேகத்தின் போது கருடன் வாகனத்தில் கோபுர கலசத்திற்கு மேலாகப் பலமுறை வட்டமிட்டுப் பறப்பதை இன்றும் காணக்கூடியதாக உள்ளது.

**எ**ந்த ஒரு சுபநிகழ்வைத் தொடங்கு முன்பும் கருட சுலோகததைப் படித்தால் அச் சுபநிகழ்வு தடங்கள் ஏதுமின்றி நன்மை தருவதாக அமையும். கருடனின் நிழல்பட்ட நிலம் பெருவிளைச்சலைத் தரும். வெளியூர்களுக்குப் பயணம் செய்யுமுன் கருடனை வணங்கி, கருடசுலோகத்தைச் சொல்லிய பின் புறப்பட்டால் செல்லும் காரியம் இலகுவாக நடைபெறும்.

**ஸ்ரீ** விஷ்ணு சகஸ் நாமத்தில், 'எபர்ணோ வாயு வரஹன' என்ற சுலோகதின் வரி கண்ணனின் பெருமையோடு கருடனின் பெருமையையும் இணைத்துக் கூறுகிறது.

**ஹ**ர்சவர்த்தனர் தனது நாகானந்தம் என்ற நாடகநூலில் நான்காவது அங்கத்திலும், ஐந்தாவது அங்கத்திலும் நான்கு செய்யுள்களில் கருடனின் பலம், பெருமை, கருணை போன்றவற்றைச் சொல்லியிருக்கிறார்.

**அ**மெரிக்காவின் தேசிய பறவை கருடன். கருடனைச் செம்பருந்து என்றும் அழைப்பர். கருடனைத் தேசியப்பறவையாகக் கொண்டதால்தான் அமெரிக்கா வீரமுள்ள, செல்வம் கொளிக்கும் நாடானது என்று சொல்வாக்கும் உண்டு. கருடனது பிள்ளை சடாயு ஆவார்.

**க**ருடனின் பெயரான கார்க்கோடன் என்ற பெயரைச் சொன்னால் சனி விலகிவிடுவார். ஆட்டமத்துச் சனி, ஏழரைச்சனியின் பார்வையுள்ளோர் கருட சுலோகத்தைச் சொன்னால் அவற்றால் உண்டாகும் தோசங்கள் யாவும் நீங்குவதுடன், இன்பமான வாழ்வும் கிட்டும். கார்க்கோடனை மாலையாக அணிந்திருப்பவன் கருடன். அதனால் சனிதோசமுள்ளவர்கள் கார்க்கோடன் என்ற நாமத்தைப் பக்தி சிரத்தையுடன் உச்சரித்தல் வேண்டும். முன்னைய காலத்தில் கருடக்கிழங்கை திருஷ்டியால் வரும் தோசங்கள் நீங்கவும், விஷ ஜந்துக்கள் கடியாதிருக்கவும் வீட்டு வாசலில் கட்டிவைத்திருப்பார்.

கருடனைக் கருத்மான் என்று அழைத்தனர். பின் அது சுருங்கிக் கருடன் ஆயிற்று என்று மத்ஸ்ய புராணம் கூறுகிறது. கருத்மான் என்றால் தோல்வியில்லாத பெருவீரன் என்று பொருள் சொல்லப்பட்டுள்ளது.

மௌலியர்கள் கருடனை வீரத்தெய்வமாகவும், அதிர்ஷ்டத்தைத் தரும் தெய்வமாகவும் எண்ணிப் போற்றித் துதித்ததாக வரலாறு கூறுகிறது. குப்த அரசர்களான சமுத்திர குப்தனும், குமாரகுப்தனும் பொற்காசுகளில் கருடனைப் பதிப்பித்தனர். இதிலிருந்து தான் கருடமுத்திரை ஆரம்பிக்கப்பட்டது.

சந்திரகுப்த விக்கிரமாதித்தியன் என்ற குப்த மன்னன் தனது நாட்டில் செல்வவளம் பெருக வேண்டும் என்று நினைத்து ஒரு கருடகம்பத்தை நாட்டினான். அதனால் அவனது நாடு செழிப்புடைய நாடாயிற்று. அதனால் பல மன்னர்கள் தமது கொடியிலும், சின்னங்களிலும் கருடனைப் பொறித்தனர். தேவகிரி யாதவர்கள் தமது பொருட்களில் கருடனை முத்திரையாகப் பதித்தனர்.

கருடன் பறப்பதற்கு இடைஞ்சலாக இருந்த பேருமலையைத் தகர்த்தபோது அதலிருந்து இந்து சமுத்திரத்தில் உடைந்து விழுந்த துண்டே இலங்கைத்தீவு என்று சொல்லப்படுகிறது.



இந்தியாவில் மட்டுமின்றிப் பல உலக நாடுகளிலும் கருடன் வணங்கப்பட்டு வந்துள்ளமை அந்நாட்டு இலக்கியங்களில் இருந்து புலனாகிறது. கோமர் எழுதிய இலியட் என்ற ரோமானிய இலக்கியத்தில் கருடன் ஒரு பெரிய பாம்பைத் தூக்கியபடி வானத்தில் பறந்து செல்வதாகக் கூறப்பட்டுள்ளது. சில நாடுகளில் கருடன் ஒரு அதிஷ்ட தேவதையாகச் சித்தரிக்கப்படுகிறான்.

ஆழ்வார்கள் தமது பாசுரங்களால் திருமாலை ஆராதிக்கும் போது, அவரது வாகனமாக ஒரு கணம் கூடப்பிரியாது அருகில் இருக்கும் கருடனையும் புகழ்ந்து பாடுகின்றனர்.



சிறு சிறு விடயங்களைக் கூட ஆழ்வார்கள் பெரிதாக எண்ணிப் பாடுவதை நாம் பாசுரங்களில் காணலாம். பிருந்தாவனத்தில் சிறுவயதில் கண்ணன் விளையாடுகிறான். அவன் மீது சூரியனது வெப்பக் கதிர் படாதிருக்கும் வகையில் கருடன் தனது சிறகைக் குடைபோல விரித்து கண்ணன் விளையாடுமிடமெங்கும் மெல்லப் பறப்பதாகக் கோதை நாச்சியார் தனது பாசுரங்களில் கூறுகிறார்.

**சு**மங்கலிப் பெண்கள் தாமும் தமது குடும்பத்தினரும் நோய் நொடிகளின்றி இன்பமாக வாழ வேண்டும் என்று கருடனை வணங்கிக் கருடபஞ்சமியன்று விரதமிருக்கின்றனர். இதனால் தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் கருடன் துன்பங்களை விலக்கி இன்பமளிப்பான் என்று நம்புகின்றனர்.

**க**ருடனது பீஜாசரம் (கம்) சக்தி பீஜம் 'டம்' என்பன கருடனின் பெயரிலேயே இருக்கின்றன. பெருமாள் கேட்டவரம் தருவார். ஆனால் சிறிது தாமதமாகும். கருடனோடு சேர்த்துப் பெருமாளை வணங்கினால் உடனே கேட்டது கிடைக்கும் என்று பரிவதிலீசனைப் பதிகம் கூறுகிறது.

**வை**ணவர்கள் கருடனை கருடாழ்வார், பட்சிராஜா, பெரிய திருவடி, மகாவிஷ்ணுவின் வாகனம் என்று பெருமையுடனும், பக்தியுடனும் அழைப்பார்கள். "ஸுபர்ணோ வாயு வாஹன" என்ற விஷ்ணு சகஸ்நாம தோத்திரம் மகா விஷ்ணுக்கு இணையானவர் கருடன் எனக் கூறுகிறது.



**க**ருட பகவானுக்கு திருமால் உபதேசித்ததே கருட புராணமாகும். பின் இதைச் சூதமுனிவர் நைமிசாரண்ய முனிவர்களுக்கு உபதேசித்தார்.

**இ**ராமருக்கும் இராவணனுக்கும் நடைபெற்ற யுத்தத்தில் இராவணன் விடுத்த நாகபாசம் இராமனையும் இலக்குவனையும் கட்டியது. அப்போது கருடன் வெளிப்பட்டு இருவரையும் விடுவித்ததாக இராமாயாணம் கூறுகிறது.

**பா**ற்கடலைத் தேவர்களும் அசுரர்களும் கடைந்தபோது திருமாளின் கட்டளைப்படி கருடன் மந்தார மலையைத் தனது தோளில் தூக்கி வந்து பாற்கடலில் வைத்தார்.

**இ**த்தகைய பெருமைகளைக் கொண்ட கருடபுராணத்தை அமாவாசை, பௌர்ணமி, மாதப்பிறப்பு, கிரகணம் நிகழும் நாள் போன்றவற்றில் படித்தால் காரியத்தடைகள் அகலும், வாட்டிய துன்பங்கள் அற்றுப்போய்விடும். அறிவு வளரும், தனம் பெருகும், தோசங்கள், கஷ்டங்கள் யாவும் நீங்கும். ஆகையால் மகிழ்வான வாழ்க்கையைப் பெற விரும்பும் அன்பர்கள் கருடபுராணத்தைத் தவறாது படித்தல் வேண்டும்.

## 1. பிறப்பும் இறப்பும்



**அ**திகாலைவேளை நைமிசாரண்யத்து முனிவர்கள் பலர் வேத வியாசரின் சீடரான சூத முனிவரின் ஆச்சிரமத்திற்கு வந்தனர்.

**சூ**ரியோதயமாகிச் சில நிமிடங்கள் கழிந்தமையால் அவ் ஆச்சிரமத்தின் எழில் முழுமையாக அவர்களுக்குத் தெரிந்தது. அழகான ஆச்சிரமம் மரங்களின் கீழ் அமர்ந்திருந்தது. ஓமப்புகையின் நறுமணம் அவர்களின் மூக்கைத் துளைத்தது. பறைவைகளின் இனிமையான ஒலி காதில் ஒலித்தது. ஆச்சிரமத்தின் எழிலை ரசித்தவாறு முனிவர்கள் சூதமுனிவரின் வருகைக்காக காத்திருந்தனர்.

**மு**ன்பு பலமுறை அங்கு வந்தபோதும் இப்போது பார்த்தால் அது ஒரு புதிய இடம் போலக் காட்சியளித்தது.

**சூ**தமுனிவர் அங்கு வந்து நைமியசாரண்யத்து முனிவர்களைக் கனிவுடன் பார்த்து, "வாருங்கள். தாங்கள் வந்த விசயத்தைச் சொன்னால் தங்களுக்கான கோரிக்கைகளை நிறைவு செய்வேன்" என்றார்.

"**கு**ருவே, எமக்கு ஏதாவது சந்தேகமேற்பட்டால் தங்களிடம் வந்து அவற்றைச் சொல்லி விளக்கம் கேட்போம். முன்பு பிரம்மோத்தரபுராணம், சிவபுராணம், விஷ்ணுபுராணம் பற்றி நாம் எமக்குள் இருந்த சந்தேகங்களைக் கேட்டபோது, தாங்கள் மிகவும் விரிவாகவும், விளங்கக்கூடியதாகவும் சொன்னீர்கள். அவை மறக்கக்கூடியனவா…? எமது மனதில் இருந்து நினைக்கும் போதெல்லாம் தித்திக்கின்றது. அதுபோல இன்று எமக்கு ஒரு சந்தேகமேற்பட்டு வளர்ந்து எம்மைத் துன்புறுத்துகிறது. அதற்குச் சரியான விளக்கம் கேட்கவே நாம் தங்களை நாடி வந்தோம்" சூதமுனிவர் கண்களை மூடியபடி இருந்தார்.

"**கு**ருவே, உலகத்தில் பிறப்பும் இறப்பும் எதனால் ஏற்படுகின்றன?. உடலை விட்டுப் பிரிந்த உயிர் சொர்க்கத்தை அல்லது நரகத்தை அடையும் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அவை எதனால் சொர்க்கத்தையும், நரகத்தையும் அடைகின்றன?. பூவுலகைப்பார்த்தால் பலரும் தீராத நோய்களால் அவதிப்படுகின்றனர். சில ஆன்மாக்கள் சாந்தியடையாது ஆவியாக அலைகின்றதாகவும் கேள்விப்பட்டோம். இது ஏன் நடைபெறுகிறது. ஒருவர் பிறவாதிருக்க என்னென்ன செய்தல் வேண்டும்?. உயிர்கள் மோட்சமடையவே விரும்புகின்றன. அதற்கு என்ன செய்தல் வேண்டும்" ஒரு முனிவர் அனைவரினதும் சார்பாகக் கேட்டார்.

**சூ**த முனிவரின் உதடுகள் பிரிந்தன. அவர் முதலில் தனது குருவான வேதவியாசரைத் துதித்தார். பின்பு மகாவிஷ்ணுவைப் பிரார்த்தித்தார்.

"**ச**ணகாதி முனிவர்களே, தாங்கள் கேட்ட இதே கேள்வியைக் கருடபகவான் பெருமானிடம் கேட்டார். அதற்குப் பெருமான் அளித்த விளக்கத்தை அப்படியே நான் உங்களுக்குச் சொல்கிறேன். பாரததேசம் புனிதமான பூமி. கர்மங்களை நீக்கும் புனிதமான இடமாகையால் தேவர்களும் தவம் செய்வதற்காகப் பாரதத்திற்கே வருகிறார்கள். அதிலும் நைமிசாரண்யம் என்ற இந்த இடம் மிகமிகப் புனிதமானது. தவம் செய்தால் உரிய பயனை உடனே கொடுக்கும் தன்மையானது. அதனால் இங்கு தவம் செய்யும் உங்களுக்குப் புனிதமான புராணங்களைக் கூற நான் மிகவும் கொடுத்துவைத்திருக்க வேண்டும். நான் சொல்லப்போவது அனைத்தும் கருடனுக்குப் பெருமான் கூறியவை. அதனால் அதைக் கருடபுராணம் என அழைக்கின்றனர்.

"**க**டவுளால் படைக்கப்பட்ட அனைத்தும் என்றோ ஒரு நாள் அழிவது உறுதி. அதனால் உயிர்கள் யாவும் நேரத்தை வீணாகக் கழிக்காது எம்மைப் படைத்தவனைச் சரணடைந்து அவனின் நினைவோடு நல்லவற்றைச் செய்து வாழவேண்டும். அவ்வாறு வாழ்ந்தால் பெருமான் மிக்க மகிழ்வடைவார். உயிர்கள் அனைத்தினதும் தந்தையான அவர் ஒருவர் நேர்மையானவராக, ஒழுக்கசீலராக வாழ்வதைக் கண்டால் பெருமகிழ்வு கொண்டு அவரைத் தம்முடன் சேர்த்துக் கொள்வார்.



"**மு**னிவர்களே, பாவம் செய்தவன் எப்போதும் துன்பப்பட்டுக் கொண்டே இருப்பான். அவனது வாழ்வில் நிம்மதியும், இன்பமும் இராது. உணவு கூட உரிய வேலைகளில் கிடைமக்கமாட்டாது. வறுமை ஒருபோதும் நீங்கமாட்டாது. ஆனால் புண்ணியம் செய்தவன் செல்வத்தில் மிதக்கிறான். செல்வமுள்ள குடும்பத்தில் பிறக்கிறான். அப்படிப் பிறந்தாலும் அவன் உழைத்துப் பொருள் தேட வேண்டும். ஏனென்றால் பூர்வஜென்ம வினையால் வறுமைமிக்க குடியில் பிறந்து தனது அன்றாடத்தேவைகளைக் கூடப் பூர்த்திசெய்ய முடியாது துன்பப்படுபவர்களுக்கு உதவி செய்வதற்காகச் செல்வந்தனும் உழைத்துப் பொருள் தேட வேண்டும். முன்னோர் தேடிவைத்த சொத்தில் தானதர்மம் செய்தால் அது முன்னோரைச் சென்றடையுமே தவிரக் கொடுப்பவனுக்குப் புண்ணியத்தைக் கொடுக்காது. அப்படி உழைத்துத் தானதர்மம் செய்பவர்கள் அடுத்தடுத்துச் செல்வக்குடியில் பிறந்து இன்பமான வாழ்வைப் பெறுவர்.

**மூ**தாதையர் சேர்த்து வைத்த சொத்தையோ, தான் சம்பாதித்த சொத்தையோ தீயவழயில் செலவு செய்து சிற்றின்பத்தைக் காண்பவன் நரகத்தை அடைவான். பூமியில் வாழும் போது நல்ல வழியல் சம்பாதிக்கும் சொத்தில் ஒரு அணுவளவைக் கூட இறக்கும் போது எடுத்துச் செல்ல முடியாது. அதனால் இயன்றளவு தானதர்மம் செய்தல் வேண்டும். தானதர்மம் செய்த பொருட்கள் ஒருவர் இறக்கும் போது அவருடன் கூடச் செல்லும். புண்ணியவான்களின் வருகைக்காகச் சொர்க்கத்தின் வாசற்கதவுகள் திறந்திருக்கும். தேவதூதர்கள் அவர்களை மலர்தூவி வரவேற்று உபசரிப்பார்.

**ஒ**வ்வொருவரும் தம்தம் கடமைகளை (கர்மாக்களை) பக்தி சிரத்தையுடன் செய்து முடித்தல் வேண்டும். திதி கொடுப்பது, தர்ப்பணம் செய்வது, விருந்தினரை உபசரிப்பது என்பன அனைவரினதும் கடமையாகும். இவற்றைச் சிரத்தையோடு செய்தல் வேண்டும் என்பதால் தான் திதிக்குச் சிரார்த்தம் என்று பெயர் வந்தது. திதி கொடுப்பதன் மூலம் பிதிர்கள் தம் சந்ததியினர்க்குப் பெரும் துன்பங்கள் வராது காப்பார்.

**க**டமையைப் பற்றின்றிச் செய்பவர்களுக்கும், தான் அமர்த்தும் கூலியாட்களின் சம்பளத்தை விதிப்படி கொடுப்பவர்களுக்கும் இப்பிறப்பிலும், மறுபிறப்பிலும் நல்ல வாழ்வு அமையும். இவர்களுக்கு நல்ல அறிவான மக்கள் பிறப்பார்கள். அன்பான அழகுமிக்க குணவதியான பெண் மனைவியாகக் கிடைப்பாள். இவர்கள் கல்வியில் மேலானவராக இருப்பர். நன்மைகள் யாவும் இவர்களைத் தேடிவரும். பிறரின் சொத்தில் ஆசைப்படாதவர்கள் பெரும் தனவந்தர்களின் கர்ப்பத்தில் தோன்றுவார்கள்.



**பெ**ருமாளின் திருவடிகளை எவ்வேளையிலும் தியானம் செய்து கொண்டு தனது நாட்டை நீதிநெறி தவறாது ஆண்டு வந்த பாரதமகாராஜா, ஒரு மான் குட்டியின் மீது கொண்ட அளவில்லாத பற்று அவரை மறுபிறவியல் கங்கைக் கரையில் ஒரு மானாக அவதரிக்கச் செய்தது.

**அ**வர் செய்த புண்ணியங்களால், அவருக்கப் பூர்வஜென்ம ஞாபகம் இருந்தது. அதனால் அவர் தனது உறவுகளைப் பிரிந்து தனது நாட்டிற்குச் சென்று புல்லை மேய்ந்து வாழ்ந்து வந்தார். அதனால் அடுத்த பிறவியல் அவர் உத்தமமான ஓர் அந்தண குலத்தில் பிறந்தார். அவருக்கு எந்நேரமும் பூர்வஜென்ம நினைவு இருந்தமையால், அவர் சகல சாத்திரங்களையும் கற்றபோதும் சடமாகவே வாழ்ந்து வந்தார். யார் எதைச் சொன்னாலும் அதை அவர் விருப்படன் உடனே செய்து முடிப்பார். இதனால் அவரைப் பலரும் கேலி செய்தனர். யார் எப்படிக் கேலி செய்தபோதும் அவர் அதைப் பொருட்படுத்தாது தனது கருமத்திலேயே கண்ணாக

இருந்தார். அவர் எந்தச் சொத்தையும் சேர்க்கவில்லை. அதனால் அவருக்கு அந்தப் பிறப்பிலேயே முத்தி கிடைத்தது.



**பு**ண்ணியத்தை அனுபவிக்க வேண்டுமானால் கட்டாயம் பிறவி எடுத்தல் வேண்டும். புண்ணியவானாலும் அனுபவிக்கும்போது தர்மம் மாறாது. பற்றின்றி மனச்சாட்சிக்கு மதிப்புக் கொடுத்து வாழ்ந்து வந்தால் தொடர்ந்து வரும் பிறவிகள் சிறப்பானதாகவும், இன்பம் பொருந்தியவையாகவும் இருக்கும்.

**பு**ண்ணியவான் எத்தனை பிறவிகள் எடுத்தாலும் அவை சிறப்புமிக்கனவாகவே இருக்கும். அதற்காக அஞ்சத் தேவையில்லை. திருமால் பத்து அவதாரங்களை எடுத்தார். அவை பத்துப் பிறவிகள். அதனால் உலகிற்குப் பெரும் நன்மை உண்டானது. துர்வாசக முனிவர், அம்பரீசன் துவாதசியன்று துளசிந்தீர்த்தம் அருந்தியமைக்காக அவனை, மீனாகப், பின் ஆமையாக, அதன் பின் பன்றியாகப் பல பிறவிகள் எடுக்கக் கடவது என்று சாபமிட்டார்.

**ப**க்தனது சாபத்தை ஏற்றுப் பகவான் மச்சமாக அவதரித்து அபயக்கீரிவன் என்ற அசுரன் அபகரித்துச் சென்ற வேதங்களை மீட்டு வந்தார். அதனால் உலகம் நன்மையடைந்தது.

**தே**வர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து அமிர்தம் பெற வரும்பியபோது, மத்தாகச் செயற்பட்ட மந்திரகிரி என்ற மலை பாற்கடலுள் அமிழ்ந்தது. உடனே பெருமான் ஆமையாக உருவெடுத்து அதைத்தாங்கினார். அதனால் அமிர்தத்துடன் பல பெறுமதியான பொருட்களையும் தேவர்கள் பெற முடிந்தது.

**அ**தைவிட மிக மிகக் கேவலமான பன்றியின் உருவை எடுத்து பிரளய நீரில் அமிழ்ந்து கிடந்த பூமியைத் தனது கொம்பால் தூக்கி வந்து பல கோடிக்கணக்கான உயிரினங்கள் வாழ வழிவகுத்தார்.



**வை**குண்டத்தின் வாசல் காவலர்களான ஜய, விஜயர் சனகாதி முனிவர்களை உள்ளே செல்லவிடாது தடுத்த போது, முனிவர்கள் கோபங்கொண்டு அவர்களை பூலோகத்தில் பிறக்கமாறு சபித்தனர். அவர்கள் இரணியகசிபு, இரண்யாட்சனாகப் பிறந்து பின் இராவணனாகவும், கும்பகர்ணனாகவும் பிறந்தனர். அதன்பின்பு கம்சனாகவும், சிசுபாலனாகவும்

பிறந்தனர். அப்போது அவர்களைச் சங்கரிக்கப் பரந்தாமன் பூமியில் நரசிம்மராகவும், ஸ்ரீராமராகவும், ஸ்ரீ கிருஷ்ணராகவும் அவதரித்தார்.

**தி**தி என்பவள் காமத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் தனது கணவனான கச்சியப்ப முனிவரை சந்தியா காலத்தில் கூடுவதற்கு வற்புறுத்தினாள். அதனால் சனகாதி முனிவர்களால் சபிக்கப்பட்ட ஜய, விஜயர் திதியின் கர்ப்பத்துள் நுளைந்தனர். அவர்கள் தான் இரணியகசிபு, இரண்டயாட்சன் ஆவர். கணவன் மனைவியருக்கிடையே காமம் அனுமதிக்கப்பட்டாலும் அதற்கென விதிமுறைகள் உண்டு. கூடக்கூடாத நேரத்தில் கூடித் தரிக்கும் கர்ப்பம் வம்சத்திற்குக் களங்கமாகி வம்சத்தையே அழித்துவடும். அப்படியான காமமும் பாவத்தை அதிகரிக்கும்.

**தே**வர்களுக்கும், அசரர்களுக்கமிடையே அடிக்கடி போர் நடைபெறும். ஒருமுறை தேவர்களை அசுரர்கள் பயங்கரமாகத் தாக்கியபோது தேவர்களுக்காக அசுரர்களுடன் போரிட்டு அசுரர்களை அழித்தவர் கட்வாங்க மகாராஜா. தாம் தோற்றுவிடுவோம் என அஞ்சிய தேவர்கள், கட்வாங்க மகாராஜாவின் வீரத்தால் தாம் வென்றதை நினைத்து மிக்க மகழ்ச்சி கொண்டு, “மகாராஜாவே, தங்களது வீரத்தை மெச்சினோம். அதற்காகத் தாங்கள் எம்மிடம் ஒரு வரத்தைக் கேட்கலாம்” என்றனர்.




**அ**தைக் கேட்டு மகிழ்ந்த கட்வாங்க மகாராஜா, “எனது ஆயுள் எப்போது முடியும்?” என்று கேட்டார்.

**அ**தைக்கேட்ட யமதர்மன், “சித்தரகுப்தனைப் பார்த்தார்” சித்தரகுப்தன் தனது ஏட்டை எடுத்துப் புரட்டிப் பார்த்துவிட்டு, “ஒரு முகூர்த்த காலத்தில் உங்கள் ஆயுள் முடிவடையும்” என்றார்.

**அ**தைக் கேட்ட கட்வாங்க மகாராசா பூலோகத்திற்கு வந்து அரசைத் துறந்துவிட்டு ஹரிநாம சங்கீர்த்தனம் செய்து கொண்டே மோட்சத்தை அடைந்தார்.

“**நா**ராயண நம” என்று பக்தியுடன் பற்றின்றித் துதிப்பவர்கள் முத்தியடைவர். ஆனால் முத்தியைத்தரும் நாராயணன் பூவுலகில் அவதாரம் எடுத்தால் குற்றங்களுக்கான தண்டணைகளை அனுபவிக்க வேண்டும்.

**இ**ராமனாக நாராயணன் அவதாரம் எடுத்தபோது இராமனான அவர் வாலியை மறைந்திருந்து அம்புவிட்டுக் கொன்றார். அதற்காக அவர் கிருஷ்ண அவதாரத்தில் வேடனது அம்பால் உயிர்துறந்தார்.



**இ**ராம அவதாரத்திற்கு இராவணனது வதம் மட்டும் காரணமல்ல. பிருகு மகரிஷியின் சாபமும் காரணமாகும்.

**சு**க்கிராச்சாரயார் தலைகீழாகத் தவமிருந்த போது, அசுரர்களோடு தேவேந்திரன் யுத்தம் செய்ய விரும்பினான் அசுரர்கள் பிருகுமுனிவரின் மனைவியிடம் சரணடைந்தனர். பிருகுமுனிவரின் மனைவியான கியாதி தனது தவவலிமையால் தேவர்களைப் பலவீனப்படுத்தித் தூக்கத்தில் ஆழ்த்தினாள். இதனால் கடுங்கோபங்கொண்ட திருமால் தனது சுதர்சனத்தை ஏவ, அது கியாதியின் தலையைக் கொய்தது.

**அ**ப்போது அங்குவந்த பிருகு முனிவர் தனது மனைவி கொலை செய்யப்பட்டிருப்பதைக் கண்டு, மிகுந்த வேதனை கொண்டு, "திருமாலே, எனது மனைவியைக் கொன்ற நீ, உனது துணைவியை இழந்து காடுமேடெங்கும் அலைவாயாக" எனச் சாபமிட்டுவிட்டுத் தனது தவவலிமையால் தனது மனைவியை உயிர்ப்பித்தார். அதனால் அவதாரமானாலும் கர்மபலனை அனுபவிக்காது விடமுடியாது.

**த**னது நாபிக்கமலத்தில் இருந்து பிரமனைத் தோற்றுவித்தவர் ஸ்ரீஹரி. பின் அந்த நான்முகனின் நாசியில் இருந்து கட்டை விரல் அளவுள்ள பன்றிக்குட்டியாக வெளிப்பட்ட வராக மூர்த்தியும் அவர்தான்.

**பா**ட்டன் தான் பேரனாகப் பிறந்து பாட்டன் விட்டு விட்டுச் சென்ற சொத்துக்களையும் பாவபுண்ணிய பலன்களையும் அனுபவிக்கிறான்.

## உ. பாவங்களுக்கான பிறவிகள்

"**மு**னிவர்களே, ஸ்ரீமத்நாராயணர் கருடனுக்குச் சொன்னார், "கருடனே, இந்தப் பூவுலகில் எண்பத்து நான்கு லட்சம் யோனி பேதங்கள் இருக்கின்றன. அவற்றுள் முதலாவது முட்டையில் இருந்து தோன்றுவனவாகும். இதற்கு அண்டசமாம் என்று பெயர். அண்டசமாம் யோனிகள் இருபத்தொரு லட்சம். அடுத்து இருபத்தொரு லட்சம் தாவரங்கள் உற்பத்தியாகின. தாவரங்களில்

இருந்து உற்பத்தியானவற்றை உற்பிசம் என்று அழைக்கப்படும். இவற்றை விட மனிதர்களும் விலங்குகளும் கருப்பையில் இருந்து உற்பத்தியாகின்றன. இவையும் இருபத்தொரு லட்சமாகும். இவற்றை சாயுசம் என்று சொல்லப்படுகிறது.

**வி**யர்வையில் இருந்து உற்பத்தியாவது இருபத்தொரு லட்சமாகும். இவற்றை ஸ்வேதசம் எனப்படும். இவை அழகிய பொருட்களில் இருந்தும் சேறு முதலானவற்றில் இருந்தும் உற்பத்தியாகும் புழுக்கள் முதலியனவாகும்.



**ப**ல பிறவிகளின் பின் செய்த புண்ணியபலனால் மானிடப் பிறப்பு வாய்க்கின்றது. இப்பிறப்பு மிகவும் அரிய பிறப்பாகும். பகுத்தறிவு என்று சொல்லப்படும் ஆறாம் அறிவு மனிதர்களுக்கு மட்டுமே உண்டு. இப் பகுத்தறிவே ஐம்புலன்களையும் சிறப்புடன் இயக்குகிறது.

**பே**ச்சு, பக்தி, தியானம், யோகம் முதலியவற்றைச் செய்யும் தன்மை மனிதருக்கு மட்டும் உள்ள சிறப்பம்சமாகும். காளை, பசு, புறா, கருடன், அன்னம், கிளி, மான், யானை, குரங்கு போன்றன சிறிது அறிவுடையன.

**சி**ரத்தையுடனும், பக்தியுடனும் அறநூல்களைப் படிப்பவர்களும் அவற்றைக் கற்றுக் கொடுப்பவர்களும், அவற்றை மக்களுக்கு உணர்த்துபவர்களும் உயர்ந்தவர்களாகக் கருதப்படுவார்கள். ஞானிகள் இவர்களைவிட மேலானவர்களாவர்.

**தா**வரம், நீர்வாழ்வன, ஊர்வன, பறவை, விலஙகு ஆகிய ஐந்து பிறவிகளில் பிறருக்கு உதவி செய்வனவாக இருந்தால் தான் ஆறாவதாக மனிதப்பிறவி கிடைக்கிறது. அதில் ஒழுக்கமாக வாழ்பவர்கள் தேவர்களாகிறார்கள். மற்றவர்கள் மீண்டும் முட்செடி, எருக்கு, ஊமத்தை போன்ற செடிகளாவர். தருமவான் தாவரமானால் நல்ல சுவையான கனிகளைக் கொடுக்கும் மரமாவான். அல்லது நோய்களைத் தீர்க்கும் மூலிகைச் செடியாவான். இல்லாவிட்டால் முப்பத்து முக்கோடி தேவர்களும் வாழும் அரசமரமாவான்.



**மீ**னவர்களது வலையில் அகப்படும் மீன்கள், பிறருடைய பசிக்கு உணவாகித் தனது அடுத்த பிறவியை அடைகிறது. கோவில் புற்றுக்குள் இருக்கும் நாகபாம்பு பலராலும் தெய்வமாக வணங்கப்படும் பேற்றைப் பெறுகிறது. மற்றவர்களை வன்சொற்களால் துன்புறுத்துபவன் தேழாகப் பிறக்கிறான். தனது குடும்பத்தை மட்டும் பேணுபவன் நண்டாகப் பிறக்கிறான்.

**கு**டும்பத்திற்கும், நாட்டிற்கும் உதவாதவர்கள் வௌவாலாகப் பிறந்து தலைகீழாகத் தொங்குவர். புண்ணியம் செய்தவர்கள் ஆலமரமாகப் பிறப்பர். அதிலும் கோவில் வாசலில் நின்று அடியவர்களுக்கு நிழல் தரும் ஆலமரமாகப் பிறப்பவர்கள் பெரும் புண்ணியம் செய்தவர்களாவர். ஏனைய இடங்களில் நிற்கும் ஆலமரம் விறகுக்காக மட்டுமே பயன்படும். யாகத்திற்கு சமித்துக்கள் தரும் ஆலமரங்கள் அடுத்த பிறவிக்குச் செல்கின்றன.



**ப**கவானான என்னை அழகாக அலங்கரித்துப் பக்தர்களை மகிழச் செய்பவர்கள் மயிலாகவும், கிளியாகவும், புறாவாகவும் பிறப்பெடுப்பர். கருடனே, நீ என்னைச் சுமப்பதால் நீயும் உனது இனத்தவர்களும் போற்றி வணங்கப்படுகிறார்கள். கூர்மையான புத்தியுள்ளவர்கள், வல்லூறாகப் பிறப்பர். பசியென்று தன்னை நாடி வந்தவர்களுக்கு உணவிடாது அனுப்புவோர் பருந்தாகப் பிறப்பர்.



**கா**ரணமின்றி மற்றவர்களை காக்க வைத்தவர்கள் கொக்காகப் பிறக்கின்றனர். பெரும் புண்ணியம் செய்தவர்கள் பெருமாளுக்கு அபிஷேகம் செய்யப் பால் தரும் பசுவாக அல்லது, பெருமாளுக்கு நேர்ந்துவிடும் காளையாக, அல்லது பெருமாள் ஊர்வலம் செல்லும் போது அவரை ஏற்றிச் செல்லும் யானையாகவோ அல்லது, சுவாமியின் முன்னே அணிவகுத்துச் செல்லும் யானைகளாகவோ பிறப்பர்.



**கு**ருவை அல்லது சமயசாத்திரங்களைக் கற்றவர்களைக் கேலி செய்பவர்கள் புலியாகப் பிறக்கின்றனர். நண்பர்களுக்குத் துரோகம் செய்பவர்கள் நரியாக அல்லது கழுதையாகப் பிறப்பெடுப்பர். காது கேளாதவர்களை இகழ்ந்தவர்கள் அங்கவீனர்களாகப் பிறப்பர். தாகம் என்று கேட்டவனுக்கு நீர் கொடாதவர்கள் காகமாகப் பிறப்பெடுப்பர்.

**கூ**ட்டு வியாபாரத்தின் போது வரும் இலாபத்தைத் தாமே அனுபவிப்பவர்கள் புழுக்களாகப் பிறப்பர். அதிகாரியாக இருப்பவர் நீர் நிலைகளை ஒழுங்காகப் பராமரிக்காது விட்டால் நிலத்தை உழும் எருதாகப் பிறப்பர். வீட்டிற்கு விருந்தினர்கள் வந்தபோது நல்ல சுவையான உணவு வகைகளை மறைத்து வைத்துவிட்டு அவர்கள் சென்றபின் அவற்றை எடுத்து உண்பவர்கள் பிசாசாக

அலைந்து திரிவர். பெற்றோரையும் தனது மனைவியையும் பிள்ளைகளையும் கைவிட்டு விட்டு வாழ்பவர் ஆவியாக அல்லற்படுவர்.



**அ**திதிகளை வரவேற்று அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யாதவர் கொடுக்கும் சிரார்த்தத்தையும், தர்ப்பணத்தையும் பிதிர்கள் ஏற்க்க மாட்டார்கள். கொலையையும், கொள்ளையையும் செய்வோர் நூறு ஆண்டுகள் பேயாய் அலைவர். பிறர் தானம் கொடுப்பதைப் பறித்துக் கொள்பவர்கள் ஓணாணாகப் பிறப்பெடுப்பர். இவர் மனிதப் பிறவி எடுக்கும் போது அற்ப ஆயுளில் மரணமாவார். இவர்களை விட்டுத் தரித்திரம் ஒருபோதும் நீங்காது.



**அ**டுத்தவர்களின் பிழைப்பைக் கெடுத்து தாம் அதை அனுபவிப்பவர்கள் திமிங்கிலமாகவும், மீனாகவும் பிறப்பர். அதன்பின் முயலாகவும், மானாகவும் பிறந்து துன்பப்படுவர். தனது மகளைத் தவறான செயல்களில் ஈடுபடுத்துபவன் மலத்தில் வாழும் புழுவாகப் பிறப்பான். அதன் பின் வேட்டைக்காரனாகவும், காட்டுவாசியாகவும் பிறப்பான்.

**வி**ரதம், சிரார்த்த தினம் போன்ற புனித நாட்களில் மனைவியோடு கூடிக் களிப்பவர்கள் பன்றியாகவும். கோழியாகவும் பிறக்கின்றனர். அடுத்தவர்களைப் பற்றிக் கோள் சொல்பவர்கள் பல்லியாகவும், தவளையாகவும் பிறக்கின்றனர். கூலியாட்களுக்கு தகுந்த கூலிப்பணம் கொடுக்காதவர்கள் அட்டையாகப் பிறந்து பிறரின் இரத்தத்தை உறுஞ்சுவர்.



**கொ**லை செய்தவர்களுக்கக் குஷ்டரோகம் போன்ற கொடிய மாறாத நோய்கள் வரும். புறவைகளைப் பிடித்து கூட்டில் அடைத்து வைத்து அவற்றைப் பார்த்து ரசித்து மகழ்வோர் அரசரால் சிறைப்படுத்தப்படுவர். இவர்களைப் பல்வேறு விதமான நோய்கள் உண்டாகி வருத்தும். மாமிசம் புசிப்பவர்கள் சிங்கமாகவும், சிறுத்தையாகவும், ஓநாயாகவும் பிறப்பர்.

**தீ**யவற்றை எண்ணி அதையே செய்பவர்களும், பிறரைக்கேலி செய்பவர்களும் ஊமையாகப் பிறக்கின்றனர். தெய்வத்திற்கு அளித்த நிலங்களில் வாழ்பவர்கள் தேனீக்களாகப் பிறக்கின்றனர். வஞ்சனையான தீர்ப்பை அளிப்பவர்கள் கொசுவாகவும், ஈயாகவும், மூட்டைப் பூச்சியாகவும் பிறக்கின்றனர்.

**மு**றைப்படி சந்தியாவந்தனத்தைச் செய்யத் தவறியவர்களும், தெய்வத்தின்மீது நம்பிக்கை இல்லாதவர்களும் பன்றியாகப் பிறக்கின்றனர். அதன்பின் கூலியாட்களாகப் பிறப்பெடுக்கின்றனர்.

**ம**ண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை ஆகிய மூன்றும் உள்ளவர்கள் நரகத்திற்குச் செல்வர்.

**த**ர்மங்களைப் புறக்கணிப்பவர்கள் திறமையற்றவர்களாகவும், ஏழைகளாகவும் பிறக்கின்றனர். இவர்கள் பேராசை உடையவர்களாகவும், மனச்சாட்சிக்கும் மனிதாபமானத்திற்கும் மதிப்பளிக்கமாட்டாதவர்களாகவே இருப்பர். வாழ்க்கையில் ஒருபோதும் இவர்களுக்குத் திருப்தியிராது. மதுவுக்கும் மாதுக்கும் அடிமையாகப் பல்வேறு விதமான தீய செயல்களைச் செய்து கொண்டிருப்பர். இவர்கள் நரகத்தைவிட்டு வெளியேற முடியாது அவதிப்படுவர். அடுத்த பிறவியில் விபத்தில் அகால மரணமடைவர். பொருளைச் சேர்த்துவைத்து அழகுபார்ப்பவர்களுக்கு அடுத்த பிறவியில் இனத்தவரால் எந்த நன்மையும் கிட்டாது.

**ஐ**ம்புலன்களையும் அடக்கி அலைய விடாமல் கட்டுப்படுத்தி ஒழுக்கமாக வாழ்பவர்கள் சொர்க்கத்தை அடைந்து பேரின்பத்தை அனுபவிப்பார்.

## 3. தான தருமங்களின் மகிமை



“**க**ருடதேவா, நாவுக்குச் சுவையைத் தருகின்ற உணவுவகைகளை அதிகமாக உண்டால் அது சமிபாடு அடையாது பல வியாதிகளைக் கொண்டுவந்து சேர்க்கும். அழகையும், ஆரோக்கியத்தையும் அழித்துவிடும். கோவில்களுக்கு வரும் கன்னிப் பெண்களைக் காமக்கண் கொண்டு பார்த்தால், பக்தி அழித்து பாவம் அதிகரிக்கும். காட்டில் இருக்கும் புள்ளிமான் புல்லாங்குழலின் இனிமையான நாதத்தில் கிறங்கி நிற்கும் போது வேடன்

அதன்மீது அம்பு எய்து கொன்றுவிடுவான் எரிகின்ற நெருப்பைச் சுவையான கனி என்று எண்ணி விட்டில் பூச்சிகள் அதை உண்ண நினைத்துத் தம் உயிரை விடுகின்றன.

**இ**வை போன்று முறையற்ற காமமும் வியாதிகளையும், அவப்பெயரையும், துன்பங்களையும் கொண்டு வந்து சேர்க்கும். காதால் கெட்டது மான். கண்ணால் அழிந்தது விட்டில் பூச்சி தேனைச் சேகரிக்கும் வேடர்கள் தீப்பந்தத்தைக் கொழுத்தித் தேனீக்களைக் கொன்றுவிட்டுத் தேனைக் கவர்ந்து கொள்கின்றனர். புண்ணியமான காரியங்களுக்குக் கொடாது சேமித்து வைக்கும் செல்வம் தேனைப் போலத் திருடர்களின் வசமாகிவிடும். தேனி நாவின் ருசியால் கெட்டது.



**ஆ**ண் யானையைப் பிடிப்பவர்கள் பெண் யானையைக் கொண்டுவந்து ஆண் யானைக்கு அருகே விடுவர். பெண்யானையைக் கண்ட ஆண்யானை காமம் தலைக்கேறி செய்வது என்னவென்று தெரியாது காமத்துடன் ஓடிவந்து அதைப் பிடிப்பதற்காக வெட்டிவைக்கப்பட்டிருந்த குழிக்குள் விழுந்து மனிதர்களுக்கு அடிமையாகிவிடும். இதுபோலவே பிறரின் மனைவியை நேசிப்போர் தமக்குத் தாமே படுகுழியை வெட்டிக் கொள்கின்றனர்.

**தூ**ண்டில் முள்ளில் உள்ள இரைக்கு ஆசைப்படும் மீன் தனது உயிரை இழக்கிறது. இது நுகர்ச்சியால் ஏற்படும் அழிவாகும். தனியாகப் பிறந்த மனிதன், தனித்தே இறக்கின்றான். இடையில் வாழ்வின் போலி இன்பங்கள் என்ற மாயவலையில் சிங்கித் தவிக்கின்றனர்.

**ஒ**ரு செல்வந்தர் பழைய வீடு ஒன்றை வாங்கி அதை நல்ல முறையில் புணரமைத்த போதும். அதன் வாசலைச் சிறிதாகவே வைத்தார். அந்த வீட்டில் சகல வசதிகளும் இருந்தபோதும் வாசல் மட்டும் சிறிதாக இருந்தது.

**ஒ**ரு நாள் அந்தச் செல்வந்தர் இறந்துவிட்டார். சிறிய வாசலால் பிணத்தை வெளியே கொண்டுசெல்ல முடியவில்லை. அதனால் வாசலைப் பெருப்பிக்கச் சுவரை இடிக்க ஆயத்தமாயினர். அதைக் கண்ட அவரது மனைவி துடிதுடித்து, “வாசலை இடிக்காதீர்கள், மாலைவேளை சாம்பலாப்போகும் உடம்புதானே இது. அதனால் அவரது கால்களை வெட்டிவிட்டுப் பிணத்தை வெளியே எடுத்துச் செல்லுங்கள்” என்றாள்.

**இ**றந்தவரின் ஆன்மா துடிதுடித்தது. “இவளுக்காகவா நான் தர்மத்தைக் கைவிட்டேன். இவளின் அழகான உடலை மோகித்து இவளின் விருப்பங்கள் யாவற்றையும் நிறைவேற்றினேனே

தவிர வேறெதுவும் செய்யவில்லை. இது எனக்கு வேண்டும். அதுமட்டுமல்ல இது எனக்குத் தகுந்த தண்டனையுமாகும்".

**பா**வம் அளவுகடந்து விட்டால், நரக தண்டனைகளும், ஈனப்பிறவிகளும் கிடைக்கும். அவற்றை விடப் பூவுலகில் வாழும் போது தீயவர்களுக்குப் பிள்ளைகளாகப் பிறந்து பெரும் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டிவரும்.

**வா**ல்மீகி இளைஞராக இருக்கும் போது திருடியே வாழ்ந்தார். அவர் திருடிய பணத்தைப் பெற்றோரும் அவரது மனைவியும் அனுபவித்தனர். இருந்தபோதும் அவர் தேடிய பாவத்தைப் பங்கு போட்டுக் கொள்ள விரும்பவில்லை. அதனால் வாழ்க்கையின் உண்மையை உணர்ந்த அவர் துறவியானார். அவர் துறவியானமையால் தான் இராமாயாணம் என்ற மகாகாவியம் உலகிற்குக் கிடைத்தது.

**ஸ்ரீசொ**ர்க்கத்திற்குச் செல்லும் போது புண்ணியவான்கள் செய்த தான தருமங்கள் அவர்களுக்கு ஒளியாக மாறி வழிகாட்டும். பாவிகளுக்கு அவர்கள் செய்த பாவங்கள் இருட்டாக மாறித் தடுமாற வைக்கும்.



**வி**ருப்புடன் தானதர்மம் செய்தவர்கள் சொர்க்கத்திற்குச் செல்லும்போது அவர்கள் செல்லும் பாதை மலர்ப்பஞ்சனைபோல இருக்கும். அத்துடன் விமானப்பயணம் போலவும் இருக்கும். ஏழை எளியவர்களுக்கும், அநாதைகளுக்கும் தாராள மனதுடன் உதவி செய்தவர்கள் நந்தவனத்தில் இருப்பதைப்போல முத்திநிலை ஏற்பட்ட பின் இருப்பர்.

## 4. விருஷோற் சர்க்கம்



"**வை**குண்ட வாசனே மனிதர்கள் இறந்தபின்பு அவர்களுக்கு பிரேத ஜன்மம் வராதிருக்க என்ன செய்தல் வேண்டும்?" என்று கருடாழ்வார் கேட்டார்.

"**க**ருடா, மனிதனின் உடலில் இருந்து உயிர் பிரிந்த பின்பு அது ஆவி வடிவாகிறது.

அதுதான் பிரேத ஜன்மம். அது ஏற்படாமல் இருக்க "விருஷோ தற்சர்க்கம்" என்ற கர்மாவைச் செய்தல் வேண்டும். இதற்குக் காளைக் கன்றைத் தானமாகக் கொடுத்தல் வேண்டும். அப்படிக் கொடுத்தால் பிரேத ஜன்மத்திலிருந்து விடுபடலாம்.

**ஐ**ந்து வயதிற்குட்பட்ட ஆண் குழந்தையோ அல்லது பெண் குழந்தையோ இறந்தால் அவர்களுக்குப் பிரேதஜன்மம் உண்டாகமாட்டாது.

**இ**றந்தவர்களுக்கு எருதுக்கன்றைத் தானமாகக் கொடுத்தால் பிரேதஜன்மம் அகன்றுவிடும். ஒருவர் இறந்து பதினொராம் நாள் செய்ய வேண்டிய தானம் இது. இது செய்யாது வேறெந்தக் கிரியைகள் செய்தாலும் எந்தப் பலனும் ஏற்படாது. இதைச் செய்யாவிட்டால் இறந்தவர் மேட்சமடையமாட்டார். இந்தத்தானத்தை இறந்தவரின் மனைவி அல்லது பிள்ளைகள் செய்வது உசிதமானது. புத்திரர்கள் இல்லாதுவிட்டால் பேரன் அல்லது பெண்வழிப் பேரன் செய்யலாம்.



"**ஸ்ரீ**மத்நாராயணா, வாரிசு இல்லாதவர்களுக்கு யார் உத்தரக்கிரியை செய்வது" கருடன் கேட்டான்.

"**ஒ**வ்வொரு தம்பதியருக்கும் புத்திரபாக்கியம் இன்றியமையாதது. புத்திரர் இல்லாதவர்கள் ஏழைகளுக்கு உதவவேண்டும். தீர்த்தயாத்திரை செல்லவேண்டும். இரண்டும் செய்யாவிட்டால் நெடுங்காலம் அந்த ஆவி பசியுடனும் தாகத்துடனும் அலைந்து திரியும். அத்துடன் அது அழுகிய பொருட்களில் புழுவாகப் பிறக்கும்.

**ஒ**வ்வொருவருக்கும் சேமித்த செல்வம் செலவாவது போல, அவர்கள் சேமித்த புண்ணியங்களும் செலவாகிவிடும் என்பதை மனிதர்கள் உணர்வதில்லை. அதனால் தொடர்ந்து புண்ணியங்களைச் செய்து கொண்டே இருக்கவேண்டும். ஒவ்வொருவரும் செய்யும் புண்ணியம் அவரவரின் வம்சத்தையே சென்றடையும்.

"**நா**ராயணா, தான் தானம் செய்வதற்கும், பிள்ளைகள் செய்வதற்கும் வித்தியாசம் உண்டா?" கருடன் கேட்டான்.

"**சா**த்திர விதிப்படி மனத்தூய்மையுடனும், உறுதியோடும் தான் செய்யும் தானத்திற்கு அதிக பலன் உண்டு. ஒருவர் மரணமடைந்த பின்பு செய்யும் ஆயிரக்கணக்கான தான தருமங்களும் தரும பயனை உயிரோடு இருக்கும்போது, இறக்கும் தருணத்திலும் செய்யப்படும் ஒரேஒரு தானம் தந்துவிடும்".

**வ**யதான ஒருவரின் உயிர் உடலை விட்டுப் பிரியத் துன்பப்படுகிறது என்று தெரிந்தால் சில தான தருமங்கள் செய்தால் அவ்வுயிர் சாந்தியடைந்துவிடும்.



**தா**னம் செய்யும் பொருள் பெறுமதி வாய்ந்ததாகவும், பயனளிக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். உதாரணமாகக் கோதானம் செய்வதானால் வயது முதிர்ந்த பசுவைக் கொடுத்தால் அதனால் எந்தப் பயனும் ஏற்படாது. மாறாகப் பாவமே உண்டாகும். அது போலத் தரிசு நிலங்களைத் தானம் கொடுக்கக் கூடாது. பவித்திரமோதிரத்தை தானம் செய்பவன் அதைத் தாசிகதுத் தானமாகக் கொடுத்தால் புண்ணியம் கிடைக்காது. அதனால் நல்லவர்களுக்கே தானம் கொடுத்தல் வேண்டும்.

**பு**ண்ணியத் தலங்களிலும், சமுத்திரக் கரைகளிலும் செய்யும் தானம் கோடி மடங்கு பலனைத் தரும். கோதானம் வாங்குபவர்தான் தானம் பெற்ற பசுவை நல்ல முறையில் பராமரிப்பவராக இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் கோதானத்தைப் பெறக்கூடாது. அந்தணன் குலத்தால் மட்டுமின்றி, ஒழுக்கமுள்ளவனாகவும், வேதத்தை நன்கு கற்றவனாகவும் இருத்தல் வேண்டும். ஒழுக்கமில்லாத அந்தணன் வாங்கும் தானம் அவனை நரகத்திற்கு அனுப்பி வைக்கும். கோதானம் பெற்றவர் அதை விற்றால் தானம் பெற்றவரது தலைமுறையினரும் நரகத்தை அடைந்து துன்பப்படுவர்.

**ஒ**ரு பசுவைப் பலருக்குத் தானம் கொடுப்பது பாவம். ஒருவர் எவ்வளவு அக்கறையுடன் குடும்பத்தைக் காப்பது கடமையோ, அதேபோல மோட்சமடைய விரும்புபவர்கள் வருமானத்தில் ஒரு பகுதியைத் தான தருமம் செய்ய வேண்டும்.



**பு**ண்ணியத்தலம், நல்லநேரம் ஆகிய இரண்டும் இல்லாதவேளைகளிலும் அளிக்கப்படும் தான தர்மங்களும் உயர்ந்தவையே ஆகும்.

"**நா**ராயணா, புண்ணியகாலம் எவையெவை என்று தேவரீரே எனக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்" என்று கேட்டான் கருடன்.

"**க**ருடனே, கார்த்திகை மாதப் பௌர்ணமி உத்தராயான காலத்து துவாதசிகள் விசேடமானவை. ஒழுக்கமாக வாழும் சாத்திரிகளைக் கொண்டு கோமம் வளர்த்து

நவக்கிரகங்களையும், மாதுர்தேவதைகளையும் வணங்கி, என்னையும் வணங்கி மந்திர நீரால் பசுக்கன்றினை நீராட்டி, ஆடை, சலங்கை முதலியவற்றால் அதை அலங்கரித்து, மலர்மாலை சூடி, மேலும் நான்கு காளைக்கன்றுகளோடு யாககுண்டத்தை வலம்வரச் செய்தல் வேண்டும். அதன்பின் வடக்குத்திசையை நோக்கி நின்று தானம் கொடுக்கவுள்ள காளைக் கன்றைப் பார்த்து, “திருவடிவாக உள்ள நீயே ஆதியில் பிரமதேவனால் படைக்கப்பட்டாய்” என்று கூறி அதைத் தானமாகக் கொடுத்தல் வேண்டும். இதுதான் விருஷோற்சர்க்கம் எனப்படும் தானமாகும். உயிரோடு இருக்கும் போது இத்தானத்தைக் கொடுப்பவர், அந்தக் காளைக் கன்றின் வாலில் மந்திரம் செபித்த நீரைத் தெளித்து அந்த நீரைக் கையில் ஏந்தி சிரசில் தெளிக்க வேண்டும்.

## 5. யமலோகமும், பிண்ட சரீரமும்

“**பெ**ற்றோர் இறந்த பின்பு கிரியைகளும், சிரார்த்தமும் செய்ய வேண்டியது பிள்ளைகளின் கடமை” என்றார் பெருமான்.

**அ**வர் சொல்வதை பக்தியுடன் கேட்ட கருடன், “சுவாமி, இப்போது எனக்கு யமலோகத்தைப் பற்றிக் கூறுதல் வேண்டும்” என்று வணங்கினான்.



**க**ருடனே, பூலோகத்தில் இருந்து எண்பதினாயிரம் காததூரத்தில் யமப் பட்டணம் உள்ளது. அதன் தலைவன் எமதர்மராஜன். பூவுலகில் தமது ஆயுளை முடித்துக் கொண்டவர்களின் உயிரை யமதர்மராஜன் தனது தூதுவர்களை அனுப்பி அவர்களை அழைத்துவரச் செய்வான். இதுதான் அவனது பணியாகும். யமகிங்கரர்கள் மூவர் கறுப்பு நிற உடை அணிந்து, மிகவும் பயங்கரமான தோற்றத்துடன் பூமிக்கு வருவார்கள். அவர்கள் பாசக்கயிற்றுடன், ஆயுதங்களையும் வைத்திருப்பார்கள். ஆயுள் முடிவடைந்த உயிரைப் பாசக் கயிற்றினால் பிணைப்பர். பின் கட்டை விரல் அளவுள்ள குஷ்மதேகத்துள் அந்த உயிரை அடைத்துக் கொண்டு யமலோகத்திற்குச் செல்வார்கள்.

**உ**யிர்களை அழைத்துச் செல்லலும் தூதுவர்கள் அவற்றைக் காலதேவனான யமதர்மராஜனின் முன்நிலையில் நிறுத்துவர். அவர்களைப் பார்த்த யமன், “இவர்களை, இவர்கள்

வாழ்ந்த வீடுகளில் விட்டு விடுங்கள். பன்னிரண்டாம் நாள் கர்மா முடிந்த பின்பு இங்கு கொண்டு வாருங்கள்" என்று சொல்வான்.

**கா**ற்றோடு காற்றாகக் கலந்த அந்த உயிர் சுடுகாட்டில் தனது உடல் எரிக்கப்படும் சிதைக்குப் பத்து முழம் உயரத்தில் நின்று நடப்பவற்றைக் காணும். புண்ணிய ஆன்மாக்கள் தனது போலியான உடல் எரிவதைக் கண்டு மகிழும். பாவம் செய்த ஆன்மாக்கள் அதைக் கண்டு கதறி அழும்.

**அ**ந்த உயிர்கள் பன்னிரண்டாவது நாள் கர்மா முடிந்ததும் ஆவியுருவில் இருந்து பிண்ட வடிவத்தைப் பெற்றுக் கொள்ளும். மறுநாள் அது மீண்டும் யமபுரிக்குச் செல்லும்.

**உ**யிர் நீங்கிய உடலை எரியூட்டியபின், அந்த உயிர் வாழ்ந்த வீட்டில் பன்னிரண்டு நாட்களுக்குப் பிண்டம் போட வேண்டும். பிண்டம் போடாவிட்டால் அவ்வுயிர் வீட்டுக்குள்ச் செல்லாது வெளியே நின்று தனது பசியையும், தாகத்தையும் சொல்லி அழும்.

**அ**ந்த உயிருக்கு முதல்நாள் இடும் பிண்டத்தில் தலை உண்டாகும். இரண்டாம் நாள் இடப்படும் பிண்டம் கழுத்தையும், தோள்களையும் உண்டாக்கும். மூன்றாம் நாள் மார்பும், நான்காம் நாள் வயிறும், ஐந்தாம் நாள் தொப்பிளையும், ஆறாம் நாள் பிருஷ்டத்தையும், ஏழாம் நாள் குய்யத்தையும், எட்டாம் நாள் தொடைகளையும், ஒன்பதாம் நாள் கால்களையும், பத்தாம் நாள் அது முழுத்தோற்றத்தையும் பெறும். பத்து நாட்களும் இடப்படும் பிண்டத்தால் இறந்துபோன உயிருக்கு பிண்ட சரீரம் பூர்த்தியாகிறது.

**ப**தினொராம் நாளும், பன்னிரண்டாம் நாளும் உயிர் தான் வாழ்ந்த வீட்டில் தங்கியிருந்து அங்கு கொடுக்கப்படுவதை வாங்கி உண்ணும். அதன்பின் உயிர் யமபுரிக்குச் செல்லும்.

**ப**தின்மூன்றாம் நாள் யமதூதர்கள் அந்த உயிரைப் பாசக்கயிற்றினால் கட்டி இழுத்துச் செல்வர். ஒரு நாளைக்கு 247 காத வழிப்பயணம் செய்தாக வேண்டும். அப்பயணத்தின் போது உயிரை ஓய்வெடுக்க விடமாட்டார்கள். அதனால் அவ்வுயிர் பசியாலும், தாகத்தாலும் வருந்தியவாறு செல்லும்.

**ய**மபரிக்குச் செல்லும் வழியில் வைவாய்வதம் என்ற பட்டிணம் வரும். அங்கு பயங்கரமான ஜந்துக்கள் உலாவிக் கொண்டிருக்கும். அவற்றின் தோற்றம் காண்பவர்களை நடுநடுங்க வைக்கும். அங்குள்ள குளங்கள் யாவும் கொதித்து ஆவியைக் கக்கிக் கொண்டிருக்கும். மேகத்தில் இருந்து இரத்த மழை பொழியும், "மிகவும் தாகமாக இருக்கிறது. குடிக்க ஒரு சொட்டு நீர் கூடக் கிடைக்குதில்லை" என்று உயிர்கள் புலம்பிக் கொண்டிருக்கும்.



“ஐயோ, இவர்கள் முரட்டுத்தனமாக இழுத்துச் செல்வதால் ரணகனமாகிவிட்டது. கோவிலுக்குப் போகாது வீணாகக் காலத்தைக் கழித்ததால் வந்த வினை இது. தெய்வநாமத்தைச் சொல்லாமல் வீண்கதைகள் பேசிய நாக்குப் புரளமறுக்கிறது. தெருவெல்லாம் நெருப்பாகக் கொதிக்கிறது. மாகான்களை நான் கண்டபடி ஏசினேன். சந்தியா வந்தனத்தை ஏளனம் செய்து கை விட்டேன். அதனால் இத்தகைய பல துன்பங்கள் வரும் என்று எனக்கு யாரும் கூறவில்லையே. மரணத்தின் பின் நடப்பவை யாவும் கற்பனையான கட்டுக்கதைகள் என்று ஏளனம் செய்ததோடு, எந்த விரதத்தையும் நான் கைக்கொள்ளவில்லை. அமாவாசையில் செய்யும் தர்ப்பணத்தைக் கூட நான் செய்ததில்லை . பிறரைப்பற்றி இழிவாகப் பேசி அவர்களின் செயல்களில் குற்றம் காண்பதையே பெருமை என்று நினைத்திருந்தேனே. இப்போது தான் யாவும் புரிகிறது. இனிப் புரிந்து என்ன பயன்?” என்று புலம்பியவாறு உயிர்கள் செல்லும்.

அப்போது யமகிங்கரர்கள், சத்தம் செய்யாது மௌனமாக வாருங்கள்” என்று அதட்டிக் கையில் உள்ள ஆயுதங்களால் தாக்குவார்கள். அதன் வேதனையைத் தாங்கமுடியாது உயிர்கள் பலமாகக் கத்தி அழும்.

“பிரபு, இவ்வாறு துன்பப்பட்டுப் புலம்பியபடி செல்லும் உயிர்கள் யமபுரியை அடைய எத்தனை நாட்கள் செல்லும்?” கருடன் கேட்டான்.

“கருடனே, இவையாவும் பாவம் செய்த உயிர்களுக்கு மட்டும் நடைபெறும். பாவம் செய்த உயிர்கள் யமபுரியை அடைய ஒருவருடம் செல்லும். புண்ணியம் செய்த உயிர்கள் இன்பமாக பொழுது போக்கியபடி நடனமாடி பாட்டுப்பாடிக் கொண்டு ஒரு சில நாட்களில் யமபுரியை அடைந்து விடும்”.

“கடவுள் உங்களுக்குக் கிடைத்தற்கரிய மானிடப் பிறப்பைத் தந்தபோது நீங்கள் நற்செயல்களைச் செய்யாது பொருள் தேடுவதற்கதாகப் பல தீயவழிகளைத் தேடினீர்கள். பசியோடு வந்து இரந்த ஏழைகளுக்கு எதுவும் கொடாது விரட்டியடித்தீர்கள். இனத்தார்களின் சொத்துக்களை நியாயமின்றி அதர்மமான வழியில் பறித்தீர்கள். இவ்வாறு பல தீமைகளைச் செய்து விட்டு அதற்கான தண்டனையை அனுபவிக்கும் போது ஏன் வீணாகப் புலம்புகிறீர்கள். கதையாது வாருங்கள்” என்று யமகிங்காரர்கள் ஒவ்வொருவரும் செய்த பாவங்களைச் சொல்லித் துன்புறுத்தியவாறு உயிர்களை இழுத்துச் செல்வர்.

**இ**றந்தவர்களுக்கு மாசியம், சோதகும்பம் என்று இனத்தவரால் மாதம் தோறும் வைக்கப்படும் பிண்டமே அவற்றிற்கான உணவாகும்.



**ய**மபுரிக்குச் செல்லும் வழியில் சில சமயம் பெரும் புயல்வீசும். சில இடங்கள் முட்காடாய் இருக்கும். பாதையோரங்களில் உள்ள புதர்களில் புலி, சிங்கம், நச்சுப்பாம்பு போன்ற கொடிய விலங்குகள் இவர்களைத் துரத்தும். அருகில் வந்து சிங்கங்கள் வாயைப் பிளந்து கர்ச்சிக்கும். புலிகள் பாய்ந்து வந்து உறுமும். கொடிய நச்சுப் பாம்புகள் சீறும். அப்படியான அந்தப் பயங்கரமான இடத்தில் யமகிங்கரர்கள் உயிர்களை ஓய்வெடுக்கச் சில நாட்கள் விடுவார்கள்.

**இ**றந்த இருபத்தெட்டாம் நாள் தனது மகனால் இடப்பட்ட பிண்டத்தை உயிர் உண்ணும். அதன்பின் முப்பதாம் நாள் 'யாமியம்' என்ற நரகத்திற்கு உயிர்களை அழைத்துச் செல்வர். அங்கே ஏராளமான பிரேத ஜீவன்கள் கூட்டம் கூட்டமாக இருக்கும். அங்கு சில மணிநேரம் தங்கியபின் இரண்டாவது மாசியப் பிண்டத்தை உயிர்கள் உண்ணும். அதன்பின் யமதூதர்கள் உயிர்களை கரடுமுரடான முட்கள் நிறைந்த பாதையால் இழுத்துச் செல்வர். நடக்க முடியாதவர்களுக்குச் சாட்டையால் அடித்து இழுத்துச் செல்வர்.

**அ**டுத்துச் சங்கமன் ஆளும் சௌரிநரகத்திற்குச் செல்வார்கள். அங்கிருக்கும் போது மூன்றாவது மாதப் பிண்டம் கொடுக்கப்படும். அதன்பின் பயணத்தைத் தொடங்குவர். இவ்வாறு நான்காம், ஐந்தாம், ஆறாம் மாசியப் பிண்டத்தை உண்டபின் 'வைதரணி' எனப்படும் துர்நாற்றமுடைய நதிக்கரையை அடைவார்கள். அந்த நதியை அடையும் வரை யமதூதுவர்கள் உயிர்களைச் சித்திரவதைப் படுத்துவர்.

**பூ**மியில் வாழும்போது கோதானம் செய்தவர்களுக்குப் பசுவினது வால் கயிறுபோல அவர்களின் முன் தோன்றும். அதைப்பிடித்தவுடன் அவ்வால் அவர்களைத் தூக்கிச் சென்று மறுகரையில் விடும். மற்றவர்கள் அந்த நதியில் விழுந்து துடிதுடிப்பர். அந்தநதி இரத்தம், சீழ், காதுக்குடும்பி, சிறுநீர், வியர்வை போன்ற மிகமிக அசுத்தமான பொருட்களால் உருவானது. இந்நதியில் அட்டைகளும், புழு, பூச்சிகளும், பூரான்களும் காணப்படும். அவை உயிர்களைத் துன்புறுத்தும்.

**ஒ**ருவர் இறந்த பிறகு அவரது சந்ததியினர், 'வைதரணி கோதானம்' செய்தால் அந்த உயிருக்கு விமோசனம் உண்டு. இல்லாவிட்டால் அந்த துர்நாற்றம் வீசும் அந்நதியில் நெடுங்காலம் தத்தளிக்க வேண்டிவரும்.

**இ**தைக் கடந்து சென்றால் யமனது சகோதரனான 'விசித்திரன்' ஆளும் நகரம் வரும். இங்குவரும் போது ஏழாவது மாசியம் கொடுக்கப்படும். இறைவனை வழிபடாதவர்களினதும், கொடிய பாவங்களைச் செய்தவர்களினதும் மாசியப் பிண்டத்தைப் பிசாசுகள் தட்டிப்பறித்து விடும். அதனால் உயிருக்கு அந்த மாதத்திற்குரிய உணவு கிடைக்காது போய்விடும். ஏழாவது மாத முடிவில் யமபுரிக்குச் செல்வதற்கான அரைவாசித் தூரம் கடக்கப்படும்.



**அ**டுத்த உயிரை யமதூதுவர்கள் 'பக்குவப்பதம்' என்ற பட்டிணத்துக்கு அழைத்துச் செல்வர். அங்கே உயிர் எட்டாவது மாசியப் பிண்டத்தை உண்கிறது. ஒன்பதாவது பிண்டத்தை உயிர், 'துக்கதம் நாதாக்கிராந்தம்' என்ற பட்டிணத்தில் உண்கிறது. இங்கேயே பத்தாவது மாசியப் பிண்டத்தையும் உயிர் உண்கிறது. உறவினர்களால் காளைக் கன்றை விதிப்படி தானம் கொடுக்கப்படாத உயிர்கள் அங்கே கூட்டம் கூட்டமாய் கூச்சலிட்டுக் கொண்டிருக்கும். பதினொராவது மாசியப் பிண்டம், 'அதங்தம்' என்ற ஊருக்கு உயிர் வரும் போது கொடுக்கப்படுகிறது. அடுத்து உயிரை உறையவைக்கும் குளிரை உடைய, 'சீதாப்ரம்' என்ற நகரத்தில் உயிர் பன்னிரண்டாவது மாசியப் பிண்டத்தை உண்கிறது. கம்பளிப்படுக்கையைத் தானம் கொடுத்தவர்களை இக்குளிர் சிறிதும் தாக்காது. அதன்பின் உயிரானது துன்பங்களால் புலம்பியபடி யமபுரியை அடைகிறது.

## 6. பன்னிரண்டு சிரவணர்கள்.

**ய**மபுரியில் பன்னிரண்டு சிரவணர்கள் இருப்பார்கள். அவர்களை ஆராதித்தால் அவர்கள் உயிர்களின் பாவங்களை வெளியிடாமல் புண்ணிய செயல்களை மட்டும் யமனிடம் சொல்வார்கள்.

"**பெ**ருமானே, யமபுரியில் இருக்கும் பன்னிருசிரவணர்கள் யார்? அவர்கள் ஏன் யமபுரியில் வசிக்கிறார்கள். அவர்கள் எவ்வாறு இரகசியமாக மனிதர்கள் செய்யும் பாவங்களையும், புண்ணியங்களையும் அறிகிறார்கள்" என்று கருடன் கேட்டான்.

“**க**ருடா, பிரளயத்தின்போது நான் யோக நித்திரையில் இருந்தேன். எனது நாபிக்கமலத்தில் இருந்து பிரமன் தோன்றி, அவன் என்னைக் குறித்துத் தவம் செய்தான். அதனால் அவன் வேதங்களையும், உயிர்களையும் படைக்கும் ஆற்றலைப் பெற்றான். அட்டதிக்கு பாலகர்களும், ருத்திரனும் தத்தமது தொழில்களைச் செய்து கொண்டிருந்தனர்.

**ஒ**வ்வொரு உயிரும் செய்யும் பாவபுண்ணியங்களுக்கேற்ப நீதி வழங்குவதற்காக யமதர்மன் நியமிக்கப்பட்டான். அவனால் தனியாகச் செயற்பட முடியவில்லை. அவன் நான்முகனிடம் சென்று தன்னால் தனியாக உயிர்கள் செய்யும் பாவபுண்ணியங்களை அறிந்து நீதி வழங்க முடியவில்லை. அதனால் எனக்குத் தாங்கள் உதவி செய்ய வேண்டும் எனச் சொல்ல, நான்முகன் ஒரு தர்ப்பையை எடுத்து அதை நிலத்தில் போட அது பன்னிரண்டு சிரவணராகியது.

“**ய**மதர்மராஜனே, இவர்கள் பிறந்து பிறந்து மரணமடையும் எல்லா உயிர்களினதும் பாவபுண்ணியங்களை அறியும் வல்லமை பெற்றவர்கள். இவர்களின் உதவியோடு உயிர்களின் பாவபுண்ணியங்களை அறிந்து நீதி வழங்குவாயாக” என்று நான்முகன் கூறி அவர்களை ஆசீர்வதித்தான்.

**ம**ரணமடைந்த புண்ணியவான்களின் உயிர்கள் தேவர்களின் விமானத்தில் ஒரு நொடியில் யமலோகம் சென்றுவிடுபவர்கள். பன்னிரண்டு கும்பங்களில் தூய்மையாக அன்னத்தைச் சமைத்து பன்னிரண்டு வேதமோதும் ஒழுக்கமான அந்தணர்களை அழைத்து, அவர்களைப் பன்னிரண்டு சிரவணராக உருவதித்து, அவர்களைப் பூசித்துத் தானம் செய்தால் அவர்கள் யமபுரியில் தானம் வழங்கியவர்களுக்கு அனைத்து நன்மைகளையும் செய்வார்கள். இவர்களின் வரலாற்றைப் பக்தியுடன் கேட்பவர்களும், படிப்பவர்களும் செய்த பாவங்கள் யாவும் நீங்கி விடும். இறந்தவர்களின் சந்ததியினர் அவரை நினைத்து அன்னதானம் செய்தால் யமபுரிக்குச் செல்லும் வழியில் இவர்களுக்குத் தாகமோ, பசியோ எற்படாது. துன்பங்களும் நிகழாது. தீபத்தைத் தானம் செய்தால் அந்தத் தானத்திற்குரிய உயிர் பேரிருள் நிறைந்த யமபுரிக்குச் செல்லும் பாதை ஒளிமிக்கதாக இருக்கும்.

**கா**ர்த்திகை மாதத்தில் வரும் வளர்பிறைச் சதுர்த்தியன்று தீபதானம் அல்லது காளைக் கன்றைத் தானமாகக் கொடுத்தால் உயிர் இன்பமாக இருக்கும் இல்லாவிட்டால் உடலை விட்டு நீங்கிய உயிர் தான் வாழ்ந்த வீட்டிற்குச் சென்று தனது நெருங்கிய உறவினர்களுக்கு முன் அழுது கொண்டிருக்கும். தினமும் அதற்கு அன்புடன் பிண்டமிட வேண்டும். அப்படிச் செய்தால் யமகிங்கரர்கள் அவ்வுயிரைத் துன்பப்படுத்தமாட்டார்கள் அன்புடன் பேணுவர்.

**ய**மபுரிக்குச் செல்லும் பாதையில் இரத்தமழை பொழியும். குடையைத் தானமாகக் கொடுத்தால் பெய்யும் இரத்தமழையில் உயிர் நனையாது செல்லும். இதுபோலச் செருப்பைத்



தானமாகக் கொடுத்தால் அவ்வுயிர் கரடுமுரடான முள் நிறைந்த பாதையால் செல்லும் போது செருப்புப் பாதுகாப்பாக இருக்கும்.

**அ**ப்போது கருடன் பெருமானைக் கேட்டார், "பெருமானே, பத்தானம் என்றால் என்ன? அது ஏன் கொடுத்தல் வேண்டும்".

"**க**ருடா, இறந்த உயிர் கொழுத்தும் வெயிலைத் தாங்குவதற்காகக் குடை கொடுக்கப்படுகிறது. கரடுமுரடான பாதையில் இலகுவாக நடந்து செல்லச் செருப்புக் கொடுக்கப்படுகிறது. தள்ளாடும் நேரத்தில் ஊன்றிக் கொள்ளப் பொல்லுக் கொடுக்கப்படுகிறது. உயிரின் மானத்தைக் காக்க உடுபிடைவைகள் கொடுக்கப்படுகிறது. கிங்கரர்களின் மகிழ்ச்சிக்காக மோதிரம் கொடுக்கப்படுகிறது. யமபுரிக்குச் செல்லும்போது களைப்பேற்பட்டால் இளைப்பாறுவதற்காக ஆசனப் பலகை கொடுக்கப்படுகிறது. உணவு போதாதபோது சமைத்துச் சாப்பிட அரிசி, சட்டிபானை என்பன கொடுக்கப்படுகிறது. தண்ணீர் கொண்டு செல்ல கெண்டி தாமிரச் செம்பு என்பன கொடுக்கப்படுகின்றன. இவை அனைத்தையும் தானமாகக் கொடுப்பது தான் 'பத்தானம்' எனப்படும்.



**ப**ன்னிரண்டு நாட்களும் தண்ணீர்க்குடம் தானம் செய்தால், கிங்கரர்கள் திருப்பியடைந்து உயிரைக் கஷ்டப்படுத்தாது யமபுரிக்கு அழைத்துச் செல்வர். மாத சிரார்த்தம் செய்வதால் யமதூதர்கள் மகிழ்ந்து உயிர்களை அன்புடன் வழிநடத்திச் செல்வர்.

"**ப**ரந்தாமா, பிண்ட சரீரம், கட்டை விரல் அளவான வாயு சரீரம் என இருவேறுபட்ட சரீரங்கள் இருப்பதாகச் சொன்னீர்கள். அதை விபரமாகச் சொல்ல வேண்டும்" என்று கேட்டார் கருடன்.

**இ**றந்தவர்கள் உடனே பெறுவது கட்டை விரல் அளவுடைய வாயு சரீரத்தையே. பிண்டம் கொடுத்தால் மட்டுமே பிண்ட சரீரம் கிடைக்கும். வாயு சரீரம் ஒரு வன்னிமரத்தில் சிலகாலம் தங்கியிருக்கும். அதன் பின் கர்மத்தாலான சரீரத்தைப் பெறுகிறது. கர்மத்தாலான சரீரம் பிண்டசரீத்துடன் இணைத்து கொள்ளும்.



**ப**ன்னிரு சிரவணர்களும் சொல்லச் சொல்ல சித்திரகுப்தன் அவற்றைத் தினமும் எழுதிக் கொண்டிருப்பான். உயிர்களின் பாவபுண்ணியங்களைச் சித்திரகுப்தன் படிக்க யமதர்மராசன் அதற்கேற்ற தண்டனைகளை வழங்குவான்.

### 7. நரக தண்டனைகள்

ஓர் உயிர் மனதால் செய்த பாவங்களுக்குக் கிங்கரர்கள் திட்டுவார்கள். உடலால் பாவம் செய்திருந்தால் கொதிக்கும் எண்ணைக்குள்ப் போட்டு வறுப்பார்கள். அதன்பின் உருக்கிய செம்பாலான தூணைக் கட்டித் தழுவச் சொல்வார்கள் இது பெரும்பாலும் காமம் மிகுந்தவர்களுக்குரிய தண்டனையாகும். இமைக்க முடியாத கண்களை உடைய உயிர்கள் மனதால் பாவம் செய்தால் இத்தகைய கொடிய தண்டனைகள் பெறுபவர்களைப் பார்த்துப் பயப்படுவார்கள். இதுதான் அவர்களுக்குத் தண்டனையாகும்.

"கருடா, யமபுரியில் மொத்தம் 84,60,000 நரகங்கள் உள்ளன. இவற்றுள் இருபத்தெட்டு நரகங்கள் மிகவும் கொடுமையானவை. இப்போது நான் அந்தக் கொடுமையான நரகங்களைப் பற்றிச் சொல்கிறேன்.

1. **தமீஸ்ரம்**

பிறரின் பொருளை அபகரிப்பவர்களையும், பிறரின் மனைவியோடு தொடர்பு வைத்திருப்பவர்களையும், பிறரின் குழந்தைகளைத் திருடுபவர்களையும் இந்த நரகத்தில் தள்ளித் துன்புறுத்துவர். மயக்கமடையும் வரையும் தாக்குதல் நடைபெறும். பின் மயக்கத்தைத் தெளிவித்துத் தாக்குதல் நடைபெறும்.

2. **அந்தாமீஸ்வரம்**



கணவனுக்குத் துரோகம் செய்த மனைவி, மனைவிக்குத் துரோகம் செய்த கணவன் இவர்களை இந்த நரகத்தில் இருத்திப் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியை இவர்களின் கண்களுக்குள்ச் செருகுவார்கள். இதனால் தான் இந்த நரகத்திற்கு அந்தாமீஸ்வரம் என்ற பெயர் உண்டானது.

3. **ரௌரவம்**

பொய்வழக்காடுபவர்கள், பொய்ச்சாட்சி சொல்பவர்கள், தீமைகளைச் செய்து பிறரின் குடும்பங்களை அழிப்பவர்கள் இந்த நரகத்தில் தள்ளப்படுகின்றனர். பிறரை ஏமாற்றியவர்கள் 'ருரு' என்ற என்ற மிருகவடிவத்தைப் பெறுவர். ஏமாந்தவர்களின் துன்பப்பட்டு அழுத கண்ணீர் ருருவிடம் சேர்ந்திருக்கும். ருரு அங்குள்ளோரைப் பயங்கரமாகத் தாக்கும்.

### 4. மகாரௌரவம்

பலரையும் பல்வேறு சம்பந்தப்பட்ட விடயங்களில் ஏமாற்றியவர்களை ருருக்கள் பயங்கரமாகக் கொத்திக் கிழிக்கும் இதனால் இதை மகாரௌரவம் என்பார்கள்.

### 5. கும்பீபாகம்

பறவைகள், பசு, மான், முயல் போன்றவற்றைக் கொன்று தின்றவர்களையும், அவர்களைச் சித்திரவதை செய்தவர்களையும் இங்கே தள்ளுவார்கள். இங்கு எண்ணெய் பெரிய அண்டாக்களில் எந்நேரமும் கொதித்துக் கொண்டிருக்கும். அதிலிட்டு இவர்களை வாட்டி எடுப்பார்கள்.

### 6. கால சூத்திரம்

பெற்றோர்களுக்குத் துன்பம் செய்பவர்களையும், மகான்களைக் கேலிசெய்து துன்புறுத்துபவர்களையும் இந்த நரகத்தில் தள்ளிவிடுவார்கள். இங்கு அனல் போலச் சூரியன் தகிப்பான். எங்கும் நெருப்பு எரிந்து கொண்டிருக்கும். இதனால் உயிரின் சரீரம் எரியும், நா உலரும், பசி வாட்டும், அதனால் அவற்றைத் தாங்கமுடியாத உயிர் அங்குமிங்கும் ஓடும். நிலத்தில் புரளும், துள்ளிக் குதிக்கும், பின் மயக்கமடைந்துவிடும். மயக்கத்தை தெளிவிப்பார்கள். பின் முதலில் இருந்து சித்திரவதை ஆரம்பமாகும்.



**7. அசிய பத்திரம் (வாளலகு)**

தன்னுடைய குலதெய்வங்களை நிந்திப்போர், கவனிக்காது விடுவோர், தான் செய்ய வேண்டிய தர்மங்களைச் செய்யாதவர் ஆகியோரைச் தள்ளிச் சித்திரவதை செய்யும் நரகம் இது. கற்களும், பாறைகளும் நிறைந்த மேடுபள்ளமான நரகம் இது. கத்தியைப் போலக் கூர்மையான ஒருவகை இலைகளால் செய்யப்பட்ட சாட்டையால் இங்குள்ளவர்களை அடிப்பார்கள். அடியைத் தாங்கமுடியாத உயிர்கள் அங்கும் மிங்கும் ஓடும்போது இடறிவிழுவர். அப்போது கூரிய கற்கள் தாக்கும் அதனால் இரத்தம் பெருக மயக்கமடைவர்.

**8. பன்றிமுகம்**

லஞ்சம் வாங்கிக் கொண்டு நீதிக்கு மாறாகத் தீர்ப்பு எழுதுபவர்கள், அகந்தையுள்ளவர்களை அடைக்கும் நரகம் இது. உண்மைக்கு மாறாக வாதாடித் தீயவர்களுக்குப் பொருள் சேர்த்துக் கொடுக்கும் வழக்கறிஞர்கள் பலர் இங்கிருப்பார்கள் இந்த நரகம் பன்றியினது முகம்போன்று அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள யமதூதுவர்கள் இவ் நரகத்தில் உள்ளோரின் கை கால்களை விறகுச் சுள்ளிகளை முறிப்பது போல முறிப்பார்கள். பின் அவற்றை அடித்து நொருக்குவார்கள்.

**9. அந்த கூபம் (பாழடைந்தகிணறு)**

கொலை செய்தவர்களைத் தள்ளும் கிணறு இது. இதன் ஒரு பகுதியில் கூர்மையான கொம்புகளை உடைய மாடுகள் நின்று தமது கூர்மையான கொம்புகளால் தாக்கும். கழுகும், இராஜாளியும் இரத்தம் வழியும் தசையைக் கொத்திக் கொத்தி உண்ணும். கொசுக்களும் வேறு பூச்சிகளும் இரத்தத்தில் மொய்த்து அதை உறிஞ்சிக் குடிக்கும். தேளும், பாம்பும் ஒரு பகுதியில் இருந்து கொத்தும். கொலை செய்தவனின் உடலில் எத்தனை மயிர்கள் இருந்தனவோ அத்தனை ஆண்டுகள் அக்கிணத்தில் வாழவேண்டிய நிலை ஏற்படும்.

10. **கிருமிபோசனம்**

இது லட்சம் போசனை பரப்பளவைக் கொண்டது. சுயநலத்துடன் தான் மட்டும் உண்டு வாழ்ந்தவர்கள், விருந்தினர் வந்திருக்க அவர்களுக்கும் கொடாது தாம் உண்டவர்கள், பிறரை வருத்தியவர்கள், தெய்வநிந்தனை செய்தோர் இங்கு தள்ளப்படுகின்றனர். இங்கே விழுந்தவர்கள் உடனே புழுக்களாகிவிடுவர். அங்கிருக்கும் பெரிய புழுக்கள் இவர்களைக் கடித்துக் குதறும்.

**11. அக்கினிக் குண்டம்**

கொள்ளை அடிப்பவர்களுக்குத் தண்டனை அளிக்கு நரகம் இது. திருடினவர்களை இரும்புத் துடுப்பால் அக்கினி குண்டத்தில் தள்ளி வாட்டி வதைப்பார்கள்.

**12. வஜ்ர கண்டகம்**

பிற ஆடவரோடு உறவு கொண்ட மனைவிமாரையும், எந்நேரமும் தாசிவீடே கதி என்று இருந்து தனது கடமையை மறந்த புருசர்களையும் இங்கே அடைத்து வைத்திருப்பர். பழுக்கக் காய்ச்சப்பட்ட இரும்புத் தூண்கள் பல அங்கே காணப்படும். அத் துண்களைக் கட்டிப்பிடிக்கச் சொல்வார்கள். யமகிங்கரர்கள் சாட்டையால் தொடர்ந்து அடித்தவண்ணம் இருப்பர். அந்தச் சூடேற்றப்பட்ட இரும்புத்தூண்கள் கட்டியணைத்தவரை அவரது பாவம் தீர்த்த பின்பு தான் விடும். அதுவரை அவர்கள் தூணோடு ஒட்டப்பட்டிருப்பர்.

**13. சான்மலி**

நன்மை, தீமை, உயர்வு, தாழ்வு ஆகியவற்றைப் பாராமல் தரம்கெட்ட நிலையில் எவருடனும் கூடிக் களிக்கும் காமமோகம் உள்ளவர்களை இங்கே தள்ளி முட்கள் பல உள்ள இரும்பு ஆயுதத்தால் கொத்திக் கொண்டேயிருப்பார்.

**14. வைதரணி**

இது ஓர் உதிர ஆறு. இதில் பல்வேறு வகையான அசுத்தமான பொருட்கள் கலந்திருக்கும். எலும்புகள், சதைத்துண்டுகள், மலம், சலம் போன்றனவும் அட்டைகளும் கலந்திருக்கும். அத்துடன் முதலைகள், பாம்புகள், திமிங்கிலங்கள் என்பன நீந்திக்கொண்டிருக்கும். வாழ்க்கையில் நெறிபிறழ்ந்தவர்கள் இதில் தள்ளப்படுவார்கள். அங்கு நீந்திக்கொண்டிருக்கும் திமிங்கிலங்கள் விழுங்கி விழுங்கிக் கக்கிக் கொண்டிருக்கும். தேகம் புண்ணாகிச் சீழ்பிடித்து வலியால் துடிதுடிப்பர். வாய் திறந்து அலறினால் வாய்க்குள் தலைமுடி சிக்கிக் கொள்ளும்.

**15. பூயோகம்**

வெட்கம் நாணம் இரண்டையும் விட்டுவிட்டுத் தமது மனம்போன போக்கில் ஊரவர் தூற்ற வாழ்ந்தவர்கள் இந்த நரகத்தில் தள்ளப்படுவார்கள். இது சிறுநீர் நிறைந்த குட்டையாகும். இங்கு தள்ளப்படுவோர் தமக்குள்த் தாமே சண்டை செய்வார்கள். உடல் புண்ணானாலும் அவர்கள் சண்டை செய்வதை நிறுத்தமாட்டார்கள். அதிலிருந்து உயிர்கள் வெளியேற முடியாது. வெளியே செல்லச் செல்ல சளிகளில் வழுக்கி மீண்டும் அக்குட்டையில் விழுவர்.

**16. பிராண ரோதம்**

நாய், கழுதை, காளை போன்ற மிருகங்களைத் தமது தேவைக்காக வளர்த்து அவை வயதானதும் அதிலிருந்து எந்தப் பயனையும் பெறமுடியாதென்று நினைத்து அவற்றைக் கண்காணாத இடங்களில் கொண்டு சென்று விடும் பாவிகளை இந்த நரகத்தில் தள்ளுவார்கள். அவர்களுக்குக் காவலுக்கு நிற்கும் யமதூதுவர்கள் மேலே இருந்து தொடர்ந்து அம்புகளை எய்து இவர்களைக் காயப்படுத்திக் கொண்டிருப்பர். மான், முயல், பன்றி போன்ற காட்டு மிருகங்களை வேட்டையாடி உண்பவர்களும் விற்பனை செய்பவர்களும் இந்த நரகத்தில் தான் தள்ளப்படுவார்கள்.

**17. விசயனம்**

ஆடம்பரமான வாழ்க்கையை விரும்பி பெரும் யாகங்களைச் செய்து பசுக்களைக் கொன்று யாக குண்டங்களில் இட்டு அவற்றை வருத்துவோர் இந்த நரகத்தில் தள்ளப்படுகின்றனர். இவர்களை ஓயாது முள்ச்சாட்டையால் எமதூதுவர்கள் அடிப்பார்கள்.

**18. லாலாட்சம்**

இயற்கைக்கு மாறான விதத்தில் காமம் கொண்டு தனது மனைவியை விபரீதமான காம இச்கைக்கு ஆளாக்குபவர்கள் இந்த நரகத்தில் தள்ளப்பட்டு கொடுமைப்படுத்தப்படுகின்றனர்.

**19. சாரமேயாதனம்**

பகை கொண்டவர்களின் வீடுகளைத் தீயிட்டுக் கொழுத்தி அவ்வீட்டுக்குரியவர்களைத் துன்பப்படுத்துவோரும், தனது நல்வாழ்வுக்காகப் பிறரின் சொத்துக்களை நயவஞ்சகமாகக் கவர்பவர்களும், விசம் கொடுத்து உயிர்களைக் கொல்பவர்களும், பொறாமையால் பிறரைக் கேவலப்படுத்துபவர்களும் இந்த நரகத்தில் தள்ளப்படுவர். இங்கு நாயின் இறைச்சியே உணவாகக் கொடுக்கப்படும். எழுநூறு வேட்டை நாய்கள் இவர்களை எந்நேரமும் கடித்துக் குதறிக் கொண்டிருக்கும். இது ஒரு பயங்கரமான நரகம்.

**20. அவிசி**

தற்பெருமை கொண்டு மற்றவர்களை மதியாது கேடு செய்பவர்கள், உணவை வீணாக்குபவர்கள், ஆணவம் உள்ளவர்கள் அவிசியின் உச்சியில் இருந்து கீழே தள்ளப்படுவார்கள். கரடுமுரடான கற்களையும், பெரும் பள்ளங்களையும் உடைய

இம்மலையில் இருந்து உருண்டு வருபவர்களின் உடல் சிதறும். அங்கங்கள் பிரிந்து மலைகளில் சிதறிக் கிடக்கும். அவற்றை யமகிங்கரர்கள் கூட்டி அள்ளி ஒன்று சேர்த்து உருவமாக்கி மீண்டும் மலை உச்சிக்குக் கொண்டு சென்று தள்ளிவிடுவார்கள். இது தொடர்ந்து நடைபெறும்.

### 21. பரிபாதனம்

மதுபானங்களைக் குடிப்பவர்கள், மதுவை வற்புறுத்திக் குடிக்கச் செய்தோர், போதைப் பொருட்ளை விற்போர், பயன்படுத்துபவர்கள் இந்த நரகத்தில் தள்ளப்படுபவர். இங்கு யமகிங்கரர்கள் நன்கு பழுக்கக் காய்ச்சிய இரும்புச் சாட்டையால் எந்நேரமும் அடித்துக் கொண்டே இருப்பார்கள். நன்றாகக் காய்ச்சித் திரவம் போல வந்த இரும்புக் குழம்பை இவர்களுக்குப் பானமாகப் பருக்குவார்கள்.

### 22. ஷாரகர்த்தமம்

அகம்பாகத்தால் தலைக்கனம் கொண்டு சான்றோரை மதிக்காது அவமதித்தவர்கள் இந்த நரகத்தில் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடப்பட்டு அவர்களின் உடலில் பூரான், மரஅட்டை, வண்டு, தேனீ, எறும்புகள் போன்றவற்றை விடுவார்கள். அவை அவர்களைக் கடித்துக் குதறும். வேதனையைத் தாங்கமாட்டாது அழுதுகொண்டே இருப்பார்கள்.

### 23. ரஷோகணம்

பொருள் தேடுவதற்காக நரபலி கொடுத்து யாகம் செய்தோரும், செய்வித்தோரும், நரமாமிசம் உண்போரும், பிதுர்களுக்கான கடன்களைச் செய்யாதவர்களும், சிசுக்களைக் கொன்றவர்களும் இந்த நரகத்தில் தள்ளபடுபவர். இவர்களால் பாதிக்கப்பட்டோர் கூரிய ஆயுதங்களினால் துண்டு துண்டாக அறுப்பர். பின் ஒன்று சேர்ப்பர். அதன் பின் அறுப்பர்.

### 24. சூலப்ரோதம்

நயவஞ்சகமாக அப்பாவிகளைக் கொன்றவர்கள், தனக்கு எந்தக் கெடுதல்களையும் செய்யாதவர்கள் மீது காரணமின்றிப் பகை கொண்டு அவர்களது பொருட்களைக் கவர்வதற்காகத் துன்பங்களைச் செய்தோர், தற்கொலை செய்து கொண்டவர்கள் இந்த நரகத்தில் அடைக்கப்படுவர். இவர்களை யமதூதுவர்கள் சூலத்தால் குத்துவார்கள். சூலம் குத்திய தசையில் இருந்து வெளிவரும் இரத்தத்தையும் சதையையும் கழுகு இனத்தைச் சேர்ந்த பறவைகள் கொத்தி உண்ணும்.

**25. தந்த சூகம்**

கலப்படப் பொருட்களை விற்று லாபம் சம்பாதிக்கும் வியாபாரிகள், கூலிக்கு வேலையாட்களை அமர்த்திவிட்டு உரிய வேதனம் கொடாதவர்கள் இந்த நரகத்தில் தள்ளப்படுவார்கள். இவர்களை ஐந்து முகம் கொண்ட கடுவாய்களும், ஏழு தலை உடைய கொடிய நாகங்களும், தேள்களும் கொத்திக் குதறும்.

**26. வடரோதம்**

குகைகளிலும் மரப்பொந்துகளிலும் வசிக்கும் தேனீ போன்ற பிராணிகளைத் துன்புறுத்தி அதுகள் சேமித்து வைத்திருக்கும் தேன் போன்ற பொருட்களை எடுத்தோர், பில்லி சூனியம் வைப்போர் நச்சுப்புகை சூழ்ந்த இந்த நரகத்தில் தள்ளப்படுவார்கள். இந் நரகலோகம் முழுவதையும் தீ ஆக்கிரமித்து இருக்கும். எங்கு சென்றாலும் தீ அவர்களை எரிக்கும்.

**27. பர்யா வர்த் தகைம்**

விருந்தினரை மனம் நோகும் படி நிந்தித்தவர்களும், சமித்துக்களைத் தவறாகப் பயன்படுத்துகின்றவர்களும், தண்ணீரை அசுத்தப்படுத்துகின்றவர்களும் இந்த நரகத்தில் தள்ளப்படுவார்கள். அவர்களது கண்களைக் காகங்களும், பருந்துகளும் கொத்திக் கொண்டிருக்கும். நகக் கண்களில் ஊசிகள் ஏற்றப்படும். வேதனையால் எந்த நேரமும் அழுது கொண்டிருப்பார்கள்.

**28. சூசி முகம்**

கடன் வாங்கி விட்டுத் திருப்பிக் கொடாது எமாற்றுபவர்கள், பணத்தைச் சேகரித்து புதைத்து வைத்துவிட்டு அதை எண்ணி மகிழ்பவர்கள், தவறான வழியில் சொத்துக்களைச் சேர்த்தவர்கள் இந்த நரகத்தில் தள்ளப்படுவர். இவர்களின் நாக்கை 'சந்தமிசினி' என்ற ஆயுதத்தல் பிடுங்குவர். பூமியெங்கும் கூர்மையான கத்திகளைப் புதைத்து வைத்து விட்டு இவர்களை அதன் மேல் நடக்க விடுவர்.

உணவுகளை விரயமாக்குபவர்களின் உறுப்புக்களை அரிந்து உப்பிட்டு வாட்டுவர்.

**ஏனைய நரகங்கள்**

**அ**யலவர்கள், இனத்தவர்களைக் காரணமின்றி வேதனைப்பட்டுக் கண்ணீர் சிந்தவைத்தோரை வேதனைப்பட்டவரின் கண்ணீரால் நிரம்பிய பாத்திரத்தில் இட்டு அமுக்குவர்.



**இ**டித்து இடித்துப் பலமாக ஏசி மற்றவர்களைத் துன்புறுத்துபவர்களை உரலில் தள்ளி உலக்கையால் இடிப்பார்கள்.

**சோ**ம்பேறிகளை 'கூர்மகுண்டம்' என்ற நரகத்தில் தள்ளுவார்கள். அவர்களின் உடல் முழுவதையும் ஆமைகள் கடிக்கும்.

**க**ற்றவர்கள், அறிஞர்கள், மூத்தவர்கள் கூறும் அறிவுரைகளைக் கேளாதவர்களை கர்ணவிஷக்குண்டத்தில் தள்ளுவார்கள்.

**கொ**ழுப்பெடுத்து அலைந்தவர்களை மஞ்ஞா குண்டத்தில் தள்ளுவார்கள்.

**ஆ**த்திர மிகுதியால் எதிரிகளின் வீடுகளையும், அவர்கள் விளைவித்த பயிர்களையும், பொதுச் சொத்துக்களை எரிப்பவர்களையும் வன்னிக் (நெருப்பு) கும்பத்தில் தள்ளுவர்.

**த**னக்குப் பிடிக்காதவர்களை எதிரிகள் என நினைத்து நஞ்சிடுபவர்களை விசக் குண்டத்தில் தள்ளுவார்கள்.



**கா**ரணமின்றித் தனது நலனுக்காகக் கோள் சொல்பவர்களை தூஷிகாக் குண்டத்தில் தள்ளிச் சித்திரவதை செய்வார்கள்.

**அ**ப்பாவிகளைக் கொல்பவர்களை சரக்குண்டத்தில் தள்ளிச் சித்திரவதை செய்வர்.

**பி**திர்களின் கர்மாவைச் செய்யாதவர்களை காகக் குண்டத்தில் தள்ளுவர். இங்கே லட்சக்கணக்கான காகங்கள் இருந்து இவர்களைக் கொத்தித் தின்னும்.

**பி**றரைத் தேவையில்லாது வருத்தி இன்பங்காண்பவர்களை தப்பசூரிக் குண்டத்தில் தள்ளி, நெருப்பினால் பழுக்கக் காய்ச்சப்பட்ட இரும்பூசிகளால் இவர்களின் உடலைக் குத்துவார்கள்.

**த**னது கடமைகளைப் பற்றின்றி முழுமையாகச் செய்பவர்களும், கர்மத்தில் பற்றுள்ளவர்களும், புண்ணியம் செய்தவர்களும், சித்தர்களும், யோகிகளும், கொடுமைகள் பலவற்றையும் பாவிகளுக்குச் செய்யும் யமகிங்கரர்களின் கண்களுக்குத் தெரியமாட்டார்கள்.

**இ**ருபத்தெட்டு வகையான நரகங்களும் ஏராளமான கொடிய பல பிரிவுகளைக் கொண்டவை. இவைகளில் உழலாமல் இருக்கவேண்டுமேயானால் ஒழுக்கமாக வாழ்ந்து, ஒழுக்கமான வழியில் பொருளைத் தேடி, புண்ணிய காரியங்கள் பலற்றைச் செய்தல் வேண்டும். அத்துடன் பிதுர்களுக்கான கடமைகளை தவறாமல் செய்தல் வேண்டும். இவ்வாறு வாழ்ந்தால் பேரானந்தத்தைத் தரும் முத்தியின்பத்தைப் பெறலாம்.

## 8. யமபுரியின் உபசாரம்



“**க**ருடதேவனே, இறந்தவர்களுக்காக உப்பு, பருத்தியிலான உடைகள், எள், பாத்திரங்கள் ஆகியவற்றை அவரது சந்ததியினர் விருப்புடன் கொடுத்தால் யமபுரி கர்ம சரீரத்திற்குச் சொர்க்கபுரியாக இருக்கும்.

**இ**றந்தவர்களுக்காக அவரது வம்சத்தினர் கோதுமை, கடலை, எள், கொள்ளு, மொச்சை, துவரை, பயறு முதலான ஏழு வகையான தானியங்களையும், பாத்திரங்களையும் தானமாகக் கொடுத்தால் எப்போதும் அருகிலேயே இருக்கும். தர்மத்துவஜன் என்பவன் அந்தப் புண்ணிய ஆத்மாவைப் பற்றி யமதர்மராஜனுக்குப் புகழ்ந்து சொல்வான்.

**அ**ந்தப் புண்ணியம் செய்த ஆத்மா வன்னி மரத்தை விட்டு இருபது காத வழி போகும் வரை நல்ல மங்கலமான வரவேற்புக் கிடைக்கும்.

**பா**விகளின் கண்களுக்குப் பயங்கரமான அச்சமூட்டும் உருவத்தையும், சிவந்த கண்களையும் உடையவனாகத் தோன்றிப் பயமுறுத்தும் யமதர்மராஜன் புண்ணியவான்களின் கண்களுக்கு அன்புடையவனாகவும், புன்னகையுடனும், மகிழ்வுடனும் தோன்றுவான். புண்ணியவான்கள் அவனது அழகான தோற்றத்தைக் கண்டு ரசித்து மகிழ்வர்.

**பு**ண்ணிய ஆத்மாக்கள் சூரியமண்டல வழியாகச் சத்தியலோகத்துக்குச் செல்லும் வரை யமதர்மராஜன் அவ்வாத்மாவுடன் கூட வந்து வழியனுப்பிவைப்பான். இவ்வாத்மாக்கள் யமபுரிக்கு வந்ததும், யமன் எழுந்து நின்று மிக்க மகிழ்வுடன் வரவேற்பான். யமனுடன் யமகிங்கரர்களும் கூட்டமாக நின்று அவர்களை வரவேற்பார்கள்.



**இ**வர்களுள் அதிக புண்ணியம் செய்தவர்கள் சொர்க்கத்திற்கு உடனே அழைத்துச் செல்லப்படுவர். நரகத்தில் உழல்பவருக்கு பாவங்களுக்கேற்ற தண்டனைகளை அனுபவித்த பின்பே மனிதப் பிறவி கிடைக்கும். பாவங்களையும், புண்ணியங்களையும் கலந்து செய்தவனுக்கு அவன் செய்த பாவ புண்ணியத்திற்கேற்ப மறுபிறவி கிட்டும்.

**ஒ**வ்வொரு வகையான புண்ணியங்கள் செய்தவர்களுக்கே அழகு, அறிவு, செல்வம், புகழ், ஆரோக்கியம் என்பன கிடைக்கின்றன. அங்கக் குறைபாடுகள் இன்றிப் பிறக்கவும் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

**நா**ராயணன் மிகுந்த கவனத்துடன் சொல்லிக் கொண்டிருந்தவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த கருடனுக்கு ஏதோ ஒரு சந்தேகம் வந்து விட்டதென்று அறிந்து தனது பேச்சை நிறுத்திய நாராயணன், “உனக்கு ஏதாவது சந்தேகமிருப்பின் கேள்” என்றார்.

“**மா**தவா, பிரேதஜன்மம் யாருக்குக் கிடைக்கிறது. அதிலிருந்து எப்படி விடுபடுவது என்று நினைத்தேன்” என்றான் கருடன்.



“**க**ருடா, பிறரின் உடைமைகளை வஞ்சகமான முறையில் கவர்ந்தவர்களுக்குப் பிரேத சரீரம் கிடைக்கிறது. ஒருவர் இறந்தபின் அவரது சொத்துக்களைக் குறுக்கு வழியில் அடையும் பாவிகளுக்கும் பிரேத சரீரம் கிடைக்கும். பிரேத சரீரம் எடுத்தவன் பசியோடும் தாகத்தோடும் தனது வீட்டைச் சுற்றிச் சுற்றி வருவான். சிரார்த்த நாளன்று அப்பிரேத சரீரத்தை உள்ளே செல்லவிடாது தடுத்து நிறுத்துவர். பிருதுக்கான பிண்டங்களைத் தாமே உண்பர்.

**வீ**ட்டில் உள்ள பொருட்களை எடுத்து அனுபவிக்க முடியாதபடி செய்வர். தானம் செய்யவிடமாட்டார். அதனால் அந்தக் குடும்பத்தினர் தொடர்ந்து துன்பங்களையே அனுபவிப்பர்.

**வ**ம்சத்தை நாசம் செய்யும் வல்லமையும் அவருக்குண்டு. அவருக்குப் பேரன், பேர்த்திகள் இருந்தால் அவர்கள் கொடிய நோய்களால் வருந்தி மரணமடைவர்.

**தா**னதருமங்களைச் செய்தவர்களையும், பிதுரின் கடமைகளை முறைப்படி நிறைவேற்றியவரையும், அடியார்களைப் போற்றியவர்களையும், மதுமாமிசம் ஆகியவற்றை உண்ணாதவரையும், தெய்வபக்தியுடையவர்களையும் பிரேதஜன்மங்களால் எதுவும் செய்ய முடியாது.

**கு**ழந்தைகள் பிறந்து பிறந்து இறந்து போவதற்கும், ஆண்குழந்தைகள் பிறக்காமல் போவதற்கும், சுற்றத்தவருடன் காரணமின்றி முரண்பட்டுச் சண்டையிடுவதற்கும் பிரேத ஜன்மமே காரணமாகும்.

**ஒ**ருவரது நண்பர்கள் பகைவர்களாவதற்கும், நல்லவர்களை நிந்தனை செய்து வேதனைப்படுத்துவதற்கும், அன்புடன் வளர்த்த பெற்றோரைக் கவனிக்காது விடுவதற்கும், கொலை, கொள்ளை போன்ற கொடிய செயல்களைச் செய்வதற்கும், பயிர்கள் அழிவடைவதற்கும், விளைந்த தானியங்களை அறுவடை செய்ய முடியாமற் போவதற்கும், இழிவான செயல்களைச் செய்து வாழ்வதற்கும், பலம் குன்றுவதற்கும், பெற்ற பிள்ளைகள் விரோதிகளாவதற்கும், வாழ்க்கைத் துணையைப் பிரிந்து வாழ்வதற்கும் பிரேத ஜன்மமாகத்திரிபவரே காரணமாவார்.

**இ**வ்வாறான துன்பங்களையும் துயரங்களையும் அனுபவிக்கும் குடும்பத்தினர் பிரேத ஜன்மத்தைக் கரையேற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**பி**ரேத ஜன்மத்தை எடுத்தவன் மிகவும் கொடுமையான குணங்களை உடையவனாக இருப்பான். அவனது முகம் பயங்கரமாக இருக்கும். பற்கள் உதட்டை விட்டு நீண்டு வாள் போலக் கூர்மையானதாக இருக்கும். தனது உறவினரது கனவில் அடிக்கடி தோன்றிப் பயமுறுத்துவான்.

**கா**ல்நடைகளினதும், வழிப்போக்கர்களினதும் தாகத்தைத் தீர்ப்பதற்காகப் புண்ணியவான்களால் வெட்டப்பட்ட குளங்களைத் தூர்ப்பவர்கள், அதை அபகரிப்பவர்கள், அன்ன சத்திரத்தை வஞ்சகமான முயில் கவர்ந்து, அதை இடித்துவிட்டுத் தனக்கு வீடு கட்டுபவர்கள், அல்லது அதைப் பிறரை ஏமற்றி விற்பவர்கள், கோவிலை இடிப்பவர்கள், கோவிலுக்கெனப் பெற்ற நிதிகளையும், பொருட்களையும் தமது சுகவாழ்வுக்காகப் பயன்படுத்துபவர்கள்,

வயல்களின் எல்லைகளைப் பயமுறுத்தி அகட்டுபவர்கள், ஏரிகளைத் தூர்ப்பவர்கள், ஏரிகளை அடாவடித்தனமாகக் கைப்பற்றி வீடு கட்டுபவர்கள் இவர்கள் இடிமின்னல் தாக்கி மரணமடைவார்கள். அல்லது தற்கொலை செய்வார்கள். இவர்களும் தவறாகத் தீர்ப்பு வழங்கியவர்களும், மாடுகளுக்கு போதிய உணவு, நீர் கொடாதவர்களும் அவற்றைக் கொடுமைப்படுத்துபவர்களும் பிரேத ஜன்மத்தை அடைந்து பல்வேறுபட்ட துன்பங்களுடன் அலைந்து திரிவர்.

## 9. பிரேத ஜன்மம் நீங்குவதற்கான பரிகாரம்

“**சு**வாமி கொடுமை மிகுந்த பிரேதஜன்மம் நீங்குவதற்கு என்ன பரிகாரம் செய்யவேண்டும் என்று கூறுங்கள்” கருடன் கேட்டான்.



“**க**ருடா, எல்லாவற்றிற்கும் பரிகாரம் உண்டு. பிரேத ஜன்மம் நீங்கவேண்டுமானால் தென்னை மரம், அரசமரம் போன்ற மரங்களோடு பயன்தரும் மரங்களான மா, பலா, மாதுளை, வாழை போன்ற மரங்களை நடவேண்டும். இறைவனுக்கு பூசை செய்வதற்கு உகந்த பூமரங்களையும், அர்ச்சிக்கப்படும் இலைகளுக்குரிய மரங்களையும் நட்டு பூசை செய்யும் போது மாலை கட்டுபவர்களுக்குப் பூக்களையும், இலைகளையும் தானமாகக் கொடுக்க வேண்டும். ஆவினங்களின் பசியைப் போக்கப் புற்களை நட்டுப் பராமரிக்க வேண்டும். அவை நீரருந்தக் குளங்கள், கிணறுகள் அமைக்க வேண்டும். பாழடைந்த குளங்களையும் திருத்த வேண்டும். புண்ணிய தீர்த்தங்களில் நீராடித் தானதர்மங்களைச் செய்ய வேண்டும். அத்துடன் ஹோமங்கள் செய்ய வேண்டும்.

**இ**வ்வாறு செய்தால் பிரேதஜன்மம் எடுத்தவரின் உறவினர்களுக்கு ஏற்படும் துன்பங்கள் நீங்கும். துர்க்கனவுகள் வந்தால் அதை அலட்சியம் செய்யாது அதற்கேற்ற பரிகாரம் செய்தல் வேண்டும். சான்றோர் கூறிச் சென்ற தர்ம வழிகளைப் பின்பற்ற வேண்டும். நாமபராயணம் செய்வது மிகவும் சிறந்தது.

**கி**ரகணம், பௌர்ணமி, அமாவாசை, மாதப்பிறப்பு, மஹாளயம் போன்ற புண்ணிய காலங்களில் பிதுருக்களை நினைத்துத் தர்ப்பணம் செய்தல் வேண்டும். இவ்வாறு செய்தால் செய்பவர்களுக்கு பூத, பிரேத, பைசாசங்களால் எந்தத் துன்பங்களும் ஏற்படாது.

பெற்றோரையும், குருவையும் எச்சமயத்திலும் நிந்திக்கவோ, புறக்கணிக்கவோ கூடாது. அவர்கள் தான் கண்கண்ட முதல் தெய்வங்கள். தாய் தந்தைகளையும், குருவையும் பேணுகின்றவர்கள் சேத்திராடனம் செய்யாவிட்டாலும் அது குற்றமாகாது. தாய், தந்தை, குரு ஆகியோரின் மனதை வேதனைப்படுத்துவோர் எந்தப் பூசைகள், கிரியைகள் செய்தாலும் அவற்றால் எந்தவிதமான பயன்களும் எற்படமாட்டாது. பெற்றோர் இறந்த பின் வரும் பன்னிரண்டு நாட்களும் செய்யும் கிரியைகளும், திதியின் போது செய்யப்படும் தானதர்மங்களும் செய்பவர்களுக்கு பெரும் நன்மைகளைக் கொடுக்கும்.



'புத்' என்ற நரகத்தில் இருந்து கிரியைகளை முறைப்படி செய்து அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதால் தான் வெளியேற்றுபவனைப் புத்திரன் என்கின்றனர்.

விபத்தின் மூலம் இறந்தவர்களுக்கும், தற்கொலை செய்து கொண்டவர்களுக்கும் கட்டாயமாகப் பிரேத ஜன்மம் கிடைக்கும். அவர்களுக்கு ஒருவருடம் வரை எந்தக் கர்மாவும் செய்யக் கூடாது. ஒரு ஆண்டு கழியச் சிரார்த்தம் செய்த பின் இறந்தவரின் பிரேத ஜன்மம் நீங்கிவிடும். அது நீங்குவதற்கான கிரியைகளை முறைப்படி செய்தல் வேண்டும்.

இது பற்றி ஒரு வரலாறு உண்டு. அதைச் சொல்கிறேன் கேட்பாயாக. திரேதாயுகத்தில் மகோதயம் என்ற பட்டணத்தைத் தலைநகராகக் கொண்டு பப்ருவாகனன் என்ற அரசன் ஆட்சி செய்து வந்தான். அவன் ஒரு நாள் தனது வீரர்களுடன் தனது ஆட்சிக்குட்பட்ட காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். காட்டின் நடுப்பகுதியில் ஒரு அழகிய புள்ளிமான் மேய்ந்து கொண்டிருந்தது. அதைக்கண்ட அரசன் அதற்கு அம்பு எய்தான். அம்பு மானின் உடலில் பட்டதே தவிர அது இறக்கவில்லை. அது ஓடித்தப்பி விட்டது. உதிரச்சுவட்டைப் பின்பற்றி மன்னனும் வீரர்களும் மானைத் தேடிச் சென்றனர். ஆனால் மானைக் காணவில்லை. அவர்கள் நெடுந்தூரம் நடந்து சென்று இன்னொரு காட்டை அடைந்தனர். அங்கும் மானைக் காணவில்லை.



மன்னன் நெடுந்தூரம் நடந்தமையால் களைத்துவிட்டான். அவனுக்குத் தாகம் எற்பட்டது அவர்கள் நீரைத் தேடிச் சென்றபோது ஒரு தாமரைத் தடாகத்தைக் கண்டனர். மகிழ்வுடன் அரசனும், வீரர்களும் நீரைக் குடித்துவிட்டுக் களைதீர நீராடினர். பின்பு ஓர் ஆலமரநிழலில் அரசன் இளைப்பாறினான். வீரர்கள் மானைத் தேடிப் புறப்பட்டனர்.

**சூ**ரியன் மறைந்து விட்டான். இருள் பரவ அரம்பித்தது. அடர்ந்த காடாக இருந்தமையால் பயங்கரமான சூழல் நிலவியது. திடீரென்று பல பிரேத ஜன்மங்கள், "பசிக்கிறது, தாகமாக இருக்கிறது. எம்மைக் கவனிக்க யாருமல்லையா…? நீர் தாருங்கள், உணவும் தாருங்கள்". என்று அழுதபடி பிரேத ஜன்மங்கள் அலைந்து திரிவதை அரசன் கண்டான்.

**அ**ரசனக்குப் பயமேற்பட்டது. அதிர்ச்சியில் உறைந்து போனான். சில கணங்களில் துணிந்த அரசன், "நீங்கள் யார்? உங்களுக்கு இந்த நிலை ஏன் எற்பட்டது" என்று கேட்டான்.



"**ம**ன்னவா, நான் சைதீச நகரில் வாழ்ந்தவன். வைசிக குலத்தைச் சேர்ந்தவன். திருமணம் செய்தவன். நானும் மனைவியும் மிகவும் மகிழ்வோடு வாழ்ந்து வந்தோம். எல்லா விரதங்களையும் அனுட்டித்தேன். தவறாது கோவிலுக்குச் சென்று வணங்கி வந்தேன். மகான்களை உபசரித்தேன். அவர்கள் மனம் மகிழ்ந்து என்னை ஆசீர்வதித்தனர். ஈ எறும்புக்குக் கூட நான் அறிந்தவரையில் எந்தத் தீமையும் செய்ததில்லை. ஏழை எளியவர்களுக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்தேன். தானதர்மங்களை முறைப்படி செய்தேன். எனது ஆயுள் முடிந்ததும் யமலோகம் சென்றேன். எனக்குப் பிள்ளைகள் இல்லை. உற்றார், உறவினர்களும் இல்லை. அதனால் யமதர்மன் எனக்குப் பிரேத ஜன்மத்தைக் கொடுத்துவிட்டான். நீண்டகாலமாகப் பிரேத ஜென்மத்துடன் அலைந்து திரிகிறேன்"

"**இ**றந்தவர்களுக்குச் செய்யும் எந்தக் கிரியைகளும் செய்யாததால் தான் எனக்கு இந்த நிலை உண்டானது. மன்னவனே என்னை இந்த துன்பத்தில் இருந்து விடுவிப்பதற்காகச் செய்யவேண்டிய கிரியைகள் யாவற்றையும் செய். அதற்காக என்னிடமுள்ள சிறப்புமிக்க ஒரு மாணிக்கத்தை உன்னிடம் தருகிறேன்" என்று கூறி அந்தப் பிரேத ஜன்மம் ஒரு மாணிக்கக் கல்லைக் கொடுத்தது.

"**நா**ன் எந்த வகையில் உனக்குக் கிரியை செய்ய முடியும்? அதற்கான வழிமுறையைக் கூறு" என்று கேட்டான் மன்னன்.

"**ம**ன்னவனே, ஸ்ரீமத் நாராயணனை ஆராதனை செய்து அக்கினி வளர்த்துக் கோமம் செய்தல் வேண்டும். அதன்பின் காளைக் கன்று ஒன்றைத் தானம் கொடுக்க வேண்டும். அந்தணர்களுக்குக் குடை, செருப்பு, மோதிரம், ஆடை, சொர்ணம், வெள்ளி, கம்பளி, புத்தகம் முதலியவற்றைக் கொடுத்தல் வேண்டும்" என்றது அப் பிரேத ஜன்மம்.

“**இ**ங்கே பல பிரேத ஜென்மங்கள் அலைகின்றனவே அத்தனை பேருக்கும் வாரிசுகள் இல்லையா” மன்னன் கேட்டான்.

“**அ**ரசே, சான்றோர், அவலைப் பெண்கள், குழந்தைகள், அங்கவீனர்கள் இவர்களின் சொத்துக்களை வஞ்சகமான முறையில் அபகரித்த பாவிகளுக்குக் கர்மா செய்தாலும் அவர்களை பிரேத ஜென்மத்தில் இருந்து விடுவிக்க முடியாது. மாற்றானின் மனைவியை விரும்பியவர்கள், கன்னிப் பெண்களைக் கெடுத்தவன், தங்கத்தையும், நவரத்திணங்களையும் பிறரிடமிருந்து அபகரித்தவன், செய்நன்றி மறந்தவன், நன்மை செய்தவனுக்குக் கெடுதல் செய்தவன் இவர்களுக்கெல்லாம் இதுதான் தண்டனை. இவர்கள் பிரேத ஜென்மத்தில் இருந்து மீளமாட்டார்கள்” என்றது அந்தப் பிரேத ஜென்மம்.

**மா**னைத்தேடிச் சென்ற வீரர்கள் வரும் குதிரையின் குளம்புச் சத்தம் கேட்டதும் பிரேத ஜென்மம் மறைந்து விட்டது. அரசன் அரண்மனைக்குச் சென்று அந்த பிரேத ஜென்மத்திற்கான கர்மா முழுவதையும் விதிப்படி செய்து முடித்தான். அதனால் பிரேத ஜென்மத்திற்கு விடுதலை கிடைத்தது.







“**க**ருடா, குடங்களில் எண்ணெய்யை நிரப்பி பெரியவர்களுக்குத் தானம் கொடுப்பதும், வெள்ளி, தங்கச் செம்புகளில் பால் அல்லது நெய்யை நிரப்பிக் கொடுப்பதும் விசேசமானது. வெள்ளிச் செம்பையும் தங்கச் செம்பையும் பாலாலும், நெய்யாலும் நிரப்பிக் கொடுப்பது மிகமிக விசேடமானது. இவற்றைக் கொடுக்கும்போது அட்டதிக்குப் பாலகர்களையும் திருமாலையும் ஆராதித்த பின்பு இவற்றைக் கொடுத்தால் செய்த அனைத்துப் பாவங்களும் நீங்கிவிடும். பிரேத ஜென்மம் உருக்குலைந்து அழிந்து விடும்” இவ்வாறு நாராயணன் கூறியதாகச் சூதமுனிவர் சனகாதி முனிவர்களுக்குச் சொன்னார். சனகாதி முனிவர்கள் அவற்றைக் கேட்டுப் பெருமகிழ்ச்சி கொண்டனர்.

**இரண்டாம் பாகம்**

## 1. பிறப்பு இறப்பு விதிகள்

**சூ**தமுனிவர் சனகாதிமுனிவர்களை அன்புடன் பார்த்து, "முனிவர்களே, இதுவரை நான் ஸ்ரீமத் நாராயணன் மானிடர்கள் செய்ய வேண்டிய தான தருமங்களைப் பற்றியும், அதனால் ஏற்படப்போகும் புண்ணிய பாவங்களினால் எற்படும் நரகவேதனைகள் பற்றியும், பிரேத ஜென்மத்தைப் பற்றியும், அதனால் எற்படும் துன்பங்களைப் பற்றியும், அதை நீக்குவதற்கான வழிமுறைகள் பற்றியும் கருடபகவானுக்கு உபதேசித்ததை அப்படியே உங்களுக்குச் சொன்னேன். அடுத்து நாராயணன், கருடபகவானுக்கு கூறியவற்றைக் கூறுகிறேன்.



**ம**ரணத் தீட்டு உள்ள இல்லத்தில் உறவினரல்லாத கோத்திரர், (அயலவர், நண்பர்கள்) சாப்பிட்டால் அவர்களின் ஆயுள் குறையும். அத்துடன் சட்டத்திற்கு மாறாகத் தொழில் செய்பவனுக்கும், பாவம் என்று தெரிந்தும் கொலை செய்பவனுக்கும் ஆயுள் குறுகும். இவர்கள் பலகாலம் நரகத்தில் கிடந்து உழல்வர். உயிர்களைக் கொன்றவர்களுக்கும் இத் தண்டனை பொருந்தும். கருவை அழிப்பவர்களுக்கு மறுபிறவியில் குழந்தைகள் பிறக்காது. தப்பித் தவறிப் பிறந்தால் அது அற்ப ஆயுளில் இறக்கும்.

**தே**கம் நிரந்தரமில்லாதது. அது எப்போது அழியும் என்று யாராலும் சொல்ல முடியாது. அதிகமாகப் பாவங்களைச் செய்பவர்கள் நாயாகவும், நரியாகவும் பிறக்கின்றனர். மரணத்தை விடப் பிறப்பு மிகவும் துன்பமானது. கர்ப்பத்தில் இருக்கும் போது தாய்மாரின் சலம், மலம் முதலியவற்றின் நாற்றங்களைக் குழந்தைகள் சகித்தேயாக வேண்டும். தாய் இருமும் போது சிசுவுக்கு நடுக்கம் எற்படும். தாய் தும்மினால் சிசு அதிரும். தாய்க்கக் காய்ச்சல் ஏற்பட்டால் கர்ப்பம் கொதிக்கம். தாய்க்கு வைசூலி என்ற கொடிய நோய் வந்தால் சிசுவின் பார்வை சில சமயம் பறிபோகும்.

**பி**றவாத வரம் வேண்டும் என்று ஞானிகள் இறைவனிடம் கேட்பது இதற்காகத்தான். ஒழுக்கமும், நேர்மையும், நற்பண்புகளும், தெய்வபக்தியும் கொண்டவர்கள் மறுபிறப்பெடுப்பதில்லை. பொருளைச் சேமித்து வைத்து அதை ரசித்து மகிழாது புண்ணிய கருமங்களைச் செய்ய வேண்டும். தீர்த்த யாத்திரை செல்ல வேண்டும். புண்ணியத்தைப் பெருக்கும் செயல்களில் ஈடுபடவேண்டும்.

**க**டலில் அலைகள் தோன்றத் தோன்றி அழிந்து அழிந்து மீண்டும் மீண்டும் தோன்றுவது போலப் பாவிகளும் பிறந்து பிறந்து இறந்து இறந்து பாவத்தைப் பெருக்கிக் கொள்கிறார்கள். பிறந்தவுடன் ஒரு குழந்தை இறக்குமானால், அது பெரும் பாவம் செய்திருத்தல் வேண்டும். அத்துடன் பெற்றோர்களும் பெரும் பாவம் செய்திருத்தல் வேண்டும். ஆரோக்கியமான பேரன் பேர்த்திகளுடன் நீண்ட காலம் வாழ்பவர்கள் பெரும் புண்ணியம் செய்தவர்களாவர்".



"**க**ருடா, இனி மரணம் பற்றிய சில கர்மங்களைச் சொல்கிறேன் கேள். ஒரு பெண் கருவாகி ஆறு மாதங்களுக்குள் அது கலைந்து போனால் ஆறு நாட்களுக்குத் தாய்க்குத் தீட்டு உண்டு. ஏழு மாதம் என்றால் ஏழு நாட்கள் தாய்க்குத் தீட்டு இருக்கும். இவ்வாறு தீட்டைக் கணக்கிட வேண்டும். தந்தைக்குத் தீட்டுக் கிடையாது. இவ்வாறு கலைந்து போன சிசுவுக்கு கிரியைகள் எதுவும் செய்ய வேண்டியதில்லை.

**ஐ**ந்து வயதுக்குள்க் குழந்தை இறந்தால் அந்தக் குழந்தையின் நினைவாகக் குழந்தைகளுக்கு பாற்சோறு அல்லது தயிர்ச்சாதத்தை தானமாக் கொடுக்க வேண்டும்.

**பொ**ய் சொல்லாமல் வாழ்வது, கடமையைத் தவறாது செய்வது, விட்டுக்கொடுத்து வாழ்வது, பெரியோரை மதித்து அவர்களைப் பணிந்து வாழ்வது, எப்போதும் இன்சொற்களைப் பேசுவது, தான தருமம் செய்வது இவையெல்லாம் பிறவியை அழிக்கும் நற்செயல்களாகும்.

## உ. புத்திரர் செய்யும் கர்மாக்கள்

**பி**றந்து பதினாறு மாதம் வரை வயதுள்ள குழந்தையைச் சிசு என்றழைப்பர். மூன்று வயது வரை அது பாலகன். ஆறு வயது வரை குமரன். ஒன்பது வயது வரை பௌண்டகன். பதினாறு வயது வரை கைசோரன் என்று அழைக்கப்படுவர்.

**ஐ**ந்து வயதிற்குள் குழந்தை இறந்தால் ஊரில் உள்ள குழந்தைகளுக்குப் பாலும் பாயாசமும் கொடுத்தல் வேண்டும். அந்தக் குழந்தை மரணமடைந்து பதினொராம் நாளும் பன்னிரண்டாம் நாளும் சாத்திரங்களில் கூறப்பட்ட கர்மாக்களைச் செய்தல் வேண்டும்.

**ஐ**ந்து வயதிற்கு மேல் பன்னிரண்டு வயது வரை உள்ள குழந்தை இறந்தால் விருஷோம் சர்க்கம் நடத்த வேண்டும். அப்போது குடம், குடை, தீபம் முதலியவற்றைத் தானமாக வழங்க

வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் மறுபிறிவியில் மரமாகப் பிறந்து தனது உறுப்புக்களைத் தானம் செய்ய நேரிடும்.



**த**ந்தையின் உயிரின் ஒரு பகுதி தான் மகனாகப் பிறக்கிறது என்று சாத்திர நூல்கள் கூறுகின்றன. அதனால் தந்தை இறந்தால் மகனும், மகன் இறந்தால் தந்தையும் இறுதிக் கடன்களைச் (கர்மா) செய்தல் வேண்டும்.

**சூ**ரியன் ஒருவன், அது போலச் சந்திரனும் ஒருவன். உலகில் உள்ள நீர்நிலைகளைச் சென்று பார்த்தால் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சூரியனும், சந்திரனும் தோன்றுவர். அது போல ஒரு தகப்பனுக்குப் பல பிள்ளைகள் பிறக்கின்றனர். அவர்களின் சாயலும் குணமும் தந்தையைப் போலவே இருக்கும்.

**இ**வ்வாறு நாராயணன் கூறும் போது கருடன் குறுக்கிட்டு, "மாதவா, அப்படியானால் குருடனுக்குக் குருட்டுப்பிள்ளையும், ஊமைக்கு ஊமைப்பிள்ளையுமல்லவா பிறக்க வேண்டும். அப்படி நடப்பதில்லையே" என்றான்.



"**க**ருடா, நல்லதொரு கேள்வியைக் கேட்டாய். இது அந்தந்தக் குழந்தைகள் செய்த புண்ணியங்களால் ஏற்படுவது. ஒரு பெற்றோருக்கு இரு பிள்ளைகளில் ஒன்று பெரும் செல்வந்தராகவும் மற்றது ஏழையாகவும் இருப்பது. அது போல் ஒருவர் ஒழுக்கசீலராகவும் மற்றவர் ஒழுக்கமில்லாதவராகவும் இருப்பர். அதற்குக் காரணம் அவர்கள் முற்பிறப்பில் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பிறவிகள் எடுத்துச் செய்த புண்ணியபாவங்களாகும். பெற்றோரது குணவிசேடங்களுடன் தாத்தாவினதும் பாட்டியினதும் குணங்களும் பாவ புண்ணியங்களும் இதில் சேர்கின்றன.

**ஒ**ருவன் தனது மனைவி பெற்ற பிள்ளையின் முகத்தை முதன் முதலாகத் தரிசித்தவுடன் 'புத்' என்ற நரகத்தில் விழுவதில் இருந்து தப்பிவிடுகிறான். புத்திரப் பேறு இல்லாதவன் நரகத்தை அடைவதாக வேதம் சொல்கிறது. ஒருவனது சந்தானத்தைக் கண்டு பிதுர்தேவதைகள் மிக்க மகிழ்ச்சி கொள்ளும்.

**ஒ**ருவனுக்குப் பத்துப் புத்திரர்கள் பிறந்தாலும், மூத்த புத்திரனே தந்தைக்குரிய ஈமச்சடங்ககளையும், கிரியைகளையும் செய்தல் வேண்டும். ஏனைய புதல்வர்கள் பூமியில் மகிழ்வுடன் அவர்கள் வாழ உதவி செய்தல் வேண்டும்.

**ஒ**ருவன் தனது பேரனைப் பார்த்தபின் மரணமடைந்தால் அவன் முத்தியடைவான். வரதட்சனை வாங்காமல் ஒரு கன்னியை மணந்து. அவளை எந்தக் குறையுமில்லாமல் மகிழ்வுடன் வாழவைத்து, அவளுக்கொரு மகன் பிறந்தால், பிறந்த மகன். அக்குடும்பத்தின் இருபத்தொரு தலைமுறையினரைக் கரையேற்றுவான்.

**த**னது குலத்தில் பிறந்த நல்லொழுக்கமும் பண்பும் நிறைந்த கன்னியை மணந்து அவள் மூலம் பெறப்படும் மகனே சற்புத்திரனாவான். அவன் தான் பெற்றோருக்கு இறுதிக்கிரியைகள் (கர்மா) செய்யத் தகுதியானவன். காதல் கிழத்தியின் (வேறுபெண்களின்) பிள்ளைகளுக்கு அவ்வுரிமை கிடைக்காது. கிடைத்தாலும் பலன் எதுவும் இராது. காதல் கிழத்தியின் மகன் ஆண்டு தோறும் சிரார்த்தம் கொடுக்கலாம். தந்தையின் நினைவாகத் தானதர்மம் கொடுக்கலாம்.

## ૩. கணவன் மனைவி



**ம**ரணமடைந்தவர்களுக்கு ஒரு வருடத்திற்கு அனைத்துக் கிரியைகளையும் தவறாது முறைப்படி செய்தல் வேண்டும். அவருடைய வம்சத்தில் அவருக்கு முன்பு இறந்தவரின் பிண்டத்தோடு இவருக்குரிய பிண்டத்தையும் சேர்க்கும் சபிண்டிகரணம் என்ற கிரியையைத் தவறாது சாத்திர முறைப்படி செய்தல் வேண்டும். இந்தச் சடங்கை நடத்துவதன் மூலம் மாண்டவரது பிரேத ஜென்மம் நீங்கிவிடும். பின் உயிர் தேவர்களோடு சேர்ந்து கொள்ளும் இல்லாவிட்டால் பிரேத ஜென்மத்துடன் அலைந்து திரியும்.

**ஒ**ருவர் இறந்த பன்னிரண்டாவது தினத்திலும், மூன்றாவது பட்சத்திலும், ஆறாவது மாதத்திலும் சபிண்டிகரணம் என்ற கர்மாவைச் செய்தல் வேண்டும். இந்தச் சடங்கை நடத்தும் வரை மரணமடைந்தவர் பிரேத ஜென்மத்துடன் தான் இருப்பார். அதனால் சபிண்டிகரணம் முடிக்கும்வரை பிள்ளை தனது வீட்டில் சுபகாரியம் எதையும் நடத்தக்கூடாது. அத்துடன் சுப நிகழ்வுகளுக்குச் செல்லவும் கூடாது. சுபிண்டிகரணம் முடிந்தவுடன் இறந்தவர் பிரேத ஜென்மத்தை விட்டு நீங்கி பிதுர்த்துவர் பெற்று மிக்க மகிழ்வுடன் இருப்பார்.

**ச**பிண்டிகரணம் முடிந்த பின்பு தாய், தந்தையின் வம்சாவளியில் மூன்று தலைமுறையினருக்குச் சிரார்த்தம் செய்ய வேண்டும். இது மிகவும் முக்கியமானதாகும்.

**பி**ள்ளைகள் இல்லாதவர்களுக்கு இறந்தவரின் மூத்த சகோதரன் கர்மாச் செய்யலாம். இல்லாவிட்டால் இளைய சகோதரன் செய்யலாம். இவர்களில்லாத இடத்து இவர்களின் புத்திரர்கள் கர்மவைச் செய்யலாம். இவர்களும் இல்லாவிட்டால் இறந்தவரின் மனைவி தர்ப்பணப்புல்லை வாங்கி கிரியையைச் செய்யலாம்.



**பி**ள்ளை இல்லாத பெண் இறந்தால், அவளது கணவன் கர்மாவைச் செய்ய வேண்டும்.

**பி**ண்டத்தைச் சேர்த்த பின்பு மூன்று தலைமுறையினர்க்குத் திதி கொடுக்காவிட்டால் பாவம் சேரும். அத்துடன் சிரார்த்தம் செய்பவனும் அதை நடத்தும் புரோகிரனும் நரகத்தைச் சென்றடைவர்.

**இ**றந்தவருக்குக் கிரியை செய்யப் பலர் இருந்தாலும் ஒரு வருடத்திற்கு ஒருவரே சகல கர்மாக்களையும் செய்தல் வேண்டும். அந்த ஒரு வருடமும் நித்திய திதி செய்ய வேண்டும். அதன்பின் ஒரு குடத்தில் நீரை நிறைத்து 'உதககும்ப' தானம் செய்தல் வேண்டும். இறந்தவருக்குரிய சடங்குளைச் சாத்திர விதியின்படி செய்தால் இறந்தவர் விமானம் ஏறித் தேவருலகை அடைவார்.

**ஒ**ரு பெண் பதிவிரதையாக வாழ்ந்து, கணவன் இறந்தவுடன் தானும் இறந்தால் அவளுக்கு நற்கதி கிடைக்கும். அவளது கணவன் மகாபாவியாக இருந்தாலும் அவளது கற்பு கணவனையும் அவளோடு சேர்த்துச் சொர்க்கத்திற்கு அனுப்பும்.

**இ**றந்த பெற்றோருக்கு அவர்களது மகன் ஒரு சபிண்டீகரணத்தைச் செய்தால் போதும். சிரார்த்தம் மட்டும் தனித்தனியாகச் செய்தல் வேண்டும்.

**க**ணவனைத் தெய்வமாகக் கருதி வாழுங் காலத்தில் அவனை மகிழ்வுடன் வாழவைத்து, கணவனது உறவினருடனும், மற்றவர்களுடனும் கருணையுடன் வாழ்ந்த ஒரு பெண் கணவனோடு உயிர் துறந்தால் அவள் மூன்றரைக் கோடி தேவ ஆண்டுகள் தனது கணவனோடு சொர்க்கத்தில் மகிழ்ந்திருப்பாள்.

**க**ணவன் இறந்த பின் வேறொரு ஆடவனுடன் வாழும் பெண் பிறந்த வம்சத்துக்குத் தோசத்தை உண்டாக்குவாள். அவளால் அக்குடும்பத்திற்குப் பெரும் களங்கமேற்படும். இறந்தபின் அவள் நரகலோகத்தில் துன்புறுத்தப்படுவாள். கணவன் கொடியவனாகவோ, தீயவனாகவோ இருந்தாலும் அதைச் சமாளித்துக் கணவனோடு அன்பாகவும், பண்பாகவும் நடந்து அவனையே தெய்வமென்று எண்ணிக் கனவுடன் வாழும் பெண்ணைத் தேவர்களும் மதித்துப் போற்றி வணங்குவர். கணவனுக்குச் சலக வழிகளிலும் மனைவி உறுதுணையாக இருந்து சேவை செய்வது பத்தினிப் பெண்களது பண்பாகும்.

**தா**லி கட்டிய கணவனை மதிக்காமல் தான் நினைத்தபடி வாழ்கின்ற பெண், இறந்தபின்பு கொடிய நரக உலகை அடைகிறாள். மறுபிறப்பில் மிகவும் கொடிய ஒருவனைக் கணவனாக அடைந்து பெருந்துன்பப்படுவாள்.

“**க**ருட தேவனே, இறந்தவன் மோட்சமடையும் வழிகளைப் பற்றியும், கற்புக்கரசியாக வாழும் ஒரு பெண்ணின் சிறப்புக்கள் பற்றியும் இதுவரை கூறினேன். வேறு ஏதாவது சந்தேகம் இருந்தால் கேள்” என்று கேட்டார் நாராயணர்.

## 4. கிரியை நடத்துதும் முறைகள்

“**சு**வாமி, இறந்தவருக்காகக் கிரியை செய்யும்போது அனுசரிக்க வேண்டிய விதிமுறைகளைக் கூறுங்கள்” என்று கருடன் கேட்டான்.

“**க**ருடதேவனே, ஒருவன் சற்புத்திரனைப் பெறாவிட்டால் அவனுக்கு எவ்வுலகிலும் இன்பம் கிடைக்க மட்டாது. பெற்றோரை மதித்து அவர்களுக்குச் சேவை செய்து, தெய்வத்தைப் பற்றின்றி வணங்கி, பிதிர்களின் கர்மக்களைச் சாத்திர விதிப்படி செய்பவர்களுக்கே சற்புத்திரர்கள் பிறப்பார்கள். முதலில் நல்ல குலத்தில் பிறந்த ஒழுக்கமுள்ள ஒரு கன்னிப்பெண்ணை அக்கினியைச் சாட்சியாக வைத்து திருமணம் செய்தல் வேண்டும். அவளுடன் அன்பாகவும், பண்பாகவும், ஒழுக்கமாகவும் வாழவேண்டும். வாழும் போது வரும் விருந்தினர்களை அன்புடன் வரவேற்று பண்புடன் அவர்களுக்கு உதவி செய்து வாழ வேண்டும். ஒழுக்கமான வழிகளில் பொருளைத் தேட வேண்டும். பிறரின் பொருட்களுக்கு ஆசைப்படாதிருத்தல் வேண்டும். இவ்வாறு வாழ்ந்தால் தீர்க்காயுளுடன் உள்ள நோயற்ற நற்பண்புகளை உடைய சற்புத்திரன் பிறப்பான். இவ்வேளையில் மனைவிக்குக் கருச்சிதைவு ஏற்பட்டால் கணவனுக்கு நற்கதி கிடைக்காது”.

**கி**ரியை செய்யத்தக்க இடத்தை முதலில் தேர்ந்தெடுத்தல் வேண்டும். அதன்பின் அதைச் சுத்தப்படுத்த வேண்டும். அசுத்தமான இடங்களில் செய்யப்படும் பூசைகள், கிரியைகள் நற்பயனைத் தராது. அசுத்தமான இடங்களில் பூத, பிரேத, பசாசுகள் கூடி நின்று கிரியைகளை

உரிய முறையில் செய்யவிடாது குழப்பிக் கொண்டிருக்கும். சுத்தம் செய்யப்பட்டால் அவ்விடத்திற்குத் தேவர்கள் வந்து நின்று சம்பந்தப்பட்டவர்களை ஆசீர்வதிப்பார். அசுத்தமான இடங்களில் செய்யப்படும் சடங்குகள் இறந்தவரைச் சென்றடையப் பூத, பிரேத பசாசுகள் விடமாட்டார். அதனால் அந்த உயிர் நரகத்தில் இருந்து விடுபட முடியாது துன்பப்படும்.

“**நா**ராயணா, பிதுர் கர்மாவைச் செய்யும்போது எள்ளையும் தர்ப்பையையும் உபயோகப்படுத்துவார்கள் இதற்கான காரணத்தை தயவுசெய்து எனக்குச் சொல்லுதல் வேண்டும்” கருடன் கேட்டான்.

“**க**ருடா, எள் என்ற தானியம் எனது வியர்வையில் தோன்றியது. அது தூய்மையானது மட்டுமல்ல. பரிசுத்தமானது. எள்ளுடன் கலந்த உணவுகள் (எள்ளோதரை) எனக்கு மிகவும் பிரியமானவை. அத்துடன் எள் என்ற தானியம் சகல பீடைகளையும் போக்க வல்லது. எள்ளையும், எள்ளில் இருந்து பெறப்படும் எண்ணையும் தானம் செய்தால் பாவங்கள் யாவும் நீங்கிவிடும். சிரார்த்தம் செய்யும்போது கறுப்பு எள்ளைப் பயன்படுத்திப் பட்சணங்கள் செய்தால் பிதுர்த்தேவதைகள் மகிழ்ச்சியடைவார்.

**எ**ள்ளில் இருந்து எடுக்கும் நல்லெண்ணையில் தீபம் ஏற்றினால் கெட்ட சக்திகள் அனைத்தும் விலகிவிடும். எள்ளுப் பிண்ணாக்கைச் சாப்பிடும் பசுவின் பால் நோய்களைப் போக்கும் சக்தி வாய்ந்தது.

**த**ர்ப்பையின் ஒரு நுனியில் பிரமாவும், மறு நுனியில் சிவனும், நடுவே நானும் வாசம் செய்கிறோம். இது யுக ஆரம்பத்தில் முதன் முதலில் ஆகாயத்தில் தோன்றிய சூசகப் புல்லாகும்.

“**வி**ரிஞ்சேனஸதோத்பன்ன - பரமேஷ்டி நிஸர்கஜ!

நிதஸர் வாணி பாபநிதர்ப்ப - ஸ்வஸ்தி சுரேபவ!”

**எ**ன்ற சுலோகத்தைச் சொல்லிய பின்புதான் தர்ப்பைப் புல்லைப் பறிக்க வேண்டும். தர்ப்பை இல்லாமல் எந்தக் கிரியைகளும் செய்ய முடியாது. தர்ப்பைக்கு நிர்மால்யம் என்ற தோசம் இல்லை. அதனால் பயன்படுத்திய தர்ப்பையை மீண்டும் மீண்டும் பயன்படுத்தலாம்.

**ஏ**காதசியின் விரதம் அனுட்டித்தல், துளசியை வணங்கல், பசுவை வணங்கல், பகவத் கீதையைப் படித்தல், எனது பாதங்களைத் தொழுதல் இவற்றை முறைப்படி செய்து வந்தால் சம்சாரசாகரனத்தைக் கடக்கலாம். இவை தெப்பமாகப் பயன்பட்டு உயிர்களைச் சம்சார சாகரத்தைக் கடக்கச் செய்யும். இவற்றைக் கட்டியிருப்பது தர்ப்பைப் புல்லாலே.

**ம**னிதனது பிறப்பில் இருந்து இறப்புவரை பின் கர்மா செய்யும் போதும் கூடத் தர்ப்பைப்புல் பயன்படுத்தப்படுகிறது. கோவில்களில் கும்பாவிசேகம் நடைபெறும் போது தங்கக் கம்பி அல்லது வெள்ளிக் கம்பியைப் பயன்படுத்த வேண்டிய இடங்களில் அவற்றிற்குப் பதிலாகத் தர்ப்பைப்புல்லையே பயன்படுத்திக் கிரியைகளை நிறைவு செய்கின்றனர். தர்ப்பையை நீரில் வைத்தாலும் அது அழுகாது. தண்ணீர் இல்லாவிட்டாலும் வாடிப் பாதிப்படைய மாட்டாது. தூய்மையான புனிதமான புல் என்பதால் அதற்குப் 'தூப்புல்' என்ற பெயரும் உண்டு. கிரகணம் நடைபெறும் காலங்களில் தர்ப்பைக்கு வீரியம் அதிகரிக்கும். அதனால் இதை அழிப்பர். ஆலயங்களில் கிரியைகளுக்காக அமைக்கப்படும் பந்தல் கால்களில் தர்ப்பையைக் கட்டினால் நடக்கும் கிரியைகள் மிகமிகச் சிறப்பாகக் குறைகள் ஏதுமின்றி நடைபெறும்.

**ஒ**ருவர் இறக்கும் நிலையில் இருப்பரேயானால், அவரைக் கோமயத்தால் மெழுகிய தரையில் தர்ப்பைப் புற்களைப் பரப்பி, அதன் மீது எள்ளைப் பரவி அதன் மீது படுக்கவைக்க வேண்டும். அதன் பின் அவரது கைகளில் தர்ப்பைப் புல்லையும், துளசி இலையையும் கொடுத்து எனது நாமங்களைக் கூறியபடி இறப்பாரேயானால் அவன் நிட்சயமாக வைகுண்டத்தை அடைவார்.

**தா**னம் கொடுக்கும்போது தானம் கொடுக்கப்படும் பொருட்களோடு துளசியையும் சேர்த்துக் கொடுத்தால் அதன் மகிமை அதிகரிக்கும். உப்பு வைகுண்டத்தில் உண்டானது. அதனால் உப்பைத் தானம் செய்தால் மேன்மையான வாழ்வு கிடைக்கும். இறக்கும் தறுவாயில் உப்பைத் தானம் செய்தால் சொர்க்கலோக வாசல் திறந்து அவரை வரவேற்றும்.

## 5. தானத்தின் மேன்மை

**ப**ருத்தியைத் தானம் செய்வது மிகவும் சிறந்தது. ஏனெனில் மானத்தைக் காக்கும் ஆடைகளைச் செய்யப் பருத்தியே உபயோகிக்கப்படுகிறது. உபநயனத்தின்போது பூநூலைச் செய்வதற்கும் பருத்தியாலான நூலே பயன்படுத்தப்படுகிறது. அதனால் பருத்தியைத் தானம் செய்வதை மகாதானம் எனச் சிறப்பித்துக் கூறுவர். பருத்தியைத் தானம் செய்பவர் கையாலயத்தில் வாசம் செய்ய வாய்ப்புக் கிடைக்கும். பருத்தியைத் தானம் செய்பவன் உயர்ந்த தனவந்தக் குடும்பத்தில் பிறப்பான். அழகிய மேனியும், தீர்க்காயுளும் பெற்று பெயரோடும், புகழோடும் வாழ்வான். அவனுக்குச் சொர்க்க வாழ்வு கட்டாயம் கிட்டும்.

**கோ**தானமும், பூமிதானமும் செய்தால் கொடிய பாவங்கள் யாவும் அழிந்துவிடும். இவற்றைச் சாதாரணமானவர்களுக்குக் கொடுக்கக் கூடாது. ஒழுக்கமுள்ள பெரியோர்க்குக் கொடுத்தல் வேண்டும்.

**ஒ**ரு மனிதன் இறக்கும் தறுவாயில் கொடுக்கும் தானம் சிறந்த பயனை அளிக்கும். கிரகண காலமும் தானம் கொடுப்பதற்கு உகந்த புண்ணிய காலமாகும். வாழும்போது கொடுக்கின்ற சுவர்ண தானமும் தானியத் தானமும் அப்பிறவியில் செய்த பாவங்களையெல்லாம் போக்கிவிடும். இறக்கப்போகும் வேளையில் இரும்பைத் தானம் செய்தால் முத்தியடையலாம். யமன் அத்தானத்தால் மகிழ்ந்து தண்டனையைக் குறைப்பான். எள்ளைத் தானமாகக் கொடுத்தால் கொடுத்தவருக்கு யம பயம் இராது. பருத்தியைத் தானம் செய்தால் செய்பவர்களை யமதூதர்கள் கருணை கொண்டு துன்புறுத்தமாட்டார்கள். நவதானியங்களைத் தானமாகக் கொடுத்தால் யமதூதர்கள் மிக்க மகிழ்வடைந்து உயிருக்கு வேண்டியதைச் செய்வார்கள்.

**ஒ**ருவன் மரணப்படுக்கையில் இருக்கும்போது என்னைத் துதித்தானேயானால், அவனுக்கு வைகுண்டத்தில் நிரந்தரமாகத் தங்க இடம் கிடைக்கும். தந்தை இறந்தபின் மகன் செய்யும் பெரிய சிரார்த்தத்தை விட மரண காலத்தில் அவன் தந்தைக்காகக் கொடுக்கும் தானங்கள் அதிக பலனைத் தரும்.

“**க**ருடா, பஞ்சபூதங்களாக நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தும் எனது சொரூபமென அனைவரும் உணர வேண்டும். கொடுப்பவனும் நானே. வாங்குவதும் நானே. உயிர்கள் முற்பிறப்பில் செய்த பாவ புண்ணியங்களுக்கேற்பவே சொர்க்கமும் நரகமும் கிடைக்கின்றன.

“**சு**பர்ணா எனது தலங்களில் தானம் செய்பவர்கள் கூடுதலான பலனை அடைகின்றனர். பூதானம் செய்தவன் அநேக ஆண்டுகள் சொர்க்கத்தில் இன்பமாக இருப்பான். தீப தானம் செய்பவன் இருட்டில் யமலோகம் செல்லும் போது ஒளிமிக்க விளக்கு அவனுக்கு வழிகாட்டும். யமதூதர்கள் அவனை மகிழ்வுடன் அழைத்துச் செல்வர். அவனுடைய மூதாரையர் அங்கிருந்தால் அவன் அவர்களையும் அழைத்துக் கொண்டு சொர்க்கத்திற்குச் செல்வான்.

**க**ருவாக உயிர் உருவான அன்றே அதன் எதிர்காலம் நிர்ணயிக்கப்படுகிறது. அதனால் அதன் இறப்பும் தீர்மானிக்கப்படுகிறது. எப்போது இறப்பேன் என்று தெரியாத உயிர், உயிரோடு இருக்கும் போதே தான தர்மங்களைச் செய்து தனது மறுபிறவி சிறப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடல் வேண்டும். பின்பு செய்யலாம் என்று நினைத்தால் உயிரின் முடிவுகாலம் எப்போதென்று தெரியாது இருக்கையில் மறுநாள்க் கூட மரணம் எற்படலாம். அதனால் எதையும் உடனே செய்துவிடல் வேண்டும்.

**ஆ**சனப் பலகையையும், தனது சம்பாத்தியத்தில் சமைத்த உணவுகளையும், செப்பு பாத்திரங்களையும் தானம் செய்பவன் மரணமடைந்தால் ஆகாய மார்க்கமாகப் பயணம் செய்து சொர்க்கத்தை அடைவான். யானை, குதிரை முதலியவற்றை கோவிலுக்குக் கொடுப்பவர்களுக்கு அதிக புண்ணியம் கிடைக்கும். சுமங்கலிகளுக்கும், கன்னிப் பெண்களுக்கும் நவராத்திரி,

பௌர்ணமி போன்ற புண்ணிய காலங்களிலும், தர்ப்பண சிரார்த்த காலங்களிலும் பிராமணர்களுக்குத் தாம்பூலம் கொடுத்தாலும், அர்ச்சனைக்குப் பூக்கள் பறித்துக் கொடுத்தாலும் யமகிங்கரர்கள் அவர்களைத் துன்பப்படுத்தமாட்டார்கள். உடைகளைத் தானமாக வழங்கபவரின் கண்களுக்கு யமன், தர்மராஜனாகக் காட்சி கொடுப்பான்".

"**சு**வாமி, உடலில் இருந்து எவ்வாறு உயிர் பிரிந்து செல்கிறது என்பதைக் கூறவேண்டும்".

"**சு**பர்ணா, சாதாரண மனிதர்களின் உயிர் கண், மூக்கு, வாய், காதுகள் வழியாக சொட்டு நீராகவோ, பால் உற்றியிருந்தால் பாலாகவோ, விபத்தில் காலமானால் உதிரவடிவிலோ வெளியேறும். ஞானிகளின் உயிர் கபாலம் விரிய வெளியேறும். சிலருக்கு வியர்வை உடாகவும் வெளியேறும். பாவிகளின் உயிர் பலவிதமான துன்பங்களைப்பட்டு மேற்சொன்ன வழிகளால் வெளியேறும்".

"**உ**யிர் பிரிந்த பின் உடல் விறைத்து மரக்கட்டையாகிவிடும். மானிடரின் உடல் பசி என்ற அக்கினியையும், காற்று என்ற வாயுவையும், நீர் என்ற அப்புவையும் கொண்டுள்ளது. ஆகாயம் என்ற உடலில் மண்ஜீரணமாகிச் சக்தியை வெளிப்படுத்தும். (மண்ணில் விளையும் பொருட்கள்) காமம், குரோதம் முதலான ஆறு தீயகுணங்களையும் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய புலனுறுப்புக்களையும் கொண்டது உடல்.

**இ**வையாவும் உடலுள் கள்வர்களைப் போல மறைந்திருந்து ஒன்றோடு ஒன்று கலந்திருக்கும். உயிர் உடலை விட்டு நீங்கும்போது இவையாவும் காற்றோடு கலந்துவிடும். மறுபடியும் கர்ம வினைப்படி இவையாவும் சேர்ந்து ஜெனனம் ஆகும். புண்ணியம் செய்த உயிர் நல்ல குலத்தில் ஆரோக்கியம் மிக்கதாகப் பிறக்கும். பாவம் செய்த உயிர் வறிய குலத்தில் பிறக்கும். அங்கவீனனாகவும் பிறக்கும்.

**த**சை, எலும்புகளாலும், நரம்புகளினாலும் பிணைக்கப்பட்டுள்ளது. மலமும், சிறுநீரும், வியர்வையும் கழிவுகளாகும். இவை நவத்துவாரங்கள் வழியாகவும், உரோமத்துவாரங்கள் வழியாகவும் வெளியேறும். ஊடலை விட்டு உயிர் பிரிந்ததும் இயக்கம் நின்றுவிடும். ஆனால் மாயை மட்டும் தரித்திருக்கும். தோவர்களுக்குச் சரீரம் உண்டு. ஆனால் வயோதிபம் அடையாது.

## 6. தாம்பத்தியம், பந்தம்

"**நை**மிசாரண்ய முனிவர்களே, அடுத்து மானிட உடல் எப்படி உண்டாகிறது என்று கருடபகவான் கேட்டார். அதற்குச் ஸ்ரீமத் நாராயணன் கூறிய பதிலைக் கூறுகிறேன் கேளுங்கள்".

“**க**ருடா, ஆணும் பெண்ணும் தாம்பத்திய உறவு கொள்வதால் கரு உண்டாகிறது. அது தாயின் வயிற்றில் தங்கியிருந்து வளர்ந்து பத்தாவது மாதம் பிறக்கிறது. பெண் மாதவிலக்கு ஏற்படும் நான்கு நாட்களும் ஒதுங்கியிருத்தல் வேண்டும். அவ்வேளையில் அவளைப் பார்ப்பது பாவம் என்று சாத்திரங்கள் சொல்லியிருக்கின்றன. அதற்கான காரணத்தைச் சொல்கிறேன் கேள்”.

“**மு**ன்பு ஒருமுறை தேவேந்திரன் தனக்குக் குருவாக இருந்து யாகம் செய்த விஸ்வரூபனைக் கொன்றுவிட்டான். அதனால் அவனுக்கு பிரமகத்தித் தோசம் ஏற்பட்டது. அதை நீக்கிவிடும்படி தேவர்கள் அனைவரும் என்னிடம் வந்து என்னைத் துதித்து வேண்டினார்கள். அந்த பிரம்மகத்தியை நான் நான்காகப் பிரித்து பூமி, பெண்கள், மரங்கள், நதிகள் ஆகியவற்றிற்கு அளித்தேன். உவர்மண் நிலம் பூமியின் பிரம்மகத்தி, நதிகளின் நுரை நதிகளுக்குப் பிரம்மகத்தி, மரங்களின் துவாரங்கள் (பொள்ளல்) மரங்களுக்குப் பிரம்மகத்தி. பெண்களின் தோசம் தான் அவர்களுக்குண்டாகும் மாதவிடாய்”.

“**அ**தனால் அதிர்ச்சியடைந்த அந்த நால்வரும், “சுவாமி, இதை நீங்கள் எமக்களிப்பதால் உலகிற்கு என்ன பயன் எற்படும்?” என்று கேட்டனர்.

“**க**ருடா, மண்ணில் பயிர்கள் விளைந்து உலகில் உள்ள உயிர்கள் எல்லாவற்றிற்கும் உணவாகும். நீரை இறைக்க இறைக்க அது சுரத்து உயிர்களுக்குப் பயனளிக்கும். நதிகளில் ஞானிகளும், மக்களும் நீராடித் தம்மைப் புனிதப்படுத்துவர். மரங்கள், காய், கனி, வேர், இலை என்ற தன்னில் உருவாகும் பொருட்களையும் உயிர்களுக்குக் கொடுப்பதோடு அவை நீண்ட ஆயுளுடன் நின்று பயனளிக்கும்.

**ம**னைவி செய்யும் பாவம் கணவனைச் சேரும். ஆனால் கணவன் செய்யும் பாவங்கள் மனைவியைச் சாராது. பெண்களுக்கு தோசத்தால் தாய்மை கிடைக்கும்” என்று நால்வருக்கும் வரம் கொடுத்து அவர்களைச் சமாளித்தேன்”.

**மா**தவிலங்குள்ள பெண்ணை முதல் நாள் பார்த்தல் அது ஒரு கொலைகாரனைப் பார்த்த தோசமும், பாவமும் உண்டாகும். இரண்டம் நாளப் பார்த்தல் அது ஒரு கொள்ளைக்காரனைப் பார்த்த தோசமும், பாவமும் உண்டாகும். மூன்றாம் நாள்ப்பார்த்தால் சிசுவைக் கொலை செய்தவனைக் கண்ட தோசமும், பாவமும் உண்டாகும். நான்காம் நாள் பெண் நீராடியபின் அவள் தூய்மையடைவாள். அன்று அவள் உப்பிட்ட உணவை உண்டபின்பே கணவனையும், பிள்ளைகளையும், இனத்தவர்களையும், சூரியனையும் பார்த்தல் வேண்டும். அவ்வாறு செய்யாது பார்த்தால் சூரியனது சாபத்துக்குள்ளாவாள். கணவனினதும், பிள்ளைகளினதும் ஆயுள் குறையும். விலக்காக இருக்கும் நாட்களில் அப்பெண் பூசை செய்தலாகாது. கோவிலுக்குச் செல்லக் கூடாது. யாகம், சிரார்த்தம், பூசைகளில் கலந்து கொள்ளக் கூடாது. இக்காலத்தில்

கணவனும் மனைவியும் கூடியிருந்தால் எவரின் விருப்பத்திற்காக உறவு உண்டானதோ அவருக்கு கொடிய நோய் வரும்.

**ஐ**ந்தாவது நாள் அவள் தனது கடமைகளைச் செய்யத் தொடங்கலாம். ஒரு பெண் மாதவிலக்கான ஆறாவது நாள் முதல் பதினாறாவது தினம் வரையுள்ள ஏழு இரட்டை நாட்களிலும் (6, 8, 10, 12, 14, 16, 18) தனது கணவனோடு கூடி இன்புறலாம். இந்த நாளில் பெண் கருவுற்றால் ஆண்குழந்தை பிறக்கும். பிறக்கும் குழந்தை அறிவாளியாகவும், பலசாலியாகவும் பிறப்பான்.


**ஒ**ரு பெண் மாதவிலங்கான நான்காம் நாளில் இருந்து எட்டாம் நாள்வரை கரு உற்பத்தியாகும் வாய்ப்பு உண்டு. தம்பதியர் சற்புத்திரன் பெறவேண்டும் என்று எண்ணி கோபம், சோகம், விரக்தி, கவலை இல்லாதவர்களாய் கடவுளின் நினைப்போடும் மகிழ்ச்சியுடனும் கூடுதல் வேண்டும். அப்படிக் கூடினால் ஆணிடமிருந்து வெளியேறும் சுக்கிலமும், பெண்ணிடமிருந்து வெளிப்படும் சுரோணியமும் வீரியமுள்ளதாகவும், உன்னதமானதாகவும் இருக்கும். இதில் ஆணின் சுக்கிலம் பலவீனப்பட்டிருந்தால் ஆண்பிள்ளையும், பெண்ணின் சுரோணியம் வலுவுள்ளதாக இருந்தால் பெண்பிள்ளையும் பிறக்கும். இரண்டினதும் வீரியம் சமமாக இருந்தால் குழந்தை அலியாகப் பிறக்கும்.

**பெ**ண்ணின் கருப்பை ஆரோக்கியமானதாகவும், பலமுள்ளதாகவும் இருக்க வேண்டும். அப்படியிருந்தாலும் கருமுட்டை திடமாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்தால் தம்பதியினர் கூடிப்புணர்ந்த ஐந்தாம் நாள் கருப்பையில் முட்டையுடன் சுக்கிலம் கலந்த ஒரு குமிழி உண்டாகும் பதின்நான்காம் நான் தசை உருவாகும். ஒரு மாதத்தில் ஐம்பூதங்களின் (நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்) செயற்கை எற்படும். இரண்டாவது மாதம் தோல் உண்டாகும். மூன்றாவது மாதத்தில் நரம்புகள் உண்டாகின்றன. நான்காவது மாதம் தலையில் முடியும், வடிவமும் எற்படுகிறது. ஐந்தாவது மாதத்தில் காதுகளும், மூக்கும், மார்பும் உண்டாகிறது. ஆறாவது மாதம் கழுத்தும், தலையும் உண்டாகும். ஏழாவது மாதத்தில் ஆண், பெண் இனக்குறி தோன்றும். எட்டாவது மாதம் சிசு பூரணமாகிவிடும். அப்போது சிசுவுக்கு உயிர்ப்புத் தோன்றும்.

**ஒ**ன்பதாம் மாதம் கழுகுமுனை என்ற நாடியின் மூலத்தைச் சிசு சென்றடைகிறது. பத்தவது மாதம் சிசு தனது பிஞ்சுக்கால்களால் உதைத்து உதைத்துக் கருவறையின் கதவைத் திறக்கிறது. அதனால் தாய்க்குப் பிரசவ வலி உண்டாகிறது.

**க**ருவில் இருக்கும் போதே உயிருக்கு ஆயுள், கல்வி, யோகம், மரணம் என்பன முன் பிறவியின் பாவ புண்ணியங்களுக்கேற்ப என்னால் கொடுக்கப்படும். கருடா, இதை உன்மூலம் உலகத்தவர்களுக்கு உணர்த்தியுள்ளேன்" என்றார் ஸ்ரீமத் நாராயணர்.

## 7. யம பட்டணத்தின் அமைப்பு



“ஐயனே, யமபட்டணத்திற்குச் செல்லும் பாதையைப் பற்றி விரிவாக எனக்குச் சொல்லல் வேண்டும்” என்று கருடன் கேட்டன்.

“கருடனே, யமப்பட்டணத்திற்கு செல்லும் பாதையின் ஆரம்பத்தில் சிறிது தூரம் அக்கினிமயமாக இருக்கும். இரு பாதையின் இரு கரைகளிலும் தீ கனலாக ஒளிரும். அதன்பின் கூரிய முட்களும், தீக்கொள்ளிகளும் நிலத்தில் இருக்கும். அதற்கப்பால் சிறிது தூரம் தாங்க முடியாதளவு குளிர் இருக்கும்.

பூலோகத்திற்கும் யமபுரிக்கும் இடையில் உள்ள தூரம் 86000 காத வழியாகும். இதைப் பற்றி முன்பே உனக்கு கூறியுள்ளேன். பாவிகள் அப்பாதையால் செல்லும்போது களைப்பாற நிழல் கிடைப்பாது. தண்ணீரும் இல்லை. தீயவர்களுக்கு அப்பாதையால் செல்வது ஒரு தண்டனையாகும்.

யமலோகம் வஜ்ரம் போல உறுதியானது. அதைத் தேவர்களாலும், அசுரர்களாலும் கூட அழிக்க முடியாது. யமபுரயின் மத்தியில் யமனது அரண்மனை உள்ளது. அந்த அரண்மனை சதுர வடிவானது. நூறு யோசனை பரப்பளவானது. இருபத்தைந்து யோசனை உயரமுள்ளது. அந்த அரண்மனையில் ஏராளமான யன்னல்கள் அமைக்கப்பட்டுள்ளன. துகில்களாலும், முத்துச் சரங்களினாலும், தோரணங்களாலும் அந்த அரண்மனை அழகாக அலங்கரிக்கப்பட்டுள்ளது.

வைரங்களால் ஆன அரண்மனையின் தூண்கள் பளபளத்துக் கொண்டிருக்கும். அங்குள்ள அழகான மண்டபமொன்றில் ஆடலும், பாடலும் எந்நேரமும் நடைபெற்றுக் கொண்டிருக்கும். மண்டபத்தின் நடுவே மிகமிகப் பயங்கரமான தோற்றத்தோடு யமதர்மன் அமர்ந்திருப்பான். அவனைச் சுற்றி யமகிங்கரர்கள் கைகூப்பி வணங்கியபடி நிற்பர். நடனத்தை ரசித்துப் பார்க்கும் யமதர்மன் தனது மீசையை முறுக்கியபடி இருப்பான்.

யமனது அரண்மனைக்கு அருகில் சித்திரகுப்தனின் அரண்மனை இருக்கிறது. அது இருபத்தைந்து யோசனை நீளமும், அதேயளவு அலகமும், பத்து யோசனை உயரமும் கொண்டது. அவ் அரண்மனையும் சித்திரவேலைப்பாடுகள் அமைந்தது. நவரத்தினத்தால் அமைந்த தூண்கள் பல உண்டு. நவரத்தினத் தோரணங்களால் அரண்மனை


அலங்கரிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள ஓர் அழகான மண்டபத்தில் இருந்து சித்திரகுப்தன் உயிர்களின் பாவ புண்ணியங்களை எழுதிக் கொண்டிருப்பார்.



**சி**த்திரகுப்தனின் அரண்மனையைச் சுற்றி கொடிய நோய்கள் வாழும் கிரகங்கள் உள்ளன. கிழக்கில் கொடிய காய்ச்சல் கிருமிகள் வாழும் கிரகம் உள்ளது. தெற்கில் வைசூரி சூலைநோய்களை உண்டாக்கும் கிரகம் உள்ளது. மேற்கில் காலபாசமும், வயிறு சம்பந்தமான நோய்களை உருவாக்கும் கிரகமும் உள்ளது. வடக்கில் குடல் சம்பந்தமான நோய்களை உருவாக்கும் கிரகம் உள்ளது. தென்கிழக்கே வலிப்பு, மயக்கம் போன்றவற்றை உருவாக்கும் கிரகமும், தென்மேற்கே அதிசாரம் எனப்படும் பேதி, கலாரா போன்ற வியாதிகளை உருவாக்கும் கிரகமும், வடமேற்கே சன்னி நோயை உண்டாக்கும் கிரகமும் உண்டு. இவையாவும் தனித்தனியே இருக்கும். அவை யமதர்மனின் உத்தரவுப்படி இயங்கத் தொடங்கும்.

“**வை**நதேவா, யமபுரியில் பாவிகளுக்குத் தண்டனைகளை நிறைவேற்றும் விதத்தைக் கேட்பாயாக”.

**ய**மனது அரண்மனைக்குத் தென்புறத்தே யமதூதர்கள் பாவிகளை இரும்பு உலக்கையால் அடிப்பர்கள். கூரிய முட்களால் ஆன ஆயுதங்களால் குத்துவார்கள். சிலரைக் கத்தியால் சீவுவார்கள். சிலரைச் செக்கிலிட்டு ஆட்டுவர். சிலரை இரும்புக் கம்பிகளில் கோர்த்து நெருப்பின் மேல் கட்டித் தொங்கவிடுவர். சிலரைக் கொதிக்கும் தாமிரக் குழம்புக்குள்ப் போட்டு அமுக்குவர்”.



“**க**ருடனே, அங்கு தாமிரத்திலான ஆண், பெண் பிரதிமைகள் நெருப்பிலிடப்பட்டு கொதித்துக் கொண்டிருக்கும். மாற்றான் மனைவியை, கன்னிப் பெண்களை பலவந்தப்படுத்தி உறவு கொண்டவனை யமகிங்கரர்கள் இழுத்துச் சென்று அங்கு கொதித்துக் கொண்டிருக்கும் பெண் பதுமைகளோடு ஒட்டிவிடுவார்கள். உயிர் துடிதுடித்து அலறும் போது இன்பமாக இருக்கிறதா என்று கேலியாகக் கேட்பார்கள். அதுபோல கணவனை வஞ்சித்த பெண்களும், திருமணம் முடிக்குமுன் பிற ஆடவனுடன் உறவு கொண்ட பெண்களும் ஆண்பதுமைகளோடு ஒட்டிவிடுவார்கள். அவர்களால் அதிலிருந்து ஒருபோதும் விடுபட முடியாது. இத்தண்டனையைப் படித்தவர்கள் அதன்பின்னாவது நல்லொழுக்கத்துடன் வாழ வேண்டும்”.



“**க**ச்யப குமாரனே, இன்னும் சொல்கிறேன் கேள். சில தீய உயிர்களைக் கரும்பு ஆலைகளில் இட்டுப் பிழிவார்கள். இன்னும் சில பாவப்பட்ட உயிர்களை மலம், சிறுநீர், கோழை முதலிய நிரம்பிய குழிகளில் தள்ளி அவர்கள் அதிலிருந்து விடுபட முயற்சிக்கும்போது இரும்பு ஊசிகளால் குத்தி உள்ளே தள்ளுவார்கள். அக்குழிகளில் உற்பத்தியான புழுக்கள் இவர்களின் வாயிலும், மூக்குத்துவாரத்திலும், காதிலும், கண்களிலும் புகந்து கடிக்கும். அந்தக் குழியின் தரையும் சுவரும் பெரும் மேடுபள்ளங்களை உடையனவாக இருக்கும்”.

“**பெ**ற்றோர் மிகுந்த அக்கறையுடன் பாடசாலைக்கு அனுப்பியும் கற்காது வீண்பொழுது போக்கிய மூடர்கள், கன்றுக்குப் பால்விடாது முழுவதையும் கறந்து விற்றவர்கள், சுற்றத்தவர் பசித்திருக்கத் தாம் மட்டும் சுகமாக வாழ்ந்தவர்கள், கூலியைக் குறைத்துக் கொடுத்தோர், பில்லி சூனியம் வைத்துப் பிறரின் குடியைக் கெடுத்தவர்கள், துணைக்கு வருவதாகக் கூறித் திட்டமிட்டு அவர்களின் பொருள்களைக் கவர்ந்தவர்கள், நதி நீரை அசுத்தம் செய்த பாவிகள், நிர்வாணமாக நீராடுவோர், தாசிவீடே கதியென்று அங்கேயே தங்கிவிடுபவர், மனைவியையும் பிள்ளைகளையும் சித்திரவதை செய்தோர், ஒட்டுக்கேட்டுக் கோள் மூட்டிக்குடும்பங்களைப் பிரித்தவர்கள், கணவனைக் கேலி செய்யும் மனைவியர், நெல்லைச் சரியாக உலர்த்தாமல் விற்பனை செய்பவர்கள் ஆகியோரின் உச்சந் தலையில் ஆணி அடிப்பார்கள். தாகம் என்று நீர் கேட்டால் ஈயத்தை உருக்கி காலில் ஊற்றுவார்கள் இவ்வாறு செய்யும்போது கண்விழி பிதுங்கி வெளியேறும். அப்போதும் கிங்கரர்கள் தண்டனை கொடுப்பதை விடமாட்டார்கள்”.

**மு**ந்நூறு காதம் அகலமாக இருக்கும் கூரிய முட்கள் நிறைந்த காட்டில் இவர்களைக் கட்டி இழுப்பார்கள் (ஒரு யோசனை தூரம் நூறு மைல்களாகும்). யமதூதர்களினால் பாவியர்படும் துன்பங்களைச் சொல்லி முடிக்க முடியாது. அதனால் உயிரோடு இருக்கும் போது தானதருமங்கள் செய்ய வேண்டும். தீர்த்த யாத்திரை செல்ல வேண்டும். இவ்வாறு வாழ்ந்தால் யம பயம் இருக்கமாட்டாது.

## 8. தான தருமங்களின் சிறப்புக்கள்

**கி**ருதயுகத்தில் தவம் செய்வது உயர்ந்ததாகவும், சிறப்புமிக்கதாகவும் இருந்தது. திரேதாயுகத்தில் தியானம் செய்வது தான் உயர்ந்ததாகவும், சிறந்ததாகவும் இருந்தது. துவாபரயுகத்தில் யாகங்கள் செய்வது தான் உயர்ந்ததாகவும், மேலானதாகவும் இருந்தது. கலியுகத்தில் தான தர்மங்கள் செய்வதே புண்ணியத்தைக் கொடுக்கும் என்று கருதப்பட்டது.

இல்லறவாசிகள் எல்லாயுகங்களிலும் வேள்விசெய்தலும், கோவில்கள் கட்டுவது, புணரமைப்பது, குளம், கிணறு முதலியவற்றை தோண்டுவது, புணரமைப்பது, சத்திரங்கள் கட்டுவது, அவற்றைப் புணரமைப்புச் செய்வது, அவற்றை நல்லமுறையில் நடத்துவது போன்றன புண்ணியங்களைத் தரும் செயல்கள் என நினைத்துச் செய்கின்றனர்.

**இ**ல்லற வாசிகள் தமது (தயாதினர்) இறந்தால் அவருக்குத் தர்ப்பணம் செய்யவேண்டியது கட்டாயமாகும். இறந்தவர் தர்ப்பணம் செய்யும் நீரைப் பெற்று மகிழ்வடைவர். கர்மா நடத்திய பின் கர்மா கொடுத்தவர் பஞ்சனையில் படுத்துறங்கக் கூடாது. அவர் வருவோருக்கு மரணமடைந்தவரின் நற்குணங்களை எடுத்துச் சொல்ல வேண்டும். அத்துடன் யமஸ்தோத்திரத்தைச் சொல்லுதல் வேண்டும்.

**இ**றந்தவரைக் குறித்துப் போடும் பிண்டங்களால் தான் சரீரம் உருவாகிறது. அதனால் மரணமடைந்தவனுக்குப் பத்து நாட்கள் தொடர்ந்து கிரியைகளைச் செய்தல் வேண்டும். அதை முறைப்படி செய்தால் தான் பயன் உண்டாகும்.

**ப**த்து நாட்களுக்குக் கிரியைகளைச் செய்யாது விட்டால் மரணமடைந்தவனுக்குப் பிண்ட சரீரம் கிடைக்கமாட்டாது. இறந்து போன உயிர் மூன்று நாட்கள் நீரிலும், மூன்று நாட்கள் வான்வெளியிலும், ஒருநாள் தான் வசித்த வீட்டிலும் ஆவியுருவில் வாசம் செய்யும். அந்த உயிருக்காக 1, 3, 5, 7, 9, 11 ஆகிய தினங்களில் 'நவ சிரார்த்தம்' என்ற கிரியையைச் செய்தல் வேண்டும். முதல் நாள் எந்த இடத்தில் கிரியை செய்யப்பட்டதோ அந்த இடத்தில் தான் ஒன்பது நாட்களுக்குரிய கிரியைகளைச் செய்தல் வேண்டும்.

**இ**றந்தவருடைய குலம், கோத்திரத்திற்கு விதிக்கப்பட்ட தீட்டு எத்தனை நாட்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிறதே அத்தனை நாட்களும் பிண்டதர்ப்பணம் செய்தல் வேண்டும். இது மிகவும் முக்கியமானதாகும்.

**ஒ**ருவர் எத்திதியில் இறந்தாரோ அந்தத்திதியில் தான் மாதம் மாதம் செய்யும் மாசியம் எனப்படும் மாத சிரார்த்தத்தை நடத்த வேண்டும். ஒருவர் அதிக நோயுடன் இறந்து போனால் அவருக்கு ஏகோதிஷ்ட சிரார்த்தம் என்ற கிரியையை விசேடமாகச் செய்தல் வேண்டும். அப்படிச் செய்தால் இறந்த உயிருக்கிருந்த தோசங்கள் நீங்கிவிடும்.

## ௭. தீட்டு

**இ**னத்தவரின் தாய்வழியினருக்கு (தாயாதிகளுக்குப்) பத்து நாட்களுக்குத் தீட்டு உண்டு. இறந்தவருக்குச் செய்ய வேண்டிய கிரியைகளைச் செய்து முடித்தபின் மூன்று மாதங்களுக்குள் ஒரு தாயாகி மரணமடைந்தால் அவருக்கு மூன்று தினங்கள் தீட்டு உண்டு.

**மூ**ன்று மாதங்களுக்குப் பிறகு ஆறு மாதங்களுக்குள் தாயாதி இறந்தால் ஒருநாள் மட்டும் தீட்டு உண்டு. ஒரு வருடங்கழித்து இறந்தால் குளித்தால் தீட்டுப்போய்விடும். இது எல்லா வருணத்தாருக்கும் பொருந்தும்.

**அ**ன்னதானம் கொடுப்பவர் தனது கையால் தான் மற்றவர்களுக்கு அன்னத்தைத் தானமாகக் கொடுத்தல் வேண்டும். ஏனையோரைக் கொண்டு கொடுக்கக்கூடாது.

**அ**ப்போது கருடன் ஸ்ரீமத் நாராயணரைக் கேட்டான், “சுவாமி ஈமக்கிரியை செய்யும் முறைபற்றி எனக்கு விளக்கமாகக் கூறுதல் வேண்டும்”.

“**வை**நதேவா, இறந்தவரின் பெற்றோர் உயிருடன் இருந்தால் அவர்களுக்கு மேலே உள்ள மூன்று தலைமுறைப் பிதுர்களின் பிண்டத்தோடு மரணமடைந்தவரின் பிண்டத்தையும் சேர்க்க வேண்டும். அதை இறந்தவரின் மகன் செய்ய வேண்டும். இறந்தவரின் மகன் சிரார்த்தம் செய்தால் அந்த உயிர் மகிழ்ந்து தனது சந்ததியை ஆசீர்வதிக்கும். சிலருக்கு அடுத்த ஆண்டுக்குள் சந்தானபாக்கியம் கிடைக்கும். பிதுர்களைத் திருப்திப்படுத்துவது குடும்பத்தவர்களுக்கு நன்மைகளைத் தரும்.

**உ**யிர் உடலை விட்டுப் பிரிந்த நட்சத்திரங்களான அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களானால் இறந்தவருக்கு உடனே கிரியையை நடத்த முடியாது. இறந்தவன் உயிர் நீத்த நட்சத்திரம் கழிந்தபின்பே நடத்த வேண்டும். இவர்கள் புண்ணியவான்களாக இருந்தால் நிட்சயமாக நற்கதியை அடைவார்கள். இவர்களுக்கு எள்ளும், நெய்யும் பாத்திரத்துடன் தானம் செய்தல் வேண்டும்.

**உ**டலில் இருந்து உயிர் பிரிந்ததைத் தெரிந்து கொண்டால் பிணத்தின் கால்களின் கட்டை விரல்களையும், கைகளையும் கட்ட வேண்டும். பிணத்தைத் தனியே விடாது உறவினர்கள் அதன் அருகில் இருத்தல் வேண்டும். பிணம் வீட்டில் இருக்கும்போது தாம்பூலம் தரிக்கலாகாது. ஆண் பெண் உறவு கொள்ளலாகாது. உறவினராக இல்லாவிட்டாலும் இவற்றைச் செய்தால் பெரும் பாவம் வந்தடையும்.

**ஒ**ரு பிணம் வீட்டில் இருந்தால் அந்த வீதியில் உள்ளவர்கள் உணவு உண்பது பாவத்தை உண்டாக்கும். அந்தப் பிணத்தை முறைப்படி அடக்கம் செய்தபின்பே நீரை அருந்த வேண்டும். மாறாக உணவு உண்டால் அது இறைச்சி சாப்பிட்ட பாவத்தை உண்டக்கும்.

**சா**த்திரப்படி செய்யாத கிரியைகள் அந்த வம்சத்தினருக்குக் கஷ்டத்தைக் கொடுக்கும்.

## 10. தீர்த்த யாத்திரை



“**ப**ரந்தாமா, ஒருவர் தீர்த்த யாத்திரை செல்வதால் என்ன பயன் உண்டாகும்?. அந்த நேரம் அவர் மரணமடைந்தால் அதன்பின் என்ன செய்ய வேண்டும் என்று அறிய விரும்புகிறேன்” என்று கருடன் கேட்டான்.

“**சு**பர்ணா, ஒருவர் ஒழுக்கமாக வாழ்ந்து, நாவின் சுவையை மேலானதாகக் கருதாது முறைப்படி தனது மூதாதையர்க்குத் தர்ப்பணம், சிரார்த்தம் கொடுத்து, என்னைத் தியானித்துக் கொண்டு தனது உயிரை விட்டானேயானால், அவன் நிட்சயமாக எனது உலகமான வைகுண்டத்திற்கு வருவான். அவ்வாறு அவன் சாத்திரப்படி கடைப்பிடித்த முறைக்கு ‘பிரயோபவேசம்’ என்று பெயர்.

“**ஒ**ருவர் எத்தனை நாட்களுக்கு இந்த நெறிமுறையைக் கைக் கொள்கிறானோ அத்தனை காலம் யாகம் செய்த பலன் அவருக்குக் கிடைக்கும். சிலர் வாழ்க்கையின் போலியான நிலையை உணர்ந்து இறுதிக் காலத்தில் இந்நெறியைப் பின்பற்றுவர்”.

“**ஒ**ருவர் பிரயோபவேசம் செய்தபின் மீண்டும் இல்லற வாழ்வு வாழ விரும்பினால் சான்றோர் ஒருவர் மூலம் பிராயச்சித்தம் செய்தல் வேண்டும். அதன்பின் இல்லறத்தில் இணையலாம்”.

“**ஒ**ருவன் சந்தியாசத்தை ஏற்று நியமமாக இருந்து இறந்தால் அவன் துறவியான நாள் முதல் சமாதியான நாள் வரை தினம் ஒன்றுக்கு இரண்டு வேள்விகளை நடத்திய பயனைப் பெறுவான்.

**ஒ**ருவர் நோயினால் பெரும் துன்பங்களைத் தாங்க முடியாது அவதிப்பட்டு தான் மரணமடையும் காலம் அண்மித்துவிட்டது என உணர்ந்து சந்நியாசத்தை மேற்கொண்டபோது குணமாகாது என்று நம்பிய நோய் நீங்கியதை அடுத்து மீண்டும் அவர் இல்லற வாழ்வில் இணைந்தால் அவர் மகாபாவியாவார். அவனும் அவனது குடும்பத்தினர்களும், அவனோடு பழகுபவர்களும் பாவத்தில் பங்குகொள்வர்.

**ஒ**ருவன் பற்றற்றுத் தீர்த்த யாத்திரை சென்று சாத்திர விதிப்படி கூறப்பட்ட கிரியைகளைச் செய்தானேயானால் தேவர்கள் அனைவரும் ஒன்று கூடி அவனுக்கு வேண்டியவற்றையெல்லாம் செய்வார்கள். ஒரு திவ்வியமான ஆலயத்தில் ஒருவன் மரணமடைந்தால் அவன் உடனே

சொர்க்கத்தை அடைவான். ஒருவன் புண்ணியத்தலமொன்றில் உயிரை விட்டுவிடத் தீர்மானித்து அத்தலத்தில் நீண்டகாலம் தங்கியிருந்தபோதும் விதி வசத்தால் அங்கு அவனது உயிர் பிரியாது வேறு இடத்தில் உயிரை விட்டானேயானால் அவன் மறுஜென்மத்தில் காவிரிக் கரையில் ஒரு வைதீகக் குடும்பத்தில் பிறந்து சகல சாத்திரங்களையும் கற்று அதில் திறமையுள்ளவனாகவும், தெய்வத்தின் மீதும், குருவின்மீதும் மிகுந்த பக்தி கொண்டவனாகவும் ஒழுக்கசீலனாகவும் வாழ்ந்தால் இறுதியில் சொர்க்கத்தை அடைவான்.

**ஒ**ருவன் ஒரு திருத்தலத்திற்குச் சென்று அங்குதான் நான் உயிரை விடுவேன் என்று வேத விற்பன்னர்கள் முன்பாகச் சத்தியம் செய்துவிட்டுப் பின் தீர்த்த யாத்திரை சென்று வந்தபின் தனது முடிவை மாற்றித் தனது வீட்டுக்குச் சென்று வாழ்ந்தால் அவனும் மகாபாவியாவான்.

**நூ**ற்றிஎட்டுத் திவ்விய சேத்திரங்களுள் ஏதாவது ஒன்றுக்குத் தீர்த்தயாத்திரை செல்பவன் தான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் ஒரு பசுவைத் தானம் செய்தபயனைப் பெறுவான். ஆனால் அவன் ஏதாவது ஒரு காரணத்துக்காகப் பாதிவழியில் திரும்பி வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் ஒவ்வொரு பசுவைக் கொன்ற பாவத்தைப் பெறுவான்.

**ஒ**ருவன் தீர்த்த யாத்திரை செல்லு முன் சகலவற்றையும் ஆராய்ந்து முடிவெடுத்தபின்னரே யாத்திரையைத் தொடங்கவேண்டும். தீர்த்தயாத்திரை செய்பவன் தான் விரும்பிய தலத்தை அடைந்து அங்கு பகவத் தியானம் செய்தல் வேண்டும். பகவத் சேவையில் ஈடுபட வேண்டும். அங்கு கொடுக்கப்படும் பிரசாதத்தை வாங்கி உண்டு இறை நினைவோடு தனது காலம் முழுவதையும் கழித்தல் வேண்டும். இவ்வாறு செய்தால் அவன் தனது வாழ்நாளில் செய்த பாவங்கள் அனைத்தும் அற்றுப் போகும். அவ்வாறு செய்யாது திரும்பி வந்தாலோ அல்லது எதாவது ஒரு பாவத்தைச் செய்தாலோ அதற்குப் பரிகாரங்கள் ஏதுமில்லை.

“**க**ருடனே, ஒருவர் பிறருக்கு நல்ல உதவிகள் செய்து நல்ல பெயர் எடுப்பதை விட பெற்றோர், உடன்பிறந்தோர், உறவினர்களுக்கு உதவி செய்வது தான் சிறப்பானது. கூடிய பலனைத் தரவல்லது”.

**பா**டுபட்டுத் தேடிய பொருட்களைப் பலருக்கும் கொடுத்து கொடுத்துதவுவது உயர்ந்த தர்மம். அதை விட்டுவிட்டு ஆடம்பரமான உடைகளை உடுத்து ஆடம்பரமாக வாழ்வதும், சுவையான உணவு வகைகளை உண்டு தனது பொருட்களைச் செலவு செய்வதும் பாவத்தை அதிகரிக்கப்பண்ணும். இவர்களது செயல்களைக் கண்டு யமன் கோபங்கொள்வான். சித்திரகுப்தன் அவனது பாவங்களை எழுத ஏடின்றித் தவிப்பான்.

**ஒ**ருவரிடம் மூதாதையர் சேமித்து வைத்த சொத்துக்கள் அளவுக்கதிகமாக இருந்தாலும், அவர் மேலும் மேலும் சம்பாதித்து தான தருமம் செய்ய வேண்டும். சுற்றத்தவரின் வறுமையைப்

போக்க வேண்டும். குருடனைப் போலக் காணாமல் இருந்தால் அவரைப் பாவங்கள் சூழ்ந்து கொள்ளும்.

**எ**தையும் மனிதர்கள் பிறக்கும் போது கொண்டுவந்ததில்லை. இறக்கும் போது எதையும் எடுத்துச் செல்லவும் முடியாது. சந்ததியற்றவர்கள் தமது தத்துப்பிள்ளைகளுக்குக் கொடுக்கிறார்கள். அப்பிள்ளை இரத்த சம்பந்தமான உறவாக இருந்தால், எவரோ ஒருவர் பெற்ற பிள்ளைக்கு அச் சொத்து உரிமையாகிறது. அதைவிடுத்து அவர் புண்ணிய காரியங்களுக்குத் தனது சொத்தைச் செலவு செய்தால் செலவு செய்பவர்களுக்கு உயர்பதவி கிடைக்கும். இம்மையிலும், மறுமையிலும் இன்பமாக வாழப் புண்ணியமான செயல்களே உதவும்.

"**ப**ரந்தாமா, நித்திய சிரார்த்தம் செய்தால் இறந்தவன் நற்கதியடைவான் என்றீர்கள். நித்திய சிரார்த்தத்தை எப்படிச் செய்ய வேண்டும். என்று விபரமாகக் கூறுங்கள்" என்று கேட்டான் கருடன்.

"**க**ருடா, இறந்தவர்களை நினைத்து முதலாவது ஆண்டின் முதல் தினம் வரை அதாவது ஒரு வருடத்திற்கு ஒரு உத்தமமான பிராமணனுக்கு அன்னமிடுவதே நித்திய சிரார்த்தமாகும். அன்னத்தையும் நீரையும் இரண்டு கும்பங்களில் நிரப்பி அதை அப்பிராமணனுக்குத் தானம் செய்தல் வேண்டும். இதனால் யமகிங்கரர்கள் நித்திய திருப்தியடைவர். அவர்கள் உயிரை மிகுந்த மகிழ்வுடன் அழைத்துச் செல்வர்.

**ஒ**ருவர் இறந்து பன்னிரண்டாம் நாள் மனக்குழப்பங்களின்றிப் பன்னிரு செம்புகளைத் தானம் செய்ய வேண்டும். ஏழையாக இருந்தால் என்னை நினைத்துக் கொண்டு ஒரு செம்பையும் சித்திரகுப்தனை நினைத்துக் கொண்டு இன்னொரு செம்பையும் தானம் செய்ய வேண்டும்" என்று திருமால் கூறும்போது கருடன் குறுக்கிட்டுச், "சுவாமி, மோட்சம் சுவர்க்கம் இரண்டும் ஒன்றா? இல்லை வேறுவேறானவையா? அதை அடைய என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டான்.

"**க**ருடனே, மறுபடியும் பிறவாத நிலை தான் மோட்சமாகும். தேவலோகத்தில் இன்பமாக வாழ்வது சொர்க்கம்".

**வ**டமதுரை, காசி, மாயாபுரி, அயோத்தி, காஞ்சி, அவந்தி, துவாரகை போன்ற புண்ணியத் தலங்களில் ஏதாவது ஒன்றில் மரணமடைபவன் வைகுண்டத்தை அடைவான். சந்நியாசமார்க்கத்தை முறைப்படி அனுட்டிப்பவன், என்மீது நீங்காத பக்தி கொண்டவனும், உயிர்விடும் போது என்னை நினைத்து எனது நாமத்தை உச்சரிப்பவனும் பேரின்பவீட்டை அடைகிறான். துளசிச் செடிகளைப் பயிரிட்டுக் கோவிலுக்குக் கொடுப்பவனும், துளசியை முறைப்படி பராமரிப்பவனும் பாவங்கள் நீங்கிக் கோலோகத்தில் ஆனந்தமாக இருப்பான். பசு குழந்தைகள் இவற்றிற்கு ஆபத்து நேரும்போது தன்னைப்பற்றிக் கருதாமல் அவற்றைக் காப்பற்றுபவன் தேவலோகத்தில் இன்பமாக இருப்பான். பூமி, உடைகள், பசு இவற்றைத் தானம்

செய்வோர், பாழடைந்த நீர்நிலைகளைப் புணரமைப்புச் செய்து உயிர்களுக்கு உதவுவோர், கோவில் கட்டியவர்கள், பாழடைந்த ஆலயங்களைப் புணரமைப்புச் செய்தவர்கள் விண்ணுலகை அடைந்து மகிழ்வுடன் இருப்பர். காளைக் கன்றைத் தானம் செய்தவரும், தர்ப்பையால் வீடுகட்டி அதைத் தானம் செய்தவரும் சொர்க்கத்தில் மகிழ்ந்திருப்பர்.

## 11. ஆசௌசம்



“**சு**வாமி, ஆசௌசம் என்ற தீட்டுத் தொடர்பான விடயங்களை எனக்கு விளக்க வேண்டும்” என்று கருடன் திருமாலைக் கேட்டான்.

“**க**ருடா, ஓர் அந்தணனுக்குப் பிள்ளை பிறந்தால் அவனது தாயாதிகளுக்குப் பத்து நாட்கள் தீட்டாகும். அதுபோல ஓர் அந்தணன் இறந்தாலும் அவனது தாயாதிகளுக்குப் பத்து நாட்கள் தீட்டு ஏற்படும். தீட்டு உடையவர்களின் வீட்டில் தீட்டு நீங்கும்வரை இனத்தவரல்லாதவர்கள் உண்பது பாவமாகும்”.

**தீ**ட்டுடையவர்கள் கோமங்களும், பூசைகளும் செய்யக் கூடாது. ஒருவர் தீப்பற்றியதால் இறந்தால், கொடிய மிருகங்கள் தாக்கி இறந்தால், வெளிநாடு சென்று அங்கே இறந்தால் அவருக்கு உடனே கிரியை செய்யக் கூடாது. அவ்வாறு இறந்தவர்களுக்கு கிரியை தொடங்குகின்ற தினம் முதல் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் தீட்டு உண்டு. வெளிநாட்டில் ஒருவர் மரணமானால் அத்தகவல் தெரிந்தவுடன் குளிக்க வேண்டும்.

**நா**ட்டை ஆளும் அரசனுக்கும், வேள்விகளை நடத்தும் அந்தணர்களுக்கும் அவர்களது இரத்த உறவினர்கள் (தாயாதியர்) இறந்தால் தீட்டு இல்லை. அதுபோலத் திருமணக் கோலம் பூண்டவருக்கும், திருவிழா நடத்தக் காப்புக் கட்டியவருக்கும் தாயாதிகள் இறந்தால் தீட்டு இல்லை.



**ப**சுக்களையும், பெண்களையும், சான்றோரையும் பாதுகாத்து வருகையில் பாதுகாத்தவர் இறந்தால் அவர்களுக்குத் தீட்டு ஒருநாள் மட்டுமே. அத்துடன் போர்க்களத்தில் ஒரு வீரன் போராடி இறந்தாலும் உறவினருக்கு ஒருநாள் மட்டுமே தீட்டு உண்டு.

"**க**ருடா, மானிடர்களுக்கு முதுமையில் இயல்பாக ஏற்படும் மரணம் உயர்ந்தது. வறுமை, நோயின் கொடுமை காரணமாகத் தற்கொலை செய்வது மகாபாவமாகும். கடனைத் தீர்க்காது இறந்தால் கடன்பட்டவர் நரகலோகம் செல்வார். குஷ்டரோகம் வந்து பெருந்துன்னப்பட்டு இறப்பவன் மகாபாவியாவான். விபத்தால் மரணமடைவதும் தீமையானதாகும்.



**மி**ருகங்களால் தாக்கப்பட்டு இறப்பவனுக்கு நற்கதி கிடைக்காது. துர்மரணமடைந்தவர்களின் தீட்டு யாரையும் தீண்டது. துர்மரணம் அடைந்தவன் பிராமணணானால் ஆறு மாதங்களுக்குப் பிறகும், சத்திரியானாக இருப்பின் இரண்டு மாதங்களுக்குப் பின்பும், வணிகராக இருப்பின் பதினைந்து தினங்களுக்குப் பின்பும், நான்காம் வருணத்தவரான சூத்திரராக இருப்பின் இறந்த உடனேயும் அவரவருக்குரிய கிரியைகளை முறைப்படி செய்ய வேண்டும்.

**து**ர்மரணம் அடைந்தவர்களுக்குப் புண்ணிய நதிக்கரைகளில், நைமிசாரண்யத்தில், புஷ்கரம் போன்ற தலங்களில் அல்லது அரசமர நிழலில் அதுவுமில்லாதவிடத்து மாட்டுத் தொழுவத்தில் அல்லது வீட்டில் நாராயண பலியைச் செய்தல் வேண்டும்.

"**சு**வாமி, நாராயண பலி என்றால் என்ன?" கருடன் பரந்தாமனைக் கேட்டான்.

"**க**ருடனே, வேத மந்திரங்களால் என்னைத் துதித்து பூசை செய்வது, தெற்கு நோக்கி நின்று, "சங்குசக்கரங்களை தன்னகத்தே கொண்டவனே, நீங்கள் என்று நிலைத்திருப்பவர். எங்கும் நிறைந்திருப்பவர், கல்யாணகுண விஸ்வரூபியானவர், அப்படியான தாங்கள் தான் இறந்தவர்களுக்கு நற்கதி கொடுத்தருள வேண்டும்" என்று சொல்லி வணங்கி அந்தணர்களுக்கு அன்னமிட்டு, நவதானியங்களைத் தானமாகக் கொடுத்து பிண்ட தர்ப்பணமும் செய்தல் வேண்டும்".



"**ம**றுநாள் மும்மூர்த்திகளுக்கும், யமனுக்கும் பிரதிமைகள் செய்து மேற்குத் திசையில் என்னையும், கிழக்குத் திசையில் பிரமாவையும், வடக்குத் திசையில் ருத்திரனையும், நடுவில் இறந்தவரின் பிரதிமையும் வைத்துப் பூசை செய்ய வேண்டும். அங்கு ஐந்து கும்பங்கள் வைத்து அலங்கரித்தல் வேண்டும். முன்பு ஆராதித்த ஐந்து தேவர்களையும் நினைத்துச் சிரார்த்தம் செய்ய வேண்டும்.

அத்துடன் பிண்டம் வைத்து, எட்டு வகையான தானங்களைக் கொடுக்க வேண்டும். இருக்கு வேதத்தை ஓதியவருக்குப் பயிர் விளையும் நிலத்தைப் பூமித்தானமாகவும், யசுர் வேதத்தை ஓதியவருக்கு கன்றுடன் கூடிய பசுமாட்டையும், சாமவேதம் ஓதியவருக்கு சம்பா நெல்லையும் தானமாகக் கொடுக்க வேண்டும்.



**மு**ன்நூற்றறுபது பலாச இலைகளால் இறந்தவனின் பிரதிமையைச் செய்து அதற்குத் தாமரைப்பூ, தாமரைத் தண்டு, எள், வாழைப்பழம் ஆகியவற்றைப் படைத்து, சந்தணமிட்டு, பூமாலை அணிவித்து சாத்திர முறைப்படி கிரியையைச் செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் அகால மரணமடைந்தவர் நிற்கதி அடைவார். இவ்வாறு கிரியையைச் செய்தவருக்குப் பத்து நாட்களுக்கும், ஏனைய உறவினருக்கு மூன்று தினங்களுக்குத் தீட்டு உண்டு.

"**க**ருடா, வாழும் போதும், இறந்த பின்பும் ஓர் உயிர் இன்பதுன்பங்களை அடைவதற்கு, அந்த உயிர் செய்த நன்மை, தீமைகளே காரணமாகும்.

**த**ற்கொலை செய்வதால் பாவம் அதிகரிக்கும். ஒவ்வொரு பிறவிகளிலும் அனுபவித்து எஞ்சிய பாவபுண்ணியங்கள் அடுத்த பிறப்பில் சேர்ந்து கொள்ளும். புண்ணியம் செய்தவன் நல்ல பிறப்பையும், பாவம் செய்தவன் தீய பிறப்புக்களையும் எடுப்பான்.

**உ**ண்மைபேசுவதும், உத்தமனாக வாழ்வதும் பெரும் புண்ணியமாகும். தானங்களில் பூமித்தானம் செய்வது சிறந்தது. கோதானம், சொத்தைத் தானம் செய்தோர் பரமபதமடைவர்.

**தா**னம் கொடுத்த நிலத்தைத் திரும்பப் பெற்றால் அது பெற்றவரை கொடிய நரகத்தில் தள்ளிவிடும். தானம் கொடுத்த நிலத்தில் விளைந்ததைத் தானமாகப் பெற்றவன், அவற்றை அனுபவிக்க முடியாது தடுத்தவன் பிரளயகாலம் வரை நரகலோகத்திலேயே தங்கியிருந்து பெருந்துன்பப்படுவான். பொய் சொல்வது, பொய் சொல்லத் தூண்டுவது, பொய்யான பத்திரங்களைத் தயாரிப்பது போன்ற செயல்களில் ஈடுபடுவோரை எண்ணெய்ச் சட்டியில் வறுத்தெடுப்பர்.



**ஒ**ருவர் செய்யும் தொழிலை தீயவழியில் கெடுத்தவர் ஆயிரம் பசுக்களைக் கொன்ற பாவத்தை அடைவார். ஒருவர் வாழ ஒரு தொழிலை எற்பாடு செய்து கொடுத்தவர் ஒருலட்சம் பசுக்களைத் தானம் செய்த பயனை அடைவர். அதுபோல ஒரு பசுவைக்

கொன்றுவிட்டு அதற்குப் பிராயச்சித்தமாக நூறு பசுக்களைத் தானம் செய்தாலும் பிரம்மகத்தி அவரை விடாது தொடரும்.

**ஒ**ழுக்கமாக வாழ்ந்து வேதம் கற்றவரை மதித்து, அவர் செய்யும் யாக, தர்பண, பூசைகளுக்கு உதவி செய்து வந்தால் அவர் அஸ்வமேத யாகம் செய்த பயனை அடைவார்.

**தா**னம் செய்த பொருளைத் திரும்பப் பெறுவது மகாபாவமாகும். அப்படிப் பறித்தவர்கள் மலக்கிருமிகளாகப் பிறந்து மலத்தில் உழல்வார்கள். வஞ்சகமான முறையில் நட்புக் கொண்டு அவரது சிறிய பொருளையாவது கவர்ந்தால் ஆயிரமாண்டுகள் நரகலோகத்தில் இருப்பர்.

**கோ**விற் சொத்தை கையாடினாலும் பிராமணரது பொருட்களைக் கவர்ந்தாலும், பெரியவர்களை அவமதித்தாலும், அவமதித்தவரின் குலம் உருப்படாது. நற்பண்புகளை உடைய கைம்பெண்களுக்கு தானம் கொடுத்தால் அதனால் வரும் பயன் பெரிதாகும்.

**தை**மாதப் பிறப்பன்று தானம் செய்தால் சூரியலோகத்தில் வாழும் வாய்ப்பு எற்படும். தானம் பெற்றவர் காயத்திரி மந்திரத்தை ஓதினாலும், தீர்த்த யாத்திரை சென்றாலும் தானம் பெற்றதால் வந்த தோசம் நீங்கும்.

## 12. சூதகமும் ஆசௌமும்

**பி**ரசவத்தினால் ஏற்படும் தீட்டைச் சூதகம் என்றும் இறந்தால் உண்டாகும் தீட்டு ஆசௌசம் என்றும் சொல்லப்படும். சூதகம் ஏற்பட்ட காலங்களிலும், ஆசௌசம் உண்டான காலத்திலும் ஸ்நானம், சந்தியாவந்தனம் தவிர வேறு எதையும் செய்யக் கூடாது. பஞ்சாச்சரிகோமம், தானங்கள், சூரியநமஸ்காரம், தெய்வ ஆராதனை என்பன செய்யக்கூடாது.

**இ**ரத்த உறவினருக்குத் தீட்டு பொதுவானது. சூதகம் ஏற்பட்டது தெரியாத அந்நிய நாட்டில் வசிப்போர் யாகம், பூசை, தானம் முதலியவற்றைச் செய்தால் எந்தச் தோசமும் வராது. பெற்றோருக்குத் திதி கொடுக்கும் போது மரணச் செய்தியைக் கேள்விப்பட்டால் அதற்கான தீட்டுக் காலம் கழிந்த பின்பே சிரார்த்தம் கொடுத்தல் வேண்டும். அதைப் பொருட்படுத்தாது கொடுத்தால் அதைப் பிதிர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டாது.

**சூதகம்**



**தா**யாதி (தீட்டுள்ள இனத்தவர்) ஒருவருக்குக் குழந்தை பிறந்தால் எல்லா இரத்த உறவினர்க்கும் சூதகத் தீட்டு உண்டு. இடையில் சிரார்த்தம் வந்தால், பதினொரு நாட்கள் கழியக் கங்கைத் தீர்த்தத்தை தெளித்துவிட்டுச் சிரார்த்தத்தைச் செய்யலாம். பிறந்தது பெண்பிள்ளையாக இருந்தால் குழந்தையின் சகோதரர்கள், அவர்களின் மனைவிமார்கள், தகப்பன், சித்தப்பா, பெரியப்பா, அவர்களின் குமாரர்கள், தந்தையின் தந்தை பாட்டன், பாட்டனின் சகோதரர்கள், அவர்களின் மனைவிமார்கள் ஆகியோர்க்குப் பத்து நாட்கள் தீட்டு உண்டு.

**பி**ரசவித்த பெண்ணின் பெற்றோருக்கு மூன்று தினங்கள் தீட்டு உண்டு. பிரசவித்த பெண்ணின் உடன்பிறந்தவர்கள் சித்தப்பா, பெரியப்பா, மாமா ஆகியோர்க்கு ஒருநாள் மட்டும் தீட்டு உண்டு. திருமணமாகாத ஆண்களுக்கும், பெண்களுக்கும் தீட்டு இல்லை. பிரசவத்திற்கான தீட்டு பத்துநாட்கள் மட்டுமே. பிரசவித்த பெண்ணுக்கு ஆண் குழந்தை பிறந்தால் முப்பது நாட்களுக்கும், பெண்குழந்தை பிறந்தால் நாற்பது தினங்களுக்கும் தீட்டு உண்டு. தீட்டுக் கழிந்த பின்பு வரும் வளர்பிறையில் நல்ல நாள்ப் பார்த்து மாங்கல்யக் கயிற்றை மாற்றியபின் பஞ்சகவ்வியம் சாப்பிடவேண்டும். அதன் பின்பு தான் பாத்திரங்களைத் தொட்டுச் சமைக்க வேண்டும். இதற்குப் “பாண்டாப்பரிசம்” என்று பெயர்.

**ஆசௌசம்**

**பி**றந்து பத்துத் தினங்களுக்குப் பின்பு பிறந்த குழந்தை இறந்தாலும், திருமணத்திற்கு முன் பெண் இறந்தாலும் மரணமடைந்தவரின் பெற்றோருக்கும், சகோதரர்களுக்கும் பத்து நாட்கள் தீட்டு உண்டு.

**உ**பநயனமான தாயாதிகளின் மைந்தன் இறந்தால் எல்லோருக்கும் பத்து நாட்கள் தீட்டு உண்டு. ஏழுவயது முதல் பூநூல் போடாவிட்டாலும், தாயாதிகளுக்குப் பத்து தினங்கள் தீட்டு உண்டு.

**தா**யின் பெற்றோர், மாமன்மார், அவர்களது மனைவிமார், பெற்றோரின் மாமனார், மாமியார் (கொள்ளுப்பாட்டி, தாத்தா, தாயின் வம்சம்) அன்னையின் சகோதரிகள், அத்தைகள், ஆண்குழந்தையின் உபநயனமான அத்தை பிள்ளை, பூநூல் போட்ட பிரமச்சாரி, திருமணமான பெண், சகோதரி இவர்களுக்கு மூன்று நாட்கள் தீட்டு உண்டு.

**ஒ**ருவருக்குச் சுவீகாரமாகக் கொடுக்கப்பட்ட பெண் தன்னைச் சுமந்து பெற்ற தாய் இறந்தால் மூன்று தினங்களுக்குத் தீட்டுண்டு. அந்தப் பெண்ணின் குழந்தை இறந்தால் பெற்றதாய்க்கு மூன்று நாட்களுக்குத் தீட்டு உண்டு. இத்தீட்டுத் தந்தைக்கும் உண்டு.



**த**த்துப் புத்திரனுக்கும் இது பொருந்தும். தாயாதிகளின் புத்திரிகள் திருமணமாகாதிருந்தால் மூன்று நாட்களுக்குத் தீட்டு உண்டு.

**இ**ருபத்தைந்தாவது மாதம் முதல் ஆறு வயதுவரை உபநயனம் ஆகாத பங்காளிகளின் குமாரர்களுக்கும் மூன்று நாட்கள் தீட்டு உண்டு. பெண்களுக்கு பிறந்த வீட்டுத் தீட்டுக் கிடையாது. நெருங்கிய இரத்த சம்பந்தமுள்ளவர்களானால் மூன்று நாள்த் தீட்டு அவளது கணவனுக்கு இல்லை.

**பூ**நூல்தரிந்த சகோதரன், உபநயனம் செய்யப்பட்ட மருமகன், தாயாரின் சக்களத்திகள் இறந்தால் மூன்று நாட்கள் தீட்டு உண்டு.

**அ**த்தையின் பிள்ளை, பெண்கள், மாமனின் மகன்கள், மகள்கள், தாயின் சகோதரிகளின் புத்திரர்கள், புத்திரிகள், தனது சகோதரியின் பிள்ளைகள், தனது சகோதரியின் திருமணமான மைந்தர்கள், சித்தப்பா, பெரியப்பா, பெண்கள், தனது மகனின் புத்திரி, தனது மகளின் புத்திரி பூநூல் போட்ட பிராமணப் பிள்ளை, மருமகன் ஆகியோர் இறந்தால் ஆண்கள் ஒன்றரை நாட்கள் தீட்டைக் காக்க வேண்டும்.

**பெண்களுக்கான பக்ஷினித் தீட்டு ஒன்றரை நாள்.**

1. தந்தையுடன் பிறந்த சகோதரர்கள்
2. தன் தாயுடன் பிறந்த பெரியம்மா, சித்தி
3. மாமன், சித்தி
4. அவர்களின் பிள்ளைகளும், மனைவிமாரும்
5. தந்தையின் தந்தை
6. தந்தையின் தாய்
7. தாயின் பெற்றோர்

8. உடன் பிறந்த சகோதரி, அவளது பெண், மருமகன் ஆகியோர் இறந்தால் ஒன்றரை நாள் தீட்டு உண்டு. பகலில் சாப்பிடாது உபவாசம் இருந்தால் இரவில் அந்தத்தீட்டு அகன்றுவிடும்.

**ஆடவர்களுக்கு ஒரு நாள்த் தீட்டு**

1. தந்தையின் இளைய சகோதரி அல்லது மூத்த சகோதரியின், சகோதரர்கள், சகோதரனின் வாரிசுகள், அவர்களுடைய சந்ததியினர்.
2. தனது மனைவியின் உடன் பிறந்தவர்கள்.
3. தாயின் சக்களத்தியின் பெற்றோர்.
4. இரண்டு வயது முதல் ஆறு வயது வரை திருமணமாகாமல் இறந்த பங்காளிகளின் புதல்வி.
5. சுவிகாரம் கொடுத்தவனுடைய பூர்வகோத்திர சகோதரர்கள்.
6. மனைவி இறந்து அவளுக்குப் பிறக்காதிருந்து அவளது பெற்றோர் இறந்தால்,
7. ஆறு மாதம் முதல் இரண்டு வயது வரையுள்ள பங்காளிகளின் பிள்ளைகள். இவர்கள் இறந்தால் ஒரு நாள் மட்டும் தீட்டு உண்டு.

**மங்கையற்கு மட்டும் ஒருநாள்த் தீட்டு**

1. தாயின் இளைய சகோதரி, மூத்த சகோதரி.
2. தாயின் சக்களத்தியுடன் உடன் பிறந்தோர்.
3. அவர்களின் பேரன், பேர்த்தி.
4. தாயின் சக்களத்தியினுடைய சகோதரர்களின் வாரிசுகள், இவர்கள் இறந்தால் விவாகமாகாவிட்டாலும் பூநூல் தரிக்காவிட்டாலும் தீட்டுவராது.

**ஜெனனத் தீட்டுக்கள் சேர்ந்தால்**

1. பத்துநாள்ப் பிறப்புத் தீட்டுக் காத்துக் கொண்டிருக்கும் போது, நடுவில் இன்னொரு பிறப்புத் தீட்டு வந்தால், முதல் தீட்டு முடியும் நாளில் இரண்டாவது தீட்டும் முடிவடைந்துவிடும். இது தாயாதிகளுக்கு மட்டுமே. பெற்றோர்களுக்கு இல்லை. இந்த விதி மூன்று நாள்த் தீட்டுக்கும் பொருந்தும்.
2. மூன்று நாள்த் தீட்டைக் கடைப்பிடிக்கும் போது பத்துநாள்த் தீட்டு ஏற்பட்டால் பத்து நாட்கள் தீட்டைக் காக்க வேண்டும்.
3. பத்து நாள்த்தீட்டு வந்தபோது மூன்று நாள்த்தீட்டு ஏற்பட்டால் பத்து நாளின் பின்பு தான் தீட்டு அகலும்.
4. பத்துநாள் அல்லது மூன்றுநாள் தீட்டு ஏற்படும் போது கடைப்பிடிப்பவனுக்குத் தீட்டு ஏற்பட்டால் குழந்தை பிறந்ததில் இருந்து பத்துநாட்களுக்குத் தீட்டு இருக்கும்.

5. பத்து நாட்களுக்குரிய தீட்டு ஏற்பட்டு முடியும்போது வேறொரு பத்து நாள்த் தீட்டு வந்தால் மூன்று தினங்கள் தீட்டுக் காத்தால் போதும்.
6. குழந்தை பிறந்ததால் பத்துத் தினங்கள் தீட்டுடன் காத்துக் கொண்டிருக்கையில் பத்தாவது நாள் இன்னொரு பத்து நாள்த் தீட்டு வந்தால் பதினோராம் நாள் அத்தீட்டு நீங்கிவிடும். மேற்கூறியபடி மூன்று தினங்கள் தீட்டுக்காக்கத் தேவையில்லை.
7. ஒரு பத்துநாள்த் தீட்டைக் காத்துக் கொண்டிருக்கும்போது தாயாதி வீட்டுப் பிரசவத்தீட்டு ஏற்பட்டால் முதல் தீட்டுப் போகும் நாளிலே மறு தீட்டும் சென்றுவிடும்.
8. முதல்நாள் இரவு, மறுநாள்க் காலையிலும் இரு குழந்தைகள் பிறக்குமானால் தாய்க்கு இரண்டாவது குழந்தை பிறந்தன்றிலிருந்து பதினொரு நாளின் பின்பே தீட்டு நீங்கும். பங்காளிகளுக்கும், குழந்தையின் தந்தைக்கும் முதல் குழந்தை பிறந்தன்றிலிருந்து பதினொராம் நாள் தீட்டு போய்விடும்.

**மரண சௌசம்**

1. பிறப்புத் தீட்டின்போது மரணத்தீட்டு ஏற்பட்டால், பிறப்புத்தீட்டு முடிந்தாலும் மரணத்தீட்டு முடியாது.
2. ஆனால் மரணத்தீட்டின் இடையே பிறப்புத் தீட்டு வந்தால், ஜெனனத் தீட்டு முடியும்போது இறப்புத் தீட்டும் முடிவடையும்.
3. பிரசவத் தீட்டைப் பெற்றோர் கடைப்பிடிக்கும் போது, தந்தையின் பெற்றோர் மரணமடைந்தால் பிறப்புத் தீட்டோடு இறப்புத் தீட்டும் முடிவடைந்துவிடும்.
4. குழந்தை பிறந்து தீட்டைக் காத்துக் கொண்டிருக்கையில் குழந்தை இறந்துவிட்டால் குழந்தை பிறந்த பன்னிரண்டாம் நாள் தீட்டு முடிவடையும் பத்தாவதுநாள் இரவு குழந்தை இறந்தால் பெற்றோர் மூன்று தினங்கள் தீட்டைக்காக்க வேண்டும்.
5. தாயாதி மரணமடைந்த தீட்டைக் காத்துக் கொண்டிருக்கையில் அந்தக் குலத்தைச் சேர்ந்த பெண்குழந்தை ஒன்றைப் பிரசவித்தால் பங்காளிகளுக்கு மரணத்தீட்டுடன் ஜெனனத் தீட்டும் நீங்கிவிடும்.
6. அன்னைக்கு மட்டும் பிறந்த தீட்டு பதினோராவது நாளில் நீங்கும்.
7. தாயாதிகளுக்கு ஜெனனமரணத் தீட்டுக்கள் சமமாக இருந்தாலும் மரணத்தீட்டு நீங்கும் நாளில் ஜெனனத்தீட்டும் நீங்கும்.
8. ஜெனனத் தீட்டைக் காக்கும் தந்தைக்குப் பத்து நாட்களுக்குள் குழந்தை இறந்தால் மரணத்திற்குத் தீட்டு இல்லை. ஜெனனத்தீட்டு முடியும் போது மரணத்தீட்டும் நீங்கிவிடும்.
9. பத்துத் தினங்கள் மரணத்தீட்டைக் கடைப்பிடிக்கும்போது பத்தாம்நாள் இன்னொரு பத்துநாள்த்தீட்டு வந்தால் அதற்குத் தனியாக பத்துநாட்கள் தீட்டுக் காக்கத் தேவையில்லை.
10. மூன்று நாள் தீட்டைக்காக்கும் போது பத்துநாள்த் தீட்டு வந்தால் பத்தாம் நாள்த்தான் தீட்டுப்போகும்.

11. தாயாதி இறந்த பத்துநாள்த் தீட்டைக் கடைப்பிடிக்கையில் மனைவி இறந்தால் கணவருக்கும், கணவன் இறந்தால் மனைவிக்கும், தாய் தந்தையர் இறந்தால் புத்திரர்களுக்கும், பிள்ளைகள் இறந்தால் பெற்றவர்களுக்கும் மரணமடைந்த நாளில் இருந்து பத்து நாட்கள் தீட்டு இருக்கும்.
12. பத்துநாள் ஆசௌசத்தில் பத்தாவது நாள் இரவு மற்றொரு பத்துநாள்த் தீட்டு வந்தால் இரண்டு நாட்களும், சூரியோதயத்தின் போது செய்தி வந்தால் மூன்று நாட்களும் தீட்டுக்காக்க வேண்டும். வந்தது மூன்றுநாள்த் தீட்டாயின் நாளை நீடிக்கத் தேவையில்லை.
13. தந்தை இறந்து பத்து நாட்களுக்குள் தாயும் இறந்தால் தந்தையின் தீட்டுக் காலத்திற்கு மேலாக ஒருநாள் தீட்டைக் காக்க வேண்டும். தாயார் இறந்து பத்து நாட்களுக்குள் தந்தையும் இறந்தால் தந்தை மரணமடைந்த தினத்தில் இருந்து பத்து நாட்களுக்குத் தீட்டு உண்டு.
14. தாயும் தந்தையும் இறந்து பத்துநாட்களுக்குள் புத்திரன் அல்லது புத்திரி இறந்தால் தந்தை இறந்த பதினொராம்நாள் தீட்டு முடிந்துவிடும்.
15. தாய், தந்தை, மனைவி, பிள்ளை, மகள் இவர்களில் இருவர் இறந்த பத்தாவது நாளில் வேறொரு இரத்த உறவினர் இறந்தால் முந்தைய தீட்டுப் போகும் தினத்தில் இந்தத் தீட்டும்போகும்.
16. பத்துநாட்கள் தீட்டைக் கடைப்பிடிக்கையில் வேறொரு இறப்பு நேர்ந்தால் இறந்த நாள் முதல் பத்துநாட்கள் தீட்டு உண்டு. மறுபடியும் ஒரு இறப்பு நேர்ந்தால் அதன் தீட்டு பத்துநாட்கள் கடைப்பிடிக்கத் தேவையில்லை.

**தாமதமாக அறிந்த ஆசௌசம்**

1. பத்துநாள் தீட்டினை மூன்று மாதங்களுக்குப் பின் அறிந்தால் மூன்று நாள்த் தீட்டினை ஆறு மாதங்களின் பின் அறிந்தால், ஒன்றரைநாள்த் தீட்டை ஒரு ஆண்டுக்குப் பின் அறிந்தால் ஒருநாளே தீட்டு நாளாகும். அதன்பின் கேள்விப்பட்டால் ஸ்நானம் (குளித்தல்) மட்டும் செய்தால் போதும்.
2. மூன்றுநாள்த் தீட்டை மூன்று நாட்களின் பின்பு அறிந்து கொண்டால் ஒருநாள் மட்டும் தீட்டு உண்டு. பத்து நாட்களின் பின் அறிந்தால் ஸ்நானம் செய்தால் போதும்.
3. ஒன்றரைநாள்த் தீட்டை பத்துநாட்களுக்குள்க் கேள்விப்பட்டால் பகலானால் பகல் மட்டும் தீட்டாகும். இரவில் கேள்விப்பட்டால் இரவு தீட்டு பத்துத்தினங்கள் சென்றபின் கேள்விப்பட்டால் ஸ்நானம் செய்தால் போதும்.
4. பெற்றோரின் இறப்பை மூத்தபிள்ளை எப்பொழுது கேட்டாலும் பத்துநாட்கள் தீட்டு உண்டு. அதுபோல கணவனின் மரணத்தை மனைவி எப்போது கேட்டாலும் பத்துநாட்கள் தீட்டு உண்டு.

5. மாற்றாத் தாயின் மரணத்தை ஒருவருடம் கழித்துக் கேள்விப்பட்டால் மூன்று நாட்கள் தீட்டு. ஒரு ஆண்டுக்குள் அறிந்தால் பத்துநாட்கள் தீட்டு.
6. பெற்றோரின் மூத்தபிள்ளை ஈமைச் சடங்குகளைச் செய்தபின் ஏனைய பிள்ளைகள் ஒரு வருடத்தின் பின் அச் செய்தியை அறிந்தால் அவர்களுக்கு மூன்று தினங்கள் தீட்டுண்டு.
7. பெற்றோருக்கு மூத்தபிள்ளை இல்லாதபோது ஏனைய பிள்ளைகள் இறுதிக் கடனைச் செய்தபோதும் மூத்த புதல்வன் மரணச் செய்தியைக் கேள்விப்பட்டால் அன்றிலிருந்து பத்து தினங்கள் தீட்டைக் காத்துச் சபீண்டிகரணம் செய்தல் வேண்டும்.
8. சகோதரன் மரணமாகிக் கிருத்தியம் (இறுதிக் கிரியை) செய்யப்பட்டிருந்தால், ஆறு மாதங்களுக்குள் அச் செய்தியை அறிந்தால் மூன்று தினங்கள் தீட்டு இருக்கும். ஆறு மாதங்களின் பின் அறிந்தால் ஒன்றரை நாள் தீட்டு உண்டு. கிருத்தியம் நடக்காவிட்டால் கேள்விப்பட்ட பத்து நாட்களுக்குள் அதைச் செய்ய வேண்டும். இத்தீட்டு சகோதரனுக்குப் பத்து நாட்களாகும்.
9. பத்துநாள் தீட்டாயின் பத்தாவது நாள் இரவிலும், மூன்றுநாள்த் தீட்டானால் மூன்றாம்நாள் இரவிலும் மறுநாளும் தீட்டு உண்டு.
10. திருமணம் ஆகாதவனுக்கும் பூநூல் அணியாதவனுக்கும் இவர்களுக்குக் கிரியை செய்தால் அன்று மட்டும்தான் தீட்டு. இறுதிக்கடன் செய்யும் போது தீட்டு உண்டு.

## 13. பொதுவிதிகள்

1. தீட்டுள்ள ஒருவரின் வீட்டில் தீட்டில்லாத ஒருவர் உணவுண்டால் அன்று முழுவதும் அவருக்குத் தீட்டு உண்டு.
2. தீட்டு விலகும் தினத்தில் காலை எட்டரை மணிக்குப் பின்புதான் நீராட வேண்டும்.
3. பிரேதத்திற்குப் பின்னால் சென்றாலும் சவரம் செய்தாலும் இருமுறை நீராட வேண்டும்.
4. துறவி, பெற்றோர் மரணமடைந்தால் உடனே நீராட வேண்டும். வேறு ஒருவர் மரணமடைந்தால் உடனே நீராட வேண்டியதில்லை.
5. எண்பத்தெட்டு அடிக்குள் ஒரு வீட்டில் பிரேதம் இருந்தால் சாப்பிடக் கூடாது.
6. சந்நியாசி இறந்தால் அவரது பிரேதம் இருந்தாலும் கிராமத்தவர்களுக்குத் தீட்டில்லை.
7. தீட்டுள்ளவர் நோயின் காரணமாக நீராட முடியாவிட்டால், அவருக்காக இன்னொருவர் பத்துமுறை நீராடி ஆசமனசம் செய்ய வேண்டும். ஒவ்வொரு தடவையும் நீராடும்போது தீட்டுள்ளவர்களைத் தொட்டுவிட்டே நீராடவேண்டும். ஒவ்வொரு தடவையும் நீராடும்போது வெவ்வேறு உடையை உடுத்த வேண்டும். இறுதியாக புண்ணியாகவச்னம் செய்ய வேண்டும் அது கட்டாயமானதல்ல.

8. சடலம் இருக்கும் வீட்டுக்கருகில் வெள்ளம், ஆறுஓடும் வாய்க்கால் இருக்குமானால் வாய்க்காலுக்கு அப்பால் வசிப்பவர்களுக்கு தோசம் இல்லை. கோமம் செய்தாலும் குற்றம் இல்லை. பெரும் பட்டணங்களுக்கு இந்த நிர்ணயணம் இல்லை.
9. வீட்டுக்கு விலக்கான பெண் நான்காவது நாள் நோயின் காரணமாக நீராடமுடியாவிட்டால், இன்னொரு பெண் அவளைத் தொட்டுவிட்டு பன்னிருமுறை நீராடவேண்டும். ஒவ்வொரு முறையும் நீராடும்போது வேறுவேறு உடை அணிதல் வேண்டும். பதிலாக நீராடும் பெண் முடிந்தளவு குளிக்கலாம். அல்லது புண்ணியாக வசனத் தீர்த்தத்தைத் தெளித்துக் கொள்ளலாம்.

**தீட்டு இல்லாத காலங்கள்.**

1. சிரார்த்தம் நடந்து கொண்டிருக்கையில் ஒரு மரணச் செய்தி வந்தால் கிரியை முடிந்தபின் தான் தீட்டு வரும். அதை நடத்திக் கொண்டிருக்கும் பிராமணருக்கும் அதே விதிதான்.
2. கிரியை செய்பவர் பூநூலை இடப்பக்கம் மாற்றிவிட்டு மரணமடைந்தவரின் கோத்திரத்தையும், பெயரையும், சம்பந்தத்தையும் சொல்லி விதிப்படி சங்கல்பம் செய்தபின்பு மரணத் தீட்டை அறிய நேரிட்டால் சிரார்த்தம் பூர்த்தியாகும் வரை தீட்டு நெருங்காது.
3. சங்கல்பமான பின்பு மணமக்களுக்குத் தீட்டு உண்டாகாதபடி தேவதைகள் காக்கின்றன. அப்போது மாதா அல்லது பிதா மரணமானால் திருமணத்தை முடித்துவிட்டு சேசகோமம் செய்தல் வேண்டும். மணமக்களில் ஒருவர் இறக்க நேர்ந்தாலும் சேசகோமத்தைப் பாதியில் நிறுத்தக் கூடாது.
4. யாகம் நடத்தும் போது பெற்றோர் இறந்தால், அவர்களின் வேறு பிள்ளையைக் கொண்டு கிரியையைச் செய்ய வேண்டும். யாகம் செய்விப்பவர் மட்டும் புத்திரனாக இருந்தால் மான்தோலையும், உடைகளையும் நீக்கிவிட்டு சம்ஸ்காரம் செய்ய வேண்டும். நீராடக் கூடாது. அதன்பின் யாகசாலைக்கு வந்து அங்குள்ள பொருட்களை மந்திரம் சொல்லிச் சுத்தி செய்தல் வேண்டும்.

## 14. இன்னும் சில முக்கியமான தகவல்கள்

1. மாப்பிள்ளை இறந்தால் மாமன் மாமிக்கும், மைத்துனர்களுக்கும் தீட்டு இல்லை.
2. ஒருவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டால், உடனே கிரியை செய்யலாம். துர்மரணம் அடைந்தவரைப் போல ஆறு மாதங்கள் பொறுத்திருக்கத் தேவையில்லை.
3. சந்நாசியாகச் சென்றவர் மரணமானால் தாயாதிகளுக்குத் தீட்டு இல்லை. நீராட வேண்டும்.

4. விபத்தால் மரணம் அடைந்தாலோ, பகைவர்களால் கொல்லப்பட்டாலோ அவர்களுக்குத் தீட்டும் தர்ப்பணமும் உண்டு. விசம் அருந்தித் தற்கொலை செய்பவருக்கு இவை ஒன்றும் செய்யப்படுவதில்லை.
5. சாதி மாறியவர், புரிசனைவிட்டு விட்டு ஓடிப்போனவள் இறந்தால் கிரியைகள் இல்லை. உடம்பைத் தகனம் செய்துவிட்டு ஆறுமாதம் அல்லது ஒருவருடம் கழித்துப் பலி கொடுக்க வேண்டும். மூன்றுநாட்கள் தீட்டு உண்டு.
6. துர்மரணங்களான விபத்து, தற்கொலை செய்தோருக்கு மூன்று தினங்கள் தீட்டுக் காத்து லஞ்சயனம் இரண்டாம் நாளிலும், உதககதானம் மூன்றாம் நாளிலும் செய்து நான்காம் நாள் சிரார்த்தம் செய்தல் வேண்டும். இருபத்து நான்கு தினங்கள் கழிந்த பின்பே கிரியைகளைச் செய்தல் வேண்டும். இடையில் பெற்றோரின் திதி வந்தால் சிரார்த்தம் முடிந்த பின்பே கிரியையைச் செய்ய வேண்டும். ஏனையோரின் சிரார்த்தங்களைப் பிந்திச் செய்யலாம்.
7. திருமணமான பெண் இறந்தால் தாய்வீட்டுக்குத் தீட்டு இல்லை.
8. ஜெனனத் தீட்டுள்ளவரை நான்கு நாட்களுக்குப் பின் தொட்டால் தீட்டு இல்லை. இரட்டைச் சிசு பிறந்தால் தகப்பனைப் பத்துத் தினங்களுக்குத் தொடக்கூடாது. வேண்டும் என்று தொட்டால் பிராயச் சித்தம் செய்ய வேண்டும்.
9. ஒரு மரணத் தீட்டுள்ளவர் இன்னொரு மரணத்தீட்டுள்ளவரைத் தொடக்கூடாது. தீட்டுள்ளவனது வீட்டுப்பால், நெய், நீர், தயிர், பானம், உணவு போன்றவற்றிற்கும் தீட்டு உண்டு.
10. வழிப்போக்கர், நண்பரின் வீடுகளில் யாராவது பிரசவித்தாலோ, இறந்தாலோ அந்த வீட்டிற்குத் தீட்டில்லை. கர்த்தா சென்றதும் கழுவினால் தீட்டும் போய்விடும். ஆனால் அங்கு கிரியை செய்தால் தீட்டுண்டு.
11. பிரம்மச்சாரிகள் கிருத்தியம் செய்யாது உதககதானம் செய்யக்கூடாது
12. விவாகதீட்சை, யாகதீட்சை செய்யும் போது மரணத்தீட்டு வந்தால் தீட்சை முடிந்தபின் தீட்டு உண்டு. தீட்சை முடிவுக்குள் தீட்டு கழிந்துவிட்டால் அதன்பின் அதிக்ராத்தா கௌசம் உண்டு.
13. மனைவி கர்ப்பமாக இருந்தால் யாத்திரையையும் தானம் வழங்குவதையும் தவிர்க்க வேண்டும்.
14. பிரேதத்தின் முன்புறமும், பக்கமாகவும் செல்லக் கூடாது.
15. உறவினர் அல்லாதவரது மரணவீட்டுக்குச் சென்றால் நீராடிவிட்டு தூய ஆடை அணிந்து நெருப்பின் மீது கையை வைத்துச் சூடாக்க வேண்டும். அதன்பின் நெய் அருந்திவிட்டு மூன்றுமுறை பிரணாயாமம் செய்துவிட்டு நீராடவேண்டும்.
16. தாயாதி இல்லாதவர்கள் கிரியை தொடங்குமுன் நீராட வேண்டும். கிரியை தொடங்கினால் அது முடிந்த பின்பு தான் நீராட வேண்டும்.

17. சஞ்சய உத்திற்குப் பின்பு துக்கம் விசாரித்தால் ஆசமனம் செய்தால் போதும். துக்கம் விசாரித்தவன் சிரார்த்தமும், தானமும் செய்யக்கூடாது. அத்துடன் திதியன்றும் துக்கம் விசாரிக்கக் கூடாது.
18. உறவினர் அல்லாதவரின் பிரேதத்தை பகலில் சுமந்தால் பகல் முழுவதும், இரவில் சுமந்தால் இரவு முழுவதும் உபவாசமிருந்து பின் நீராடிவிட்டுப் பஞ்சகௌவியம் அருந்தவேண்டும். யாகநீரை, அல்லது கங்கை நீரைத் தெளித்தபின் வேப்பிலையை உண்டால் தோசம் நீங்கும்.
19. மாதவிலங்காயிருக்கும் போது இறந்தவரின் பிணம், பிரசவத்தின் போது இறந்தவரது பிணம், கவனிக்காது விடப்பட்டிருந்த பிணம், கர்ப்பிணியின் பிணம் இவற்றை உறவினர்கள் அல்லாதவர்கள் சுமந்தால் பஞ்சகவ்வியத்தை உண்டு பசுவிற்கு புல்லைக் கொடுத்துவிட்டு காயத்திரி மந்திரம் சொல்ல வேண்டும். எரியும் தீயில் கையை வாட்டி நெய்அருந்தி, பூநூலை மாற்றி புண்ணியயாக --- நீர் அல்லது கங்காதீர்த்தம் தெளித்துப் புனிதமடைய வேண்டும். சந்தியாவந்தனம் செய்யக் கூடாது.
20. மனைவி கர்ப்பமாக இருக்கும் போது பிணத்தைத் தூக்கக் கூடாது. பெற்றோர், புத்திரர் இல்லாத சகோதரர், பிள்ளை இல்லாத மாமன் இவர்களது பிரேதத்தைத் தூக்கலாம். இவர்களின் பிரேதத்தைத் தவிர ஏனையோரின் பிரேதங்களை ஆள்வைத்துத் தூக்க வேண்டும்.
21. தீட்டுடையவர்கள் கோவிற் காரியங்கள் எதிலும் கலந்து கொள்ளக் கூடாது.
22. தீட்டுள்ளபோதும் ஏகாதசி விரதத்தைக் கைவிடக் கூடாது.
23. மரணத்தீட்டுள்ளவர் தினமும் தலையில் குளிக்க வேண்டும். கட்டிலிலோ, மெத்தையிலோ படுக்கக் கூடாது.
24. சிசுக்கள் இறந்தால் அதைப் புதைத்த தினத்தில் இருந்துதான் தீட்டைக் கழிக்க வேண்டும். முதல்நாள் இரவு இறந்திருந்தால் மறுநாள்க் காலையில் இருந்து கணக்கெடுக்க வேண்டும்.
25. யாகம் செய்தவர் மரணமானால் அவரைத் தகனம் செய்த நாளில் இருந்தே தீட்டைக் கணக்கிட வேண்டும்.

## 15. குழந்தைகளின் பாவங்கள்

“சுவாமி, குழந்தைகளுக்கு எத்தனை வயதில் பாவம் வரத்தொடங்கும்” என்று கருடன் கேட்டான்.

“கருடா, குழந்தைகளுக்கு நான்குவயதில் பாவம் வரத்தொடங்கும். ஆனால் பன்னிரண்டு வயது வரை குழந்தை செய்யும் பாவங்கள் பெற்றோரையே சாரும்.

**பி**ள்ளைகளுக்கு, “திருடக்கூடாது, பொய் சொல்லக்கூடாது, பிறரின் பொருட்கள் மீது ஆசைப்படக்கூடாது, தகாத வார்த்தைகளால் ஏசக்கூடாது, காலைக் கடன்களை முடித்து விட்டுத் தினமும் நீராடவேண்டும், பெரியோரை மதிக்க வேண்டும், நன்றாகப் படிக்க வேண்டும்” என்று பெற்றோர் தினமும் பிள்ளைக்குக் கூறி வளர்க்க வேண்டும். அதிலிருந்து தவறும் பெற்றோரைத் துன்பங்கள் வருத்தும்.

**பெ**ற்றோரை இழந்த பிள்ளைகளின் பாவம் அவர்களுக்குத் துணையாக இருப்பவர்களைச் சென்றடையும்.

**பெ**ற்றோருக்கு அவரது குழந்தை சிரார்த்தம் செய்ய நேர்ந்தால், சாத்திரிகள் சொல்படி சிரார்த்தம் செய்யலாம். குழந்தையின் கையில் கொடுக்கப்பட்ட தர்ப்பையைப் பெரியவர் ஒருவர் வாங்கி சிரார்த்தம் செய்ய வேண்டும்.

**ஒ**ருவரது சுற்றத்தவர் பலர் பல நாடுகளில் வாழும் போது இறந்தால் முதல் கேட்ட செய்தியாளருக்கே முதலில் சிரார்தம் செய்ய வேண்டும்.

**ஒ**ருவர் இறந்த நாள் தெரிந்து மாதம் தெரியாவிட்டால் அவருக்கு ஆடி, புரட்டாதி, மார்கழி, மாசி மாதங்களில் வரும் தேய்பிறை அட்டமியில் சிரார்த்தம் செய்யலாம். ஒருவர் யாத்திரைக்குச் சென்றபோது மரணமடைந்தால் தினம், தேதி, நாள் தெரியாதவிடத்து அவர் யாத்திரைக்குப் புறப்பட்ட திதியில் சிரார்த்தம் செய்யலாம்.

**பெ**ற்றோர் இறந்த திதி ஒருவருக்குத் தெரியாவிட்டால் அட்டமி, ஏகாதசி, அமாவாசை முதலான நாட்களில் ஒன்றில் சிரார்த்தத்தைச் செய்யலாம்.

“**ப**கவானே, முன்ஜென்மங்களில் செய்த பாவபுண்ணியங்களை எவ்வாறு அறிந்து கொள்ளலாம்” என்று கருடன் கேட்டான்.

“**க**ருடா, நான் செய்தது பாவம் என்று உணர்ந்தவர் அந்தணர்களைக் கொண்டு பிரயச்சித்தம் செய்து கொள்ள வேண்டும். அவற்றைப் பொருட்படுத்தாதவர்களின் உயிர்தான் இறந்த பின் தண்டனைகளுக்குள்ளாகிறது. அத்துடன் ஈனப்பிறவிகளை எடுக்கிறது”.

**பொ**ய் சொன்னவர் மேடையேறிப் பேசும்போது தடுமாறுவர். தான் திட்டமிட்டு ஆயத்தப்படுத்தியவற்றை மறந்துவிடுவார். திருமணத்தில் தில்லுமுல்லுப் பண்ணியவன் ஊமையாகப் பிறப்பான். கொலை செய்தவன் குஷ்டரோகியாகப் பிறப்பான். மனைவியின் சொல்லைக் கேட்டு நடப்பவரும், பெற்றோரின் தூண்டுதலால் மனைவியைக்

கொடுமைப்படுத்தியோரும் செவிடர்களாகப் பிறப்பர். கணவனை ஆட்டிப்படைக்கும் மனைவியும் செவிடியாகப் பிறப்பர்.

**பி**றரின் வீட்டைக் கொழுத்தியவன் நகரவேதனையை அனுபவித்துவிட்டுத் தீக்கோழியாகப் பிறப்பான். குரு நிந்தனை செய்தவன் மோடனாகப் பிறப்பான். விபச்சாரியுடன் சேர்ந்திருந்தவன் ஈனத் தொழில்களைச் செய்பவனாகப் பிறப்பான். கஞ்சன் நீங்காத வறுமையுள்ள குடியில் பிறப்பான்.

**தீ**யவர்களுக்குப் புரோகிதம் செய்தவன் பன்றியாகப் பிறப்பான். கற்றவன் கொடிய பாவங்களைச் செய்தால் கழுதையாகப் பிறப்பான். அதட்டிக்காரியம் பார்த்தவன் பூனையாகப் பிறப்பான். சான்றோருக்குத் துரோகம் செய்தவனும், கன்னிப் பெண்ணை ஏமாற்றிப் புணர்ந்தவனும் காளையாகப் பிறப்பான். காரணமின்றிப் பகை கொண்டு வஞ்சம் தீர்த்தவன் குருடனாகப் பிறப்பான்.

**வி**ருந்தினருக்கு உணவிடாதவன் ஏழு பிறப்புக்களிலும் காகமாகவும், கழுகாகவும் பிறப்பான். தானம் செய்த பொருளை இன்னொருவருக்குத் தானமாகக் கொடுப்பவன் ஓணானாகப் பிறப்பான்.

**வே**தமோதுபவர்களைத் துன்பப்படுத்தியோர் புலி சிங்கங்களாகப் பிறக்கின்றனர். ஊனமுற்றோரைக் கேலி செய்தவர் ஏழு ஆண்டுகள் மீனாகவும், மூன்று ஆண்டுகள் பன்றியாகவும் ஏழு ஆண்டுகள் முயலாகவும், பின் ஏழு ஆண்டுகள் கோழியாகவும் பிறக்கின்றனர். தனது புத்திரியைப் பொருளுக்காக விற்றவன் வேடனாகப் பிறந்து பின் ஏழு ஆண்டுகள் தவளையாகப் பிறப்பான். அதன்பின் நாயாகப் பிறப்பான்.

**சி**றுவர்களைக் கொடுமைப்படுத்துவோர் குதிரையாகப் பிறப்பர். பிராணிகளைச் சித்திரவதைப்படுத்துவோர் தீராத நோயாளிகாகப் பிறப்பர். பாம்மை அடித்துக் கொன்றவன் பாம்பாகப் பிறப்பான். அவனது குலத்தினர் அற்ப ஆயுளில் இறப்பர்.

**ஏ**ழைச் சுமங்கலிகளையும், கன்னியரையும் சுபகாரியங்களில் அவமானப்படுத்தியவனின் வம்சம் விளங்காது. அந்தக் குலத்தில் உள்ள பெண்களுக்கு நோய்கள் இலகுவாகப் பரவும்.

**தே**னீக்களைக் கொன்று தேன் எடுத்தவன் முதலில் தேனீயாகப் பிறப்பான் பின்பு ஈயாகப் பிறப்பான்.

**பு**த்தகங்களைத் திருடுவோர் கண்பார்வையை இழப்பர். பசி என்று கேட்பவனுக்கு உணவு கொடாதவனுக்கு பிள்ளைகள் பிறக்காது. பிறருக்கு நச்சு உணவு கொடுத்தவன் தேழாகப் பிறப்பான். நீர் நிலைகளைத் தூர்த்தவர் நீர்ப்பிராளியாகப் பிறப்பர். மற்றவர் மீது வீண்பழி

சுமத்தியவர் ஆமையாகப் பிறப்பர். பூக்கள், காய்களுடன் மரத்தை வெட்டியவர் எட்டிமரமாகப் பிறப்பர்.

**பு**ண்ணியத் தலங்களில் கன்னியரைக் காமம்கொண்டு பார்ப்பவர்கள் முதலையாகப் பிறப்பர். பிராமணரின் பொருட்களைத் திருடுவோருக்குத் தோலில் வெள்ளை படரும் இவர்கள் புறா, கொக்குப் போன்ற வெள்ளைப் பறவையாகப் பிறப்பர். வெண்கலப் பொருட்களைத் திருடுவோர் சூலைநோயால் வருந்துவர். அவர்களுக்குக் கைகளில் அல்லது கால்களில் கூடுதலான விரல்கள் இருக்கும். இவர்கள் ஒட்டிப்பிறந்து வெட்டி எடுக்கப்படுவர்.

**வி**பச்சாரியின் உழைப்பில் வாழ்பவன் கண்நோயால் அவதிப்படுவான். பிறரை வருத்தி வாழ்பவன் ஆடாக, எருமையாகப் பிறக்கிறான். பின் பனைமரமாகிறான். யாகத்திற்கான பொருளைத் திருடியவன் குரங்காகப் பிறக்கிறான். மானிடப் பிறவி எடுக்கும் போது காசநோயாளியாகிறான்.

**இ**றைச்சியை விற்பவர்களுக்கு மறு பிறவியில் திருமணமாகாது தவறி திருமணம் நடந்தால் குடும்பம் பிரியும். அதன்பின் மயிலாகப் பிறந்து பாவத்தைப் போக்கிக் கொள்வான். சிரார்த்த நெய்யைத் திருடுபவன் எலியாகப் பிறக்கிறான். எண்ணெய்யில் கலப்படம் செய்பவன் மூஞ்சூறாகப் பிறக்கின்றான். அதன்பின் கஸ்தூரி மான், புனுகு பூனையாகப் பிறப்பான்.

**ப**ணத்திற்காகச் சம்பந்தமில்லாதவர்களைக் கொலை செய்பவன், நூறு பிறவிகளில் புனுகுப் பூனையாக, நரியாக, கரடியாக, செந்நாயாக, அறணையாகப் பிறவி எடுக்கிறான்.

**சா**த்திரங்களை, வேதங்களை, பூசைகளை இகழ்ந்து கேலி செய்பவன் யானையாகப் பிறந்து மனிதரிடம் பிடிபட்டுப் பல துன்பங்களை அனுபவிக்கிறான். சிறிதளவு புண்ணியம் செய்தவன் கோவில் யானையாகப் பிறக்கிறான்.

**ய**மபுரிக்குச் செல்லும் வழியில் பாவம் செய்தவர்கள் வைதரணி நதியில் விடப்பட்டு துன்புறுவர். பகவதம், இராமாயாணம் என்பவற்றை உபன்யாசம் செய்யும் போது அதைக் குழப்பியவர்கள், தானம் செய்துவிட்டு அதன்பின் துக்கப்பட்டவர்கள் பொய்யாகப் பழிபோடுபவர்கள் வைதரணி ஆற்றில் மூழ்கடிக்கப்படுவர்.

## 16. நல்வினைக்கான நன்மைகள்

**அ**ன்னதானம் செய்தவர் ஒரு பருக்கை சோற்றுக்கு ஒரு வருடம் வீதம் சொர்க்கத்தில் இன்பமாக இருப்பர். அன்னதானம் செய்பவருக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை. உயர்ந்தவர், தாழ்ந்தவர், நல்லவர், கெட்டவர் என்றபேதம் கிடைக்காது. அதற்குக் காலநேரம் பார்ப்பதில்லை.

**கோ**தானம் செய்கின்றனர் கோலாகத்தில் வாழ்வர். கொடுத்த பசுவின் ஒரு ரோமத்திற்கு ஒரு வருடப்படி கோவிலில் அல்லது புனித தீர்த்தக் கரையிலோ வாழ்வர். வேதம் ஓதும் அந்தணருக்குக் கோதானம் செய்திருந்தால் இங்கு இன்பமாக வாழ முடியும். கர்ப்பமுள்ள பசுவைத் தானம் செய்பவர் கட்டாயம் வைகுந்தம் செல்வர்.

**கு**டையைத் தானம் செய்தவர் ஆயிரம் வருடங்கள் வருணலோகத்தில் இன்பமாக வாழ்வர். கட்டில், மெத்தை, பாய், தலையணி, போர்வை இதில் எதைத் தானம் கொடுத்தாலும் சந்திரலோகத்தில் இன்பமாக வாழலாம். உடைகளைத் தானம் கொடுத்தவர் பத்தாயிரம் ஆண்டுகள் வாயுலோகத்தில் இன்பமாக வாழலாம். ஆடைகளோடு நிலத்தை ஒழுக்கமுள்ள வைதீகருக்குத் தானம் கொடுத்தவர் சூரிய சந்திரர்கள் உதிக்கும் காலம் வரை வைகுண்டத்தில் இன்பமாக இருப்பர். உடலுறுப்புக்களைத் தானமாகக் கொடுத்தவர் அக்கினிலோகத்தில் மகிழ்வுடன் இருப்பர்.

**கு**திரையும் பல்லக்கையும் கோவிலுக்குக் கொடுத்தவர்கள் பதின்நான்கு இந்திரர்களின் காலம் வரை வருணனின் லோகத்தில் இன்பமாக வாழ்வர். பூந்தோட்டங்களை உருவாக்கிக் கோவிலுக்குக் கொடுத்தவர் ஒரு மண் வந்தரகாலமும், வெண்சாமரையைத் தானமாகக் கொடுத்தோர் பத்தாயிரம் ஆண்டுகள் வாயுலோகத்தில் மகிழ்வுடன் வாழ்வர். தானியங்களையும், நவரத்திணங்களையும், தானமாகக் கொடுத்தவர்கள் மறுஜென்மத்தில் அறிவாளிகளாகவும், தீர்க்காயுள் உள்ளவர்களாகவும் வாழ்வர். அவற்றைத் தானமாகப் பெற்றவர் வைகுண்டம் சென்று வாழ்வர்.

**ப**ற்றின்றித் தானம் செய்தவருக்கு மறு பிறவி இல்லை. அவர்கள் பிரம்மலோகத்திற்குச் செல்வர். நற்செயல்களைச் செய்தோர் சூரியலோகத்திற்கும், தீர்த்த யாத்திரை சென்றோர் சத்தியலோகத்திற்கும் செல்வர்.

**ஒ**ரு கன்னியை ஒழுக்கமாக வளர்த்து விவாகம் செய்து கொடுப்பவன் பதின்நான்கு இந்திரர்களின் காலம் வரை அமராவதியில் வசிப்பர். பொன், வெள்ளி ஆபரணங்களைத் தானமாகக் கொடுத்தவர் குபேரலோகம் சென்று ஒருமன் வந்தரகாலம் வாழ்வர். தாமிரம், நெய் இவற்றைத் தானங்கொடுத்தோர் சந்திரலோகம் சென்று இன்பமாக வாழ்வர்.

**தீ**பத்தைத் தானம் கொடுத்தவர் ஸ்வேத்தீபத்தில் நெடுங்காலம் வாழ்வர். பயனுள்ள மரங்களை நட்டுப் பாதுகாப்பவர் தபோலோகத்தை அடைவர். பூந்தோட்டம் அமைத்துப் பூக்களைக் கோவிலுக்குக் கொடுப்பவர் பதினாறு ஆண்டுகள் துருவலோகத்தில் இன்பமாக வாழலாம். ஆலயத்திற்கு விமானம் அமைத்துக் கொடுத்தவர் வைகுண்டத்தில் ஒரு மன்வந்தரம் வாழ்வர்.

**கோ**புரத்தில் புராண நிகழ்வுகளைச் சிற்பமாக அமைத்துக் கொடுத்தவர் அறுபத்து நான்கு ஆண்டுகள் பரமபதத்தில் வசிப்பர்.

**தெ**ய்வம் பவனி வரும் வீதிகளைத் துப்பரவு செய்து செம்மைப்படுத்தியவர் பத்தாயிரம் வருடங்கள் இந்திரலோகத்தில் வசிப்பர்.

**மெ**ய்ஞ்ஞானிகளின் தரிசனம் பாவத்தை அழிக்கும் சக்திவாய்ந்தது.

**தா**மிரப் பாத்திரத்தில் எள்ளைத் தானம் செய்தால் ஒரு எள்ளுக்கு ஒரு வருடப்படி கைலாயத்தில் வாழ்வர். அதன்பின் நல்ல குலத்தில் பிறந்து கீர்த்தியுடன் வாழ்வர்.

**சு**வை மிகுந்த கனிகளைத் தானம் செய்பவர் ஒரு கனிக்கு ஒரு வருடப்படி காந்தர்வலோகத்தில் மகிழ்ந்திருப்பர். நல்ல மனைவியையும் சற்புத்திரர்களையும் அடைந்து தீர்க்காயுளுடன் வாழ்வர். ஒரு செம்பு தண்ணீரை நல்லவர்களுக்குத் தானம் கொடுத்தால் கைலாயத்தில் அவர் மகிழ்வாக வாழ்வார். தூய தீபங்காட்டி நைவேத்தியம் படைத்துச் ஸ்ரீஹரியை பூசை செய்பவர் சற்புத்திரர்களையும் பௌத்திரர்களையும் பெற்றுப் பூமியில் சகல செல்வங்களோடும் வாழ்வர்.

**கா**ர்த்திகை மாதத்தில் துலாத்தானம் (வாழைப்பழம், சத்துமா, சர்க்கரை) செய்பவர் மூன்று யுகங்கள் வைகுண்டத்தில் வாழ்வர். சூரியோதயத்தின் போது கங்கையில் நீராடுபவர் அறுபதினாயிரம் ஆண்டுகள் பரமபதத்தில் இருப்பர்.

**சா**ளக்கிராமத்தை முறைப்படி பூசித்து அதன் தீர்த்தத்தை அருந்துபவர்கள் வைகுண்டத்தில் நூறு பிரம்ம ஆண்டுகள் வாழ்ந்து பின் பூவுலகில் மேன்மையாக வாழ்வர்.

**வி**ரதம், நோன்பு முதலியவற்றை முறைப்படி அனுட்டிப்பவர்கள் பதின்நான்கு இந்திரர்களின் ஆயுட் காலம் வரை சொர்க்கத்தில் மகிழ்வுடன் வாழ்வர்.

**சு**தர்சன கோமமும், தன்வந்திரி கோமமும் செய்பவர் நோய் நொடிகள் இன்றி ஆரோக்கியத்துடன் வாழ்வர். இவருக்கு எதிரிகள் இருக்கமாட்டார்கள். தீர்க்காயுளுடன் வாழ்வார். சோடச மகாலட்சுமி பூசையை முறைப்படி செய்பவர், பதினாறு பேறுகளையும் பெற்று பெருமையாக வாழ்வர்" இவ்வாறு கருடனுக்கு மகாவிஷ்ணு உபதேசித்த இந்தப் புண்ணியமான சரித்திரத்தை உங்களுக்குச் சொல்லும் பாக்கியம் கொடுக்கக் கிட்டியது பெருமைக்குரியது.

"**இ**க் கருடபுராணத்தைப் படிப்பவரும், கேட்பவரும், உபதேசிப்பவரும், இந்நூலைத் தானமாகக் கொடுப்பவரும் தமது மரணத்தின்பின் நல்லுலகை அடைந்து மகிழ்ந்திருப்பர். அவர்களின் குலத்தவரும் பித்துருக்களும் முந்தியடையும்".

“சங்கராத்திவிழா, விசுபுண்ணியகாலம், கிரகண காலம், சிராத்த தினங்கள் ஆகிய புண்ணியகாலங்களில் இப் புராணத்தைப் படித்தால், படிப்பவரின் சந்ததிக்கு ஆயுள் அதிகரிக்கும். யமபயம் இராது. மோட்சம் கிடைக்கும் என்று சூதமா முனிவர் கூறும் போது சனகாதிய முனிவர்கள் குறுக்கிட்டு வேதவியாசமா முனிவரின் சீடரே, இந்த உத்தமமான புராணத்தைக் கூறி எம்மை மேன்மைப்படுத்திய மகரிசியே அதற்கான நன்றியைத் தெரிவிக்கும் பொருட்டு இந்தச் சிறிய சன்மானத்தைப் பெற்று எங்களை மகிழ்விக்க வேண்டும்” என்று கூறி அவரது பாதங்களைத் தொட்டு வணங்கித் தாம் கொண்டு வந்த சன்மானத்தைக் கொடுத்தனர்.

## கீழ் ஏழு உலகங்கள்

அதலம், விதலம், சுதலம், தலாதலம், ரசாதலம், மகாதலம், பாதாளம் என்று பூமிக்குக் கீழ் ஏழு உலகங்கள் உள்ளன.

1. **அதலம்**



அசுர சிற்பியான மயனின் புதல்வனான பலன் என்பவன் தொண்ணூற்றாறு மாயைகளுடன் அதலம் என்ற உலகத்தில் வாழ்கிறான். அவன் கொட்டாவி விட்டால் பும்சவி, ஸ்லவானி, காமினி என்று மூன்று அழகிய தேவதைகளை ஒத்த பெண்கள் வெளிப்படுட்டு. அங்கிருப்போரை காமவசப்படுத்துவர்.

2. **விதலம்**

இங்கு ஆடலேஸ்வரர் கணங்களுடன் இருந்து பிரம்மா படைத்த உயிர்களை விருத்தி செய்கிறார். பார்வதி பரமசிவனின் வீரியம் இங்கு நதியாக ஓடுகிறது. அதில் விளைந்த பொன்னை அசுரப் பெண்கள் எடுத்து ஆபரணங்களாக்கி அணிந்து கொள்வர்.

3. **சுதலம்**

மகாவிஷ்ணு துர்விக்கிரமனாகி மகாபலியை வருண பாகங்களால் கட்டிவைத்த இடமே சுதலமாகும். அங்கு மகாவிஷ்ணு துவாரகா பாலகராக வீற்றிருக்கிறார். இராவணன் அங்கு வந்தபோது மகாவிஷ்ணு கடுங்கோபங்கொண்டு தனது காற்பெருவிரலால் தூக்கி வீச இராவணன் பத்தாயிரம் யோசனைக்கு அப்பால் போய் விழுந்தான்.

**4. தலாதலம்**

இங்கு அசுர சிற்பியான மயன் வாழ்கிறான்.

**5. ரசாதலம்**

இங்கு குகன், தசன், சுவேனன், சாசையன் என்கின்ற பல தலைகளை உடைய கொடூரமான பாம்புகள் தமது குடும்பங்களுடன் வாழ்கின்றன.

**6. மகாதலம்**

நிவாத கவசர்கள், காலகேயர்கள் போன்ற கொடுமையான அரக்கர்கள் வாழும் உலகம் இது. இவர்கள் இந்திரனின் தாதியான சரளமயிரின் சாபத்திற்குப் பயந்து இங்கு ஓடி வந்து மறைந்து வாழ்கின்றனர்.

**7. பாதாளம்**



முப்பதினாயிரம் யோசனை பரப்பளவு கொண்ட தலையை உடைய ஆதிசேடனும், அவனது இனத்தவர்களும் வாழும் இடம் இது.

**மூன்றாம் பாகம்**

## 1. கருட சரித்திரம்



**க**ருடனின் வரலாற்றைப் படித்தால் சர்ப்பதோசம் நீங்கும். அத்துடன் ராகுவாலும் கேதுவாலும் ஏற்படக்கூடிய தோசங்கள் அனைத்தும் விலகும். விஷங்களால் எந்த விதமான பாதிப்புகளும் உண்டாகமாட்டாது. பெருமாள் இவர்களுக்கு எவ்வேளையிலும் உதவுவார்.

**க**ருடனது இடது கரத்தில் ஆதிசேடனும், பூநூலாக வாசுகியும், அரைஞானாகத் தட்சனும் இருப்பர். வலது கரத்தில் குளிகனும், கார்கோடன் சரமாகவும், இரு செவிகளில் குண்டலங்களாக கத்மனும், மகாபத்மனும், சிரசில் சங்கபாலனும் இருப்பர். இவ்வாறு நாகாபரணம் பூண்ட கருடனுக்குச் சிரோரத்தின சோதியாகத் தீப ஆராத்தி செய்யும்.

**க**ருடனது மனைவிகளான ருத்திராவும், சுகீர்த்தியும் தமது கணவனின் வீரதீரச் செயல்களைக் கண்டு மிக்க மகிழ்ச்சியோடு கருடனைக் கட்டித் தழுவியபடி இருப்பர். இதனால் அவர்கள் இருவரும் கருடனது தேகத்துடன் இணைந்து (ஒட்டிக் கொண்டதாக) விட்டதாகச் சொல்லப்படுகிறது.



**க**ருடனது சரித்திரத்தைப் பக்தி சிரத்தையுடன் படித்தால் மகோதரம் போன்ற கொடிய நோய்கள் எதுவும் வராது. தவறி வந்தால் அது உடனே குணமாகிவிடும். எதிரிகள் நண்பர்களாவர். வாக்கு வன்மை அதிகரிக்கும். எந்த வித்தையைக் கற்றாலும் அது உடனே கை கூடிவிடும். உடல் வலிமை பெறும். வாழ்க்கை தேனாக இனிக்கும்.

**கருடன் ஐந்து விபூக வடிவமுள்ளவர் என்று பஞ்சராத்ரம் கூறுகிறது அவை பின்வருமாறு.**

1. இரண்டு கரங்களில் அவர் பனி போன்று வெண்மையானவர். இவ்வுருவை சத்யன் என்று அழைப்பர்.
2. பத்மாரகம் போன்ற நிறம். தங்கம் போல் ஜொலிக்கும் விழிகள். தூய்மையான இனிமை பொருந்திய வடிவம். இவ் வடிவில் இவர் சுபர்ணர் என்று அழைக்கப்படுகிறார்.
3. பொன் போன்று பளபளக்கும் தேகம். வில்லைப்போல் அழகாக வளைந்த புருவங்கள். அழகான இவ்வுருவைப் பட்சிராசா என்று அழைப்பர்.

4. கார்மேகம் போன்ற நிறம். கடைக் கண்ணால் பக்தர்களை நோக்கும் அழகு. அழகிய இவ்வுருவை தார்சயனார் என்று அழைக்கின்றனர்.
5. உருக்கிய சொர்ணம் போன்ற கண்களையும், பஞ்ச வர்ணங்களையும் உடைய திருமேனியையும் கொண்ட இவ் உருவை விகாகேஸ்வரன் என்று அழைப்பர்.

**இ**ராமரும் இலக்குவணனும் நாகாஸ்திரத்தினால் கட்டுண்டு கிடந்தபோது கருடபகவான் அவ்விடத்திற்கு வந்து தனது திருக்கரங்களால் அவர்களைத் தொட நாகாஸ்திரம் செயலிழந்துவிட்டது என்று நாகாஸ்திரத்தின் பிடியில் இருந்து விடுபட்ட இராமனை வாழ்த்திய கருடபகவான் “விரைவில் உனக்குப் பட்டாபிசேகம் நடைபெறும்” என்றும் வாழ்த்தியதாக வால்மீகி ராமாயாணம் கூறுகிறது.



**க**ருடனது வாகனம் வாயு பகவான். தாசன், சினேகன், வாகனன், ஆசனம், கொடி, விதானம், சாமரம் என ஏழு விதங்களில் ஸ்ரீமத் நாராயணனுக்கு கருடாழ்வார் வணங்குவதாக ஸ்ரீ ஆளவந்தார் என்ற ஞானி கூறியுள்ளார். விசத்தை அவரது பார்வை முறித்துவிடும். அதனால் ‘விசஹரி’ என்ற திருநாமம் கருடனுக்கு உண்டு.

**த**சன் தனது பதின்மூன்று புத்திரிகளை கச்யப முனிவருக்குத் திருமணம் செய்து கொடுத்தான். தாட்சாயணியை ருத்திரன் மணந்தார். அதிதி என்ற பெண் இந்திராதி தேவர்களைப் பெற்றாள். திதி என்ற பெண் அசுரர்களைப் பெற்றாள். கத்துரு என்ற பெண் ஆறு ஆண்டுகள் கர்ப்பமாக இருந்து ஆதிசேடனையும், வாசுகி முதலான ஆயிரம் சர்ப்பங்களையும் பெற்றெடுத்தாள்.

**ஆ**திசேடன் பரந்தாமனுக்குப் படுக்கையாக இருக்கிறான். வாசுகி திருப்பாற் கடலைக் கடைவதற்கு உதவினாள் என்று சத்துரு பெருமையாக விந்தையிடம் அடிக்கடி கூறுவாள். அதனால் பொறாமை கொண்ட விந்தை கச்யபரிடம் அடிக்கடி தனக்கும் பெயர் சொல்லக் கூடிய வீரபுத்திரன் ஒருவன் வேண்டும் என்று இரப்பாள்.

“**வி**ரைவில் அப்படியான ஒரு புதல்வன் உனக்குப் பிறப்பான்” என்று முனிவர் தனது மனைவியான விந்தைக்குக் கூறினார்.

**பி**ரமாவின் மானச புத்திரன் கிருது. அவனது மனைவி கிரியா. அவர்களுக்கு அறுபதினாயிரம் மைந்தர்கள் பிறந்தனர். ஆனால் அவர்கள் ஒவ்வொருவரும் சராசரியான ஒரு

மனிதனின் கட்டைவிரலளவு தோற்றத்தையே கொண்டிருந்தனர். இவர்கள் தினமும் சூரிய மண்டலத்தைச் சுற்றி வருவார்கள் இவர்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரியாது கூட்டமாகவே வாழ்ந்தனர். ஆலமரம், மூங்கில் மரம் போன்றவற்றின் இலைகளில் தலைகீழாகத் தொங்கியவண்ணம் இவர்கள் தவம் செய்வார்கள்.

**க**ச்யப முனிவர் விந்தையின் கோரிக்கையை நிறைவு செய்ய விரும்பி புத்திரகாமே ஷ்டி யாகம் செய்தால் எல்லாத் தேவர்களும் முனிவர்களும், ரிஷிகளும் அங்குவந்து முனிவரையும் அவரது மனைவியையும் ஆசீர்வதித்தனர். இந்திரன் பொரசமரக்கிளையுடன் யாகசாலைக்கு வந்தான். வலஸ்கிங்கவர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு சிறிய சமித்தைக் கொண்டு வந்தனர்.

**அ**ப்போது மழைக்காலம் ஒரு மாட்டின் குளம்பளவு குழியில் நீர் நிறைந்திருந்தது. அதைத் தாண்ட முயன்ற கட்டை விரலளவு தோற்றத்தை உடையவராய் இருப்பவர்களில் பலர் அக்குழியைத் தாண்டும் போது குழியில் விழுந்தனர் அதைக் கண்ட இந்திரன் கேலி செய்து பலமாகச் சிரித்தான்.

**அ**தனால் வேதனைப்பட்ட வலஸ்கிங்வர்கள் “எம்மைக் கேலி செய்த உன்னைப் பழிவாங்குவோம். உன்னைவிடப் பலமடங்கு பலம் கொண்ட இந்திரன் ஒருவனைப் படைக்கிறோம்” என்று கூறி யாகத்தைத் தொடங்கினர். இந்திரன் பயந்து நடு நடுங்கியவாறு தனது தந்தையான கச்யபரைச் சரணடைந்தான்.

**ந**டந்தவற்றை அறிந்த கச்சயபர் வலஸ்கிங்வர்கள் நடத்தும் வேள்விக்குச் சென்றார். அவரை அறுபதினாயிரம் பேரும் வரவேற்று உபசரித்தனர்.

“**ம**கரிஷிகளே, இந்திரன் ஆணவமிகுதியால் நடந்து கொண்டது கண்டிக்க வேண்டியது தான். ஆனால் நீங்கள் இந்திரனுக்குப் பதிலாக இன்னொரு இந்திரனை உருவாக்கினால், அவனைப் பதவியில் அமர்த்திய நான்முகன் வேதனைப்படுவார். அதனால் உங்களது சபதம் நிறைவேற நான் ஒரு வழி சொல்கிறேன். இந்த வேள்வியில் பலம் மிகுந்த ஒருவன் உற்பத்தியாவான். அவனைப் பறவைகளின் அரசனாக நியமியுங்கள். அந்தப் புத்திரன் இந்திரனின் செருக்கை அடக்குவான். அதனால் உங்களுக்குப் பழி உண்டாகாது” என்றபோது அவரது அறுபதினாயிரம் புத்திரர்களும் அதை ஏற்றுக் கொண்டனர்.

**அ**தனால் அவர்கள் அந்த யாகத்தால் வந்த பயனை தமது தந்தைக்களித்தனர். அதை மகிழ்வுடன் பெற்ற அவர்களது தந்தையான கச்யபர் விந்தையின் இரண்டாவது கருவில் சேர்த்தார். அதன் பயனாகக் கருடன் அவதரித்தார்.

**க**ருவுற்றுப் பலகாலமாகியும் பிள்ளை பிறக்காததை உணர்ந்த விந்தை அவசரப்பட்டு கருவைப் பார்த்தாள். அது இடுப்புவரை தான் உருவாகி இருந்தது. அப்படியிருந்தும் அது பிறந்துவிட்டது.

**அ**தனால் மனம் வருந்திய அப்பிள்ளை, "அம்மா, அவசரப்பட்டு என்னை ஊனனாக்கிவிட்டீர்கள். அதற்காகத் தாங்கள் சில காலம் உங்களின் சக்களத்தியான கத்துருவுக்கு அடிமையாக இருப்பீர்கள்" என்று சபித்தது.

**அ**தைக்கேட்ட விந்தை துக்கத்தைத் தாங்க முடியாது விம்மி விம்மி அழுதாள். அதைக் கண்ட அக்குழந்தை, "அம்மா, ஆத்திரத்தால் அறிவிழந்து உங்களைச் சபித்து விட்டேன். அதனால் என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். எனது தம்பி வந்து உங்களது விருப்பங்கள் அனைத்தையும் நிறைவேற்றுவான்" என்று கூறியது. அக்குழந்தைதான் பின்பு சூரியனது தேர்ச் சாரதியானது. அதனால் தான் சூரியோதயத்தை அருணோதயம் என்று சொல்கின்றனர்.

**ஆ**டி மாதம் சுவாதி நட்சத்திரத்தன்று சூரியன் கடகராசியில் சஞ்சரிக்கின்ற புனித வேளையில் கருடபகவான் பூமியில் அவதரித்தார்.

**அ**வர் பிறந்தபோது பெரும் அக்கினிப் பிழம்பாகத் தோன்றினார். அதைக் கண்ட தேவர்கள் அஞ்சி நடுநடுங்கினர். கருடன் வானவெளியில் பறந்து பறந்து மலைகளை உடைத்து நொறுக்கினான். அதனால் நட்சத்திரங்கள் இடம்பெயர்ந்தன. மரங்களின் கிளைகள் முறிந்தன. கடல் பொங்கியது.

**அ**தைக்கண்ட கத்துரு, "கருடா, நீ எனது அடிமையின் மகன். அதனால் என்னை உனது தோளில் ஏற்றிச் சென்று உலகம் முழுவதையும் காட்டு" என்றார். கருடன் மறுக்காது அவளை ஏற்றிச் சென்று உலகை வலம் வந்தான். இரவானதும் தாயிடம் வந்த கருடன், "அம்மா, நீ எனது பெரிய தாயாருக்கு அடிமையா?. இது எப்படி நிகழ்ந்தது" என்று கேட்டார்.

## 1. கத்ருவின் சூழ்ச்சி

**அ**ன்று நடந்தவற்றை மகனான கருடனுக்குச் சொன்னாள், “மகனே, அழகான வெண்நிறக் குதிரைக்கு வால் மட்டும் கறுப்பாக இருந்தது. அது திருஷ்டி கழிந்தது போல இருக்கிறது” என்று கத்துரு கேட்டாள். நான் எதுவும் பேசவில்லை. அவள் விடாப்பபடியாகக் கேட்டமையால், “அதன் வாலும் வெள்ளை நிறமாகத் தான் இருக்கிறது” என்று நினைத்தேன். அது இரவு நேரம். அதனால் அவளுக்குத் தெரியவில்லை என்று நினைத்து விடிந்ததும் சொல்கிறேன்” என்றேன்.

**அ**தைக்கேட்ட அவள், “நான் சொன்னபடி இருந்தால், நீ எனது அடிமை. நீ கூறிய படி இருந்தால் நீ இட்ட பணிகளை நான் செய்வேன்” என்றாள். அதற்கு நான் சம்மதித்தேன்.

**க**த்துரு தனது பிள்ளைகளை உச்சை சிரசின் வாலை அதைக் துன்புறுத்தாமல் சுற்றிக் கொள்ள வேண்டும்” என்று கேட்டிருக்கிறாள். அதற்குக் கார்க்கோடன் சம்மதித்திருக்கிறான். காலையில் நான் நீராடச் சென்றபோது அக் குதிரையின் வால் கறுப்பாக இருந்தது. இது கத்துருவின் சூழ்ச்சி என்று பின்புதான் அறிந்து கொண்டேன். அதை அறியுமுன்பே நான் அடிமையாகிவிட்டேன்.

**ம**றுநாள் கருடன் கத்துருவிடம் என்று, “எனது தாயார் உங்களின் அடிமைத்தனத்திலிருந்து மீள நான் என்ன செய்ய வேண்டும்” என்று கேட்டார்.

“**இ**ந்திரலோகத்தில், இந்திரனது கடுமையான பாதுகாப்போடு வைக்கப்பட்டிருக்கும் அமுதகலசத்தை எடுத்து வந்து என்னிடம் தந்தால் உனது தாயின் அடிமைத்தனம் நீங்கும்” என்றாள் கத்துரு.

**க**ருடன் தாயிடம் வந்து நடந்தவற்றைக் கூறித் தாயை வணங்கி ஆசிபெற்றுக் கொண்டு இந்திரலோகத்திற்குப் புறப்பட்டார்.

## 2. அமுதம் கொண்டு வந்த சுபர்ணன்

**அ**முத கலசத்தை எடுப்பதற்காகக் கருடன் புறப்பட்ட போது அவரது தந்தை சொன்ன சொற்கள் ஞாபகத்திற்கு வந்தது. “மகனே, பெரும் பெருமைவாய்ந்த செயலிலீடுபடுவதற்காகப் புறப்படுகிறாய் உனது செயல் உனது தாயின் விடுதலைக்கானது மட்டுமல்ல எனது அறுபதினாயிரம் புதல்வர்களது சபதமுமாகும். இந்திரனின் திமிரை அடக்கி அவனை அடிபணிய வைப்பேன் என்று கூறித்தான் இந்திரனைப் பதவியில் இருந்து இறக்க யாகம் செய்த

புதல்வர்களின் மனதை மாற்றினேன். அதனால் இந்திரனை வென்று அமுதகலசத்தை நீ கட்டாயம் கைப்பற்றுவாய். அமுதகலசம் இந்திரனது கடும்பாதுகாப்பில் உள்ளது. அதை யாராவது அபகரித்துவிடுவார்கள் என்று இந்திரன் எந்நாளும் பயப்படுகிறான். அதனால் அதற்கு எட்டுக் கொடிய சர்ப்பங்களைப் பாதுகாப்பாக நியமித்துள்ளான். அவை மிக மிகக் கொடியவை. நஞ்சையும், தீயையும் உமிழ்பவை. அமுதம் வைத்திருக்கும் பொக்கிச அறை எட்டு முனை கொண்டது. இருபக்கமும் கூர்மையான வாள் போன்ற ஒரு கருவி சுழன்று கொண்டிருக்கும். இருந்தபோதும் அதற்குக் காவலாக உள்ள அனைத்தையும் தாக்கி அழிக்கும் திறன் உனக்கு இருக்கிறது சென்று வா" என்று வாழ்த்தினார்.



**அ**மராவதிக்குச் சென்ற கருடன் காவலுக்கு நின்ற சர்ப்பங்களைக் கொத்திக் கிழித்துவிட்டு அமுதகலசத்தை எடுத்து வரும்போது தேவர்கள் ஒன்றுகூடி நின்று பலமா எதிர்த்தனர். இந்திரன் தனது வஜ்ராயுதத்தை ஏவ கருடன் அதற்கு மதிப்புக் கொடுத்து தனது இறகுகள் இரண்டைத் தனது உடலில் இருந்து உகுத்தான். வஜ்யுராதயம் செயலிழந்தது. அதைக் கண்டு திகைத்த இந்திரன் கருடனை எதிர்க்காது பணிந்து, 'சுபர்ணன்' என்ற நாமத்தைக் கருடனுக்குச் சூடினான். அப்போது அங்கு வந்த மகாவிஷ்ணு கருடனது வீரத்தைப் பாராட்டி, "உனக்கொரு வரம் தருகிறேன் கேள்" என்றார்.

**அ**தைக்கேட்ட கருடன் கோபம் கொண்டு, "நீர் ஏன் எனக்கு வரம் கொடுக்க வேண்டும். போரில் வென்ற நான் வேண்டுமானால் உமக்கு வரம் தருகிறேன்" என்று கர்வத்துடன் கருடன் சொன்னான்.

"**இ**தைத் தான் நான் எதிர்பார்த்தேன்" என்று மனதுள் நினைத்த மகாவிஷ்ணு, "நீ, நான் நினைத்த நேரமெல்லாம் வந்து எனது வாகனமாகச் செயற்படவேண்டும்" என்று கேட்டார். கருடன் அதற்குச் சம்மதித்தான். பின்பு "அமுத கலசத்தை எனது பெரியதாயாருக்குக் கொடுத்து எனது தாயாரை விடுவித்தபின் வருகிறேன். அத்துடன் தங்கள் கொடியின் இலட்சனையாக இருக்க விரும்புகிறேன்" என்று கேட்டான். கருடன் மகாவிஷ்ணு அவனுக்கு அந்த வரத்தையளித்தார்.

**தா**யிடம் வந்த கருடன் தர்ப்பைப் புற்களைப் பரப்பி அதில் அமுத கலசத்தை வைத்தார், தரையில் வைத்தால் அமிர்தம் கெட்டுவிடும். அப்போது அங்கே வந்த கத்ரு கருடனிடமிருந்து அமிர்த கலசத்தைப் பெற்றுக் கொண்டு கருடனது தாயாரை விடுதலை செய்தாள்.

**அ**முதகலசத்தைப் பெற்ற கத்துரு நாகங்களை அமுதம் உண்ணவருமாறு அழைத்தாள். நாகங்கள் ஆயிரக்கணக்கில் வந்தன. அதைக்கண்ட கருடன் தனது செட்டையைப் பலமாக அடிக்க அமிர்த கலசம் சரிந்து தர்ப்பைப் புல்லை நனைத்தது. தர்ப்பைப் புல்லில் இருந்த அமிர்தத்தை நாகங்கள் குடித்தபோது அவற்றின் நாக்கு வெட்டுண்டு இரத்தம் வந்தது. அதனால் அமிர்தம் சிவப்பாக மாறியது.

**அ**தோடு கருடனின் ஆத்திரம் அடங்கவில்லை. மூன்று முறை பாதாள உலகம் சென்று நாகங்களின் வம்சத்தைக் கூட்டம் கூட்டமாக அழித்தார். நான்காவது முறை கருடன் பாதாளலோகம் சென்றபோது, ஆதிசேசன் அவர் முன் வந்து பணிந்து வணங்கி, "நாகங்களை அழிக்கவேண்டாம்" என்று இரந்தார். அதன்பின் கருடனை மகிழ்விக்க ஆதிசேசன் தினம் ஒரு நாகத்தை அனுப்பியதாக 'நாகாந்தம்' என்ற நூல் கூறுகிறது.



**க**ருடனின் சகோதரனான அருணன் கருடனிடம் வந்து, "தம்பி, ஒருவர் செய்த குற்றத்திற்காக அவரது குலத்தையே அழிப்பது தர்மமாகாது. சூரியனது தேரில் ஒரு மாதம் ஒரு நாகம் சாட்டையாக இருக்கும் அதற்கு மேல் அதனால் அங்கிருக்க முடியாது. ஏனென்றால் சூரியனது வெப்பத்தை அது ஒரு மாதத்திற்கு மேல் தாங்கமாட்டாது. சித்திரைமாதம் தொடங்கி பங்குனி வரை முறையே வாசுகி, வீரன், சுக்ஷன், சாகன், ஏலகபுத்திரன், சங்கபாலன், தனஞ்ஜயன், ஜாரவன், மகாபத்மன், கார்கோடன், ஆம்பளன், அஸ்வதான் ஆகிய நாகங்கள் சாட்டையாக இருப்பர். அதனால் அவர்களை விட்டுவிடு. இவர்கள் தங்கள் வலிமையால் சூரியனைச் சுமக்கின்றனர்" என்றபின் கருடன் நாகங்களை அழிப்பதை விட்டுவிட்டான்.

**சி**வபெருமான் பத்மன், சங்கன், குளிகன் ஆகியோரைத் தாக்காதிருக்கும்படி கருடனின் தந்தையிடம் வேண்ட, அவர் தனது மகனுக்கு அவர்களைக் கொல்ல வேண்டாமெனக் கூற அதைக் கருடன் ஏற்றுக் கொண்டார்.



**அ**தைவிட மகாவிஷ்ணு கருடனிடம் வந்து, "கருடனே, உன்மீது ஏறி நான் பயணம் செய்வது போல ஆதிசேசன் மீது படுத்துறங்குவேன். அப்படியிருக்கையில் எனது படுக்கையாகத் திகழும் ஆதிசேசனுக்குச் செய்யும் தீங்கு என்னையும் சாரும். ஆகையால் அவனைக்

கொடுமைப்படுத்தாதே" என்று வேண்டக் கருடன் அதை ஏற்றுக்கொண்டான்.

**க**ருடனின் இடது கரத்தில் கங்கணம் உள்ளது. வலது கரத்தில் சனியின் புதல்வனான குளிகன் இருக்கிறார்.

**கா**ர்கோடன் நளமகாராசாவைத் தீண்டிக் கறுப்பு நிறமாக்கியவன். கருடனின் தாயார் அடிமையாகக் காரணமாக இருந்தவன். அதனால் அவனது வாலைப் பார்த்தால் தோசம் உண்டாகும். அதிலிருந்து விடுபடக் கருடனைப் பார்த்து வணங்கவேண்டும்.

**ம**ன்னார்க் குடியில் கருடனின் தாயார் விந்தை கபர்ணீ என்ற நாமத்துடன் காட்சி தருகிறார். தாயாரின் மீது அளவு கடந்த பாசத்தை வைத்திருக்கும் கருடன், இவ்வாலயத்தில் வீற்றிருக்கும் தாயாரை வணங்குவோர்க்கு அதிக பலன் கொடுக்கிறான்.

**ப**த்மபுராணம் கருடனின் அருள் எட்டுவிதமான சக்திகளைக் கொடுக்கும் என்கிறது.

**ஸ்ரீ** வில்லிபுத்தூரில் கர்ப்பக் கிரகத்தில் இருக்கும் வடபத்திர சுவாமிக்குச் சமமாக கருடன் அமர்ந்திருந்து அருள்பாலிக்கிறான்.

**நீ**ளமான, வலுவுடைய வாசுகிதான் பாற்கடலைக் கடைய உதவியவள். அவள் கருடனுக்குப் பூநூலாக அணியப்பட்டிருக்கிறாள்.

## 3. கஜேந்திர மோட்சம்

**ஒ**ரு சமயம் சிவபெருமான் சேச சாமியைக் காண்பதற்காக வந்தார். சிவனின் தலையின் மீது இருந்த நாகம், கருடா சௌக்கியமாக இருக்கிறாயா?" என்று கேட்க, "அவரவர் இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால் சௌக்கியமாக இருப்பர்" என்று கருடன் சொன்னதாக ஒரு கதை உண்டு.



**க**ருடனும், ஆதிசேடனுக்கும் இடையில் யார் தம்முள் பெரியவர் என்ற வாக்குவாதம் எழுந்து அது பெரும் யுத்தமாக மாறியது. இதை அறிந்த பரந்தாமன் அவர்களைச் சமாதானப்படுத்தி ஆதிசேடனைப் பாதாளத்திற்கும், கருடனை வானவெளிக்கும் சென்று வசிக்குமாறு கூறினார்.

**வை**குண்டத்தில் மகாவிஷ்ணு அனந்தனை ஆசனமாகக் கொண்டு அமர்ந்திருக்கிறார். வடகிழக்கில் விஸ்வசேனர் தேவியுடன்,

கையில் பிரம்புடன் காட்சி தருகிறார். கருடன், வைகுண்டவாசனான மகாவிஷ்ணுக்கு, எதிரில் ‘முகுஸ்தபத்ம’ காய் தாஞ்சலியுடன் காட்சி தருகிறார்.

**சு**வாமியின் முகம் பார்க்கும் கண்ணாடி வைநதேவன் என்று ஸ்ரீநிஜமான்ந்த வேதாந்த தேசிகர் போற்றியுள்ளார். தேவருலம் போலப் பூவுலகிலுள்ள கோவில்களிலும் கருடனை அமைத்து வணங்குகின்றனர்.

**தி**ருப்பாற்கடலைக் கடைந்தபோது அதில் தோன்றிய கௌத்துவ மணியில் நஞ்சு கலந்திருந்தது. அது கருடனின் பார்வையால் அகன்று புனிதமானது என்று ஸ்ரீ தேசிகன் கூறியுள்ளார்.

**கி**ருஷ்ண அவதாரத்தில் நாராயணன், நரகாசுரனோடு போரிடச் சென்றபோது, நாராயணன் கருடனை நினைக்கக் கருடன் உடனே வந்து அவரையும் சத்தியபாமாவையும் ஏற்றிச் சென்று பிராக்யோதிடபுரத்தில் விட்டார்.

**பி**ராக்யோதிட புரமெங்கும் கூர்மையான சிறுகத்திகள் பதிக்கப்பட்டிருந்தன. ஒரு திசையில் நெருப்பு சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்தது. ஒரு புறம் எவரையும் நெருங்கவிடாது கடல் கொந்தளித்துக் கொண்டிருந்தது. மலைகள் வளர்ந்து ஆகாயத்தை முட்டிக் கொண்டிருந்தன. மறுபக்கம் வாயுபகவான் நின்று சாதாரண காற்றைப் புயலாக மாற்றிக் கொண்டிருந்தார். அதனால் கண்ணபிரான் ஆகாயமார்க்கமாகக் கருடனில் பறந்து வந்து சுதர்சனத்தை ஏவினார். அதனால் சுடர்விட்டுப் பெருந்தீயாக எரிந்த அக்கினி அணைந்து இருந்த இடம் தெரியாமற் சென்றது. மலைகள் சிதறிப் பொடிப்பொடியாகின. புயற்காற்று தென்றலாக மாறியது. நரகாசுரனோடு போரிட்ட பரந்தாமன் அவனைக் கொன்றார்.

**அ**தைக்கண்ட நரகாசுரனின் மகன் பகதத்தன், தனது தந்தை தேவலோகம் சென்று கவர்ந்து வந்த வருணனின் குடையையும், மந்திர பர்வதத்தின் சிசரத்தையும், அதிதிதேவியின் அமுத குண்டலங்களையும் பரந்தாமனிடம் ஒப்படைந்து அவரது பாதங்களைத் தொட்டு வணங்கினான். அதனால் மகிழ்ந்த பரந்தாமன் அவனுக்கு முடிசூட்டி விட்டுக் கருடனில் ஏறித் தேவருலகம் சென்றார்.

**இ**ந்திரனது பூந்தோட்டத்தில் மட்டும் மலர்ந்து மணம் வீசிய பாரிஜாத மரத்தை வாசுதேவர் வேரோடு பெயர்த்தெடுத்து கருடனின் தோளின் மேல் வைத்தார். அதைக் கண்ட இலட்சக்கணக்கான தேவர்களும் இந்திரனும் கருடனோடு போர் செய்தான். வருணன் தனது ஆயுதமான பாசத்தை ஏவ, கருடன் தனது கூரிய சொண்டினால் அதைத் துண்டித்தார். இந்திரனது வாகனமான ஐராவதம் என்ற பலம்மிக்க யானை மூர்க்கத்துடன் கருடனை எதிர்க்க கருடன் தனது சொண்டாலும், நகங்களாலும் அந்த யானையைக் கடுமையாகத் தாக்கினான். அதனால்

அந்த யானை பெருங்காயங்களுடன் எழும்பமுடியாது தரையில் படுத்திருந்தது. கருடன் பாரிஜாத மரத்தைச் சுமந்து கொண்டு வந்து துவாரகையில் உள்ள கண்ணனின் பூந்தோட்டத்தில் நட்டான்.



இந்திராஜசிம்மன் என்ற அரசன் விஷ்ணு பக்தன் அவன் தியானத்தில் ஆழ்ந்தால் அருகில் நடப்பவை எதுவும் தெரியாது. அவன் விஷ்ணுவோடு இரண்டறக் கலந்துவிடுவான். அன்று துர்வாசக முனிவர் அவனைக் காண்பதற்காக வந்து அவனின் அருகில் நின்றார். அவர் பலமுறை அழைத்த போதும் அவனது தியானம் கலையவில்லை. அதனால் கோபம் கொண்ட முனிவர், "என்னை மதிக்காது நீ மதங்கொண்ட யானையாகக் கடவாய்" என்று சபித்தார். அதனால் மன்னன் மனம் வருந்தினான். உண்மையை உணர்ந்த முனிவர், "நீ யானையாக அலையும்போது ஒருநாள் ஒரு குளத்தில் குளிப்பாய். அப்போது உனது காலை ஒரு முதலை கௌவும். அப்போது மகாவிஷ்ணு எழுந்தருளி உன்னைக் காப்பார். அன்றே உனக்கு முத்தியும் கிடைக்கும்" என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

சில நாட்களின் பின் யானை குளத்தில் குளித்த போது முதலை ஒன்று வந்து அதன் காலைக் கௌவ யானை, "ஆதி மூலமே என்னைக் காப்பாற்று" என்று அலற, மகாவிஷ்ணு வந்து காப்பாற்றித் தன்னோடு அழைத்துச் சென்றார்.

கூகு என்ற அரக்கன், புஷ்கரணி என்ற குளத்தில் நீரோடுவோரின் காலைப் பிடித்து இழுத்துச் சென்று உண்டுவிடுவான். ஒருநாள் அகத்திய முனிவர் புஷ்கரணியில் நீராடும் போது அந்த அரக்கன் அகத்தியரின் காலைப் பிடித்து இழுக்க அவர் கோபங்கொண்டு, "நீருக்குள் முதலையாகக் கிட" என்று சாப்பிட்டார். சாமத்திற்குப் பயந்த அசுரன் தனக்குச் சாபவிமோசனம் தரும்படி கெஞ்சினான். அதனால் மனமிரங்கிய அகத்தியர், "நீ, கஜேந்திரன் என்ற யானை குளிக்கும் போது அதன் காலைப் பற்றி இழுப்பாய். அப்போது யானை, "ஆதி மூலமே என்னைக் காப்பாற்று" என்று பக்தியுடன் ஓலமிடும். அப்போது நாராயண மூர்த்தி வந்து தனது சக்கரத்தை ஏவி உன்னைக் கொன்றதும், உனது சாபம் நீங்கும்" என்று சொல்லிவிட்டு முனிவர் சென்றார்.

கும்பகோணத்திற்குச் செல்லும் பாதையில் உள்ள கபில தலத்தில் பங்குனி மாதம் இந்த யானை மோட்சமடைந்த நாள். இதை அங்கு வெகுவிமர்சையாகக் கொண்டாடுகின்றனர். கபில தீர்த்தம், கஜேந்திரப் புஷ்கரணி எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. யானைக்கு வரம் கொடுத்த பெருமானை, 'கஜேந்திர வரதர்' என்று நாமம் சூட்டி வழிபடுகின்றனர்.

**4. வைரமுடிச் சேவை**



**பி**ரகலாதனின் மகன் விரோசனன் ஒருநாள் பரந்தாமனின் வைர முடியைக் களவெடுத்துக் கொண்டு பாதாளத்திற்குச் சென்றுவிட்டான். பெருமாள் அதைத் தெரிந்தும் தெரியாதவர்போல யோக நித்திரையில் ஆழ்ந்திருந்தார் அவர் அப்போது கருடனை நினைத்தார். உடனே அங்கு வந்த விடயத்தை அறிந்து பாதாளத்திற்குச் சென்று விரோசனனைக் கொன்றுவிட்டு வைரமுடியை எடுத்து வந்து பெருமாளுக்குச் சூட்டி அழகு பார்த்தார். அந்தப் பிரமாண்டமான கிரீடம் அவருக்குப் பொருந்தாததைக் கண்டு ஆச்சரியப்பட்டார். அது பெருமானின் விளையாட்டு என்பதைப் புரிந்து கொண்டதும் அவருக்குச் சிரிப்பு வந்தது.



**பா**தாளத்தில் இராமபிரானுக்கும் அரக்கனான மால்யவானுக்கும் நடந்த பெரும் யுத்தத்தின் போது கருடன் வானத்தில் பறந்து தனது இறக்கைகளைப் பலமாக வீச அரக்கக் கூட்டம் சிதறிப் பஞ்சுபோல வானத்தில் பறந்தது. பெருமாளுக்கு வைஜந்தி என்ற கொடியாக இருந்து அப்போரை வென்றமையால் கருடனுக்கு, 'ஜயன்' என்ற திருப்பெயர் உண்டானது அன்று கருடன் தனது இறக்கைகளால் வீசிய காற்று சம்வர்த்தம், ஆவர்த்தம், புஷ்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவர்ணம் என்ற ஏழுவகைப் பிரளய மேகங்கள் ஒன்று கூடியது போல இருந்தது என்று சொல்வர். ஸ்ரீமத் நாராயணன் வீற்றிருக்கும் திருமலையில் தான் வீற்றிருக்கக் கொண்டு வந்த மலையைக் கருட கிரி என்பர். இது ஏழு மலைகளில் நான்காவது மலையாகும்.

**5. நாச்சியார் கோவில் கல் கருடன்**

**ஆ**கம முறைப்படி நேர்த்தியாக அச்சிற்பி, சிற்பங்களை வடிப்பவர். அதனால் எல்லாக் கோவில் காரரும் அவரைக் கொண்டே சிற்பங்களைச் செய்து வந்தனர். அவர் மகாவிஷ்ணுவைச் சிலையாக வடித்தால் உயிர் உள்ள மகாவிஷ்ணு போலவே காட்சியளிப்பார். திடீரென்று அவருக்குக் கருடனின் சிலையைச் செய்ய வேண்டும் என்ற விருப்பம் மனதில் தோன்றியது.

அவர் மகாவிஷ்ணுவையும், கருடனையும் வணங்கிவிட்டுக் கருடனின் சிலையைச் செதுக்கத் தொடங்கினார். அவரின் மனதில் கருடன் குடிகொண்டிருந்தமையால் சிலை தந்தரூபாமாக அமைந்தது. சிலையைப் பார்த்த சிற்பிக்கு முழுமையான மனநிறைவு உண்டானது. பலரும் பார்த்து மெய்மறந்து நின்றனர். இறுதியாகக் கருடனின் சிலையில் ஏதாவது குறை இருக்கிறதா என்று பார்த்தார். அவரின் மனம் பூரித்தது. அதன்பின் அவர் அச்சிலைக்குப் பிராணப் பிரதிஷ்டை (உயிரூட்டல்) செய்தார். உடனே கருடனின் சிலை உயிர்த்து வானில் பறக்க ஆரம்பித்தது. அதைக்கண்டு அதிசயித்தை சிற்பி, தன்னையறியாது தனது கையில் இருந்த உளியைக் கருடன் மீது எறிந்தார். அது கருடனின் மூக்கைத் தாக்கக் கருடன் கீழே இறங்கியது. கருடன் இறங்கிய இடம் திருநாரையூரில் உள்ள நாச்சியார் கோவிலாகும் அப்போது கருடவாகனத்தில் அங்கு வந்த மகாவிஷ்ணு சிற்பியை ஆசீர்வதித்து முத்தியளித்தார்.

இத்தலத்தில் கல்லாலான கருடனைக் கருவறையில் இருந்து தூக்கிவருவார்கள். கருவறையை விட்டு வந்ததும் அதன் எடை படிப்படியாக அதிகரிக்கும். நான்கு பேர் காவிவந்த கல் கருடனை இறுதியில் அறுபத்து நான்கு பேர் காவுவர். அந்தளவிற்கு அதன் எடை அதிகரித்திருக்கும். பின் கருவறை வாசலில் வந்ததும் அந்த எடை நான்கு பேர் காவக்கூடியளவிற்கு வந்துவிடும். அதனால் நாச்சியார் கோவில் கருட ஊர்வலத்தைக்கான பல ஊர்களில் இருந்தும் மக்கள் வருவார்கள்.

ஸ்ரீ சுவாமி தேசிகர் காஞ்சிபுரத்திற்குச் சென்றபோது அவரின் மகிமைகளை அறிந்த ஒரு விவசாயி வந்து அவரது பாதங்களைத் தொட்டு வணங்கிவிட்டு, “சுவாமி, எனது எதிரி வயல்கரையில் நிரம்பி நிக்கின்ற குளத்து நீரை அணையை உடைத்துச் செல்லுமாறு மாந்திரீகம் செய்கிறான். குளத்துநீர் பெருகி வந்தால் அறுவடைக்குத் தயாராக இருக்கும் எனது நெல் வயல் பாழாகிவிடும். அப்படி அவன் செய்தானேயானால் அடுத்த அறுவடைக்காலம் வரை எனது குடும்பம் உணவில்லாமல் தவிக்கும். அதனால் அவ்வாறு நிகழா வண்ணம் காப்பாற்றுங்கள்” என்று அழுதான்.

கருட நதிக்கரையில் உள்ள ஔசதாசல மலையடி வாரத்தில் ஆச்சிரமமைத்துச் சீடர்களுடன் மகாவிஷ்ணுவை நோக்கித் தவம் செய்த முனிவர் கருட பகவானோடு அடிக்கடி உறவாடுபவர். அவர் ஸ்ரீ கருட பஞ்சாசத், தண்டகம் என்னும் புகழ் பெற்ற இரண்டு பக்தி நூல்களை எழுதியவர்.

குளத்து நீர் பெரும் ஆறுபோல் பாய்ந்து வந்தது. முனிவர் அதைப் பார்த்துவிட்டுக் கருடனைத் தியானித்துவிட்டு தனது கால் பெருவிரலால் வாய்க்காலின் குறுக்கே ஒரு கோட்டை வரைந்தார். பாய்ந்து வந்த குளத்து நீர் அப்படியே சில கணங்கள் நின்றுவிட்டுத் திரும்பவும் குளத்திற்குச் சென்றது. அனைவரும் பிரமித்தனர். விவசாயி நன்றிப் பெருக்கோடு முனிவரை வணங்கியபடி நின்றான்.

**கு**ளத்து நீர் திரும்பிக் குளத்திற்கு வந்தமையால் ஆத்திரம் கொண்ட மாந்திரீகன் கடுங்கோபங் கொண்டு ஆயிரக்கணக்கான பாம்புகளை அனுப்பினான். முனிவர் அதற்கும் ஒரு கோடு கீறினார். பாம்புகள் வந்த வேகத்தில் திரும்பிச் சென்றன. அப்போது கருடன் ஆகாயத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்தான்.

**பா**ம்புகள் திரும்பிச் சென்றதும் மாந்திரீகன் சங்கன் என்ற கொடிய நாகத்தை அனுப்பினான். அது நெருப்பை உமிழ்ந்து கொண்டு முனிவரை நோக்கி வந்தது. முனிவர் மகாவிஷ்ணுவைத் தியானித்து கருடமந்திரத்தை ஜெபித்தார். உடனே பிரமாண்டமான உருவில் வானில் இருந்து பறந்து வந்த கருடன், கடுங்கோபத்துடன் சீறிக் கொண்டு முனிவரைக் கொத்த வந்த அந்தக் கொடிய நாகத்தைத் தூக்கிச் சென்றான். அதன்பின் மந்திரவாதி தான் அனுப்பிய நாகத்தை மீட்டுத் தருமாறு முனிவரை வேண்ட முனிவர் அவன் மீது இரக்கப்பட்டு கருட தாண்டவத்தை இசையுடன் பாட கருடன் மகிழ்ந்து அந்த நாகத்தை கீழே போட்டான்.

**தே**வர்களுக்கும், அசுரர்களுக்கும் இடையே பெரும் போரர் நடைபெற்றது. அதில் தேவர்களின் பக்கம் நின்று பரந்தாமன் போரிட்டார். அசுரர்கள் தோற்று ஓடிவிட்டனர். பரந்தாமனுக்குத் தாகமெடுத்தது. கருடனையும் ஆதிசேடனையும் அழைத்துக் குடிப்பதற்கு நீர் கொண்டு வருமாறு சொன்னார். இருவரும் புறப்பட்டுச் சென்றனர். ஆதிசேசன் பூமியைத் தோண்ட அதிலிருந்து நீர் பெருகியது அந்த நீரை ஆதிசேசன் கொண்டு வந்து பரந்தாமனுக்குக் கொடுக்க அவர் அதைக் குடித்துத் தனது தாகத்தைத் தீர்த்துக் கொண்டார். ஆதிசேசன் தோண்டிய தீர்த்தமே சேச தீர்த்தமாகும்.

**வை**குண்டத்தில் உள்ள விரஜா தீர்த்தத்தையே பரந்தாமன் விரும்பிக் குடிப்பார். அதனால் கருடன் வைகுந்தத்தை நோக்கிப் பறந்தான். வழியில் நாரதர் வந்து, “கருடா, அதோ பார் அந்த ரிசியின் கமண்டலத்தில் இருப்பது விரஜா தீர்த்தம் தான். அதை எடுத்துச் செல்” என்றார். கருடன் உடனே நாரதர் சொற்படி கீழே இறங்கி அக்கமண்டலத்தைத் சாய்த்தார். அப்போது கமண்டலத்தில் இருந்த நீர் பூமியில் சிதறிப்பெரும் ஆறாக உருக்கொண்டு கரைபுரண்டோடியது. அதைக் கண்ட ரிஷிக்குக் கடுங்கோபம் வந்தது. வைகுண்டத்தில் இருந்து கொண்டு வந்த நீரைத் தனது அனுமதியின்றி கவர்ந்தமையால் கோபம் வந்து சபிக்க நினைத்தபோது நாரதர் வந்து ரிஷிக்கு நடந்தவற்றை விபரிக்கத் நான் கொண்டு வந்த நீரைப் பரந்தாமன் குடிக்கப் போகிறார். அதைவிடப் பாக்கியம் எதுவுமில்லை” என்று நினைத்துக் கருட சுலோகத்தைச் சொன்னார்.

**உ**டனே கருடன் அவரிடம் வந்து, “ரிஷியே, பரந்தாமன் தாகத்தால் அவதிப்பட்டதால் விரைவாக நீர் அவருக்குக் கிடைக்கட்டும் என்று தான் கமண்டலத்தைக் கவிழ்த்தேன் பிழையைப் பொறுத்தருளும்” என்றார்.

**அ**ப்பொழுது ரிஷியும் கருடனும் ஆறாக ஓடும் நீரைப் பார்த்தனர். கருடன் மனவருத்தத்துடன் ரிஷியைப் பார்த்தான்.

"**க**ருடா, ஆத்திரத்தில் உன்னைச் சபிக்க முடியாததால் மனதுள் நீர் குடிப்பதற்கு உதவாது கலங்கட்டும் என்று சபித்துவிட்டேன். அது ஓடும்போது கலங்கியிருந்தாலும் குடிப்பதற்காகக் கையில் எடுத்தால் புனித தீர்த்தமாய் மாறிவிடும்" என்றார். அதைக்கேட்ட கருடன் மனம் மகிழ்ந்தான்.

**க**ருடன் மகிழ்வுடன் திரும்பி வந்தபோது பரந்தாமன், ஆதிசேசன் கொண்டு வந்த நீரைக்குடித்து விட்டு களைப்பாறியபடி இருந்தார். அதைக்கண்ட கருடன் மனம் வருந்தி, "எம்பெருமானே, நான் கொண்டுவந்த நீரையும் ஏற்றுப் பருகுதல் வேண்டும்" என வற்புறுத்தினார்.

"**க**ருடா, மனம் வருந்தாதே. தேர்த்திருவிழாவன்று இந்த நதிக்கரையில் தான் பூசைகள், ஆராதனைகள் நடைபெறும். அப்போது உன்னால் உருவாக்கப்பட்ட இந்தப் புனித நீரை நான் விருப்புடன் பருகுவேன். இதில் நீராடுபவர்கள் விஷகடிக்குள்ளாகமாட்டார்கள். திருஷ்டி கழியும், நோய் நொடிகள் யாவும் குணமாகும். முக்கியமாக வாயு சம்பந்தப்பட்ட நோய்கள் முழுமையாகக் குணமாகும். இதில் நீராடுவோர் சகல ஐஸ்வரியங்களும் பெற்று ஆரோக்கியமாக வாழ்வர்" என்று வரமளித்தார். அதைக் கருட தீர்த்தம் என்று மக்கள் பக்தியுடன் சொல்வார்கள்.

**க**ருடன் தட்டிவிட்ட கமண்டல நீர்தான் கெடிய நதியாக ஓடுகிறது. இந்த வரலாற்றைப் பிரமா தினமும் படிப்பதாகவும் மணிக்கோவை என்ற நூலில் குறிப்பு உள்ளது.

**தை**மாத அமாவாசைக்கு மறுநாள் திருநாங்கூர் கருடசேவை திருமணிமாடக் கோவிலில் நடைபெறும். அப்போது சிவபெருமான் ருத்திரதாண்டவ நடனத்தை ஆடுவார். அதை நிறுத்துவதற்காக மகாவிஷ்ணு பதினொரு சிவன்களாகக் காட்சி கொடுத்தார். பின்னர் பதினொரு சிவன்களும் ஒன்று சேர்ந்து ருத்திரன் ஆனதாகக் கூறுப்பட்டுள்ளது.

**நே**பாளத்தில் 'கருட நாகப் போர்' என்றொரு திருவிழா நடைபெறுகிறது. அப்போது கருடனின் திருவுருவத்தில் வியர்வை துளிர்த்திருக்கும். அவ் வியர்வையை ஒரு தூய துணியால் துடைத்துப்பட்டர் அதை அனுப்பிவைப்பார். விஷம் தீண்டினால் அத் துணியில் இருந்து ஒரு நூலிழையை எடுத்துக் கடிகாயத்தின் மேல் வைத்தால் விஷம் உடனே இறங்கிவிடும். இது நேபாளத்தில் செய்யப்படும் பிரசித்தி பெற்ற பண்டிகையாகும்.

**இ**ராமானுஜர் திருவனந்தபுரத்திற்கு கைணவத்தைப் போதிக்கச் சென்றபோது அதை விரும்பாத நம் பூதிரிகள் இவரால் தமது பிழைப்புக் கெட்டுவிடும் என்று நினைத்து பத்மநாவ சுவாமியைப் பிரார்த்தித்தனர். அப்போது பெருமான் தனக்கருகில் இருந்த கருடனைப் பார்த்து,

“கருடா, இராமானுஜரை அழைத்துச் சென்று திருக்குறுங்குடியில் விட்டு விட்டு வா” என்று உத்தரவிட்டார். உடனே கருடாழ்வார் அவரை அழைத்துச் சென்று திருக்குறுங்குடியில் விட்டுவிட்டு வந்தார். அதனால் அங்கு கருட சன்நதி இல்லை.

**பா**ணாசுரனின் புதல்வி உசா. பாணாசுரன் சிறந்த சிவபக்தன். மந்திரியின் மகளான சித்திரா தேவி உசாவின் தோழி. சித்திராதேவி மாயமந்திரங்களைக் கற்றுத் தேர்ந்தவள்.



**ப**ரந்தாமனின் பேரனான அனிருத்தனை உசா காதலித்தாள். இதை அறிந்த சித்திராதேவி மாயமாகச் சென்று அனிருத்தனை யாருக்கும் தெரியாது தூக்கி வந்துவிட்டாள். இதை அறிந்த பாணாசுரன், அனிருத்தனோடு கடும் சண்டை செய்து அவனை நாகாஸ்திரத்தால் கட்டிவிட்டான். இதை அறிந்த நாரதமுனி உடனே ஓடிச் சென்று அதைப் பரந்தாமனுக்குக்கூற அவர் கருடனை நினைத்தார். உடனே கருடன் அவரின் அருகே வந்தான். உடனே அதில் ஏறிப் படைகளையும் அழைத்துக் கொண்டு பாணாசுரனின் தலைநகரான சோணிதபுரத்திற்குச் சென்றார். அங்கு அசுரனுக்கும் கிருஷ்ணருக்கும் இடையே பெரும் போர் தொடங்கியது. அசுரன் மாயவேடங்கள் தாங்கிக் கடுமையாகப் போரிட்டான். கருடன் தனது செட்டைகளைப் பலமாக அடிக்க அக்காற்றில் அசுரப்படைகள் நிலைகுலைந்து காற்றில் பறந்தன. மாய வடிவங்கள் பலவற்றை எடுத்த அசுரனால் அதிகநேரம் தாக்குப் பிடிக்க முடியவில்லை. கருடன் அசுரனது மாயவேடங்களைக் கலைக்கக் கிருஷ்ணர் அவனைக் கொன்றார். அதன் பின் கருடன் அனிருத்தனையும் உசாவையும் தனது தோளில் ஏற்றிக் கொண்டு துவாரகைக்கு வந்தார்.

**க**ருடாழ்வாருக்கு நரசிம்ம அவதாரத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை வெகு நாட்களாக அவரது மனதில் இருந்தது. அதைப் பார்ப்பதற்காக அவர் அகோபியத்தில் கடும் தவம் புரிந்தார். அந்தத் தவத்தால் மகிழ்ந்த ஸ்ரீமத் நாராயணன் நரசிங்கமாகத் தூணில் இருந்து வெளிப்பட்டுத் தனது கூரிய நகங்களால் இரணியனைக் கிழித்துக் கொன்ற காட்சியைக் கருடனுக்குக் காட்டினார். இவ்வாறு தான் எடுத்த ஒன்பது திருக்கோலங்களையும் கருடனுக்குக் காட்டினார். கருடன் தவம் செய்தமையால் அம்மலைக்குக் கருடமலை என்ற பெயர் ஏற்பட்டது.

**இ**தை நவநரசிம்ம சேத்திரங்கள் என்பர் (தலங்கள்) அகோபில, வராக, பாவந, காரஞ்ச, சக்ரவட, பார்க்கம், ஜ்வாவா, மாலோவா ஆகிய தலங்களில் யோகானந்த நரசிம்ம மூர்த்திகள் உள்ளனர். ‘அகோ’ என்றால் சிம்மம். பிலம என்றால் குகை இரண்டும் இணைந்து அகோபிலமாயிற்று. இங்கு மலையடிவாரத்தில் ஒரு கோவில் இருக்கிறது. திருப்மெய்யம் என்ற

தலத்தில் தான் கருடன் அமுதத்தை எடுத்துவரத் தனக்குப் பலம் தர வேண்டும் என்று வேண்டித் தவம் செய்தான். அப்போது சத்தியகிரி நாதன் கருடன் முன்தோன்றிச் சக்தி பெருக வரமளித்தார்.

**பெ**ருமாள் கோவில்கள் அனைத்திலும் கருட சந்நிதிகள் உண்டு. கருட புராணத்தைப் படித்த பின்பு ஏதாவது ஒரு பெருமாள் கோவிலுக்குச் சென்று கருடனை வணங்கினால் கருடன் கேட்ட வரங்களை அளிப்பான். அத்துடன் கருடபுராணத்தைக் கேட்டவர்களும், படித்தவர்களும், பிரசாரம் செய்பவர்களும் எல்லா நலன்களும் பெற்றுப் பூமியில் சகல வசதிகளோடும் வாழ்ந்து பின் சொர்க்கத்தை அடைந்து மிக்க மகிழ்வுடன் இருப்பர்.

**முற்றும்**